ஸ்ரீலங்கா
சாகித்திய மண்டலத்தினால்
வெளியிடப்படும்

# கலைப்பூங்கா

அரையாட்டைச்
சஞ்சிகை

1961
மலர் 1
இதழ் 1

## இதனுள்

ஈழமும் தமிழ் இலக்கணமும் — **சு. வித்தியானந்தன்** ★ தமிழ் நாகரிகமும் பௌத்த சமயமும் — **வண. ஹிஸ்ஸல்லே தருமரத்தின தேரர்** ★ பதாயிகு கலம்பகம் — **ம. மு. உவைஸ்** ★ பரந்த தமிழகம் — **ஆ. வேலுப்பிள்ளை** ★ வெருகலம்பதி : செவிவழிச் செய்தி — **க. கணபதிப்பிள்ளை** ★ திருக்குறளும் கிரேக்க ஒழுக்க இயலும் — **வண. தனிநாயக அடிகளார்** ★ வேறு பல கட்டுரைகளும் கவிதைகளும் சிறு கதைகளும் அடங்கி உள்ளன.

ரூபா ஒன்று.

தெணியான்

க. நடேசன்
பொலிகண்டி
18.11.61

# கலைப்பூங்கா

## அரையாட்டை வெளியீடு

மலர் 1 - இதழ் 1

ஆசிரியர் :
க. கணபதிப்பிள்ளை
சு. நடேசபிள்ளை
ம. மு. உவைஸ்

ஸ்ரீ லங்கா சாகித்திய மண்டலம்
கொழும்பு

# உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| 1 | ஆசிரியர் தலையங்கம் | |
| 2 | சோலைவரி—மொழிபெயர்ப்பு : சு. நடேச பிள்ளை | 2 |
| 3 | சமவுடைமைவாதமும் பழந்தமிழ் இலக்கியங்களும் —கி. லக்ஷ்மணன் | 3 |
| 4 | நமது கலை மரபு—சோ. நடராசன் | 7 |
| 5 | உரையும் விமரிசனமும்—க. கைலாசபதி | 15 |
| 6 | தமிழ் நாகரிகமும் பௌத்த சமயமும் —வண. ஹிஸ்ஸல்லே தருமரத்தின தேரர் | 18 |
| 7 | அவனும் அவரும்—சி. தில்லைநாதன் | 21 |
| 8 | ஈழமும் தமிழ் இலக்கணமும் —சு. வித்தியானந்தன் | 26 |
| 9 | தீவெட்டிக் கள்ளர்—குழூஉ இறையனார் | 32 |
| 10 | பதாயிகு கலம்பகம்—ம. முகம்மது உவைஸ் | 34 |
| 11 | பரந்த தமிழகம்—ஆ. வேலுப்பிள்ளை | 40 |
| 12 | வெருகலம்பதி - செவிவழிச் செய்தி —க. கணபதிப்பிள்ளை | 45 |
| 13 | விண்மீன்கள் நாணும்—வ. கோவிந்தபிள்ளை | 54 |
| 14 | கிழிந்த அங்கி—''எழிலி'' | 55 |
| 15 | சம் யோன் பேசே—அ. வி. மயில்வாகனம் | 61 |
| 16 | திருக்குறளும் கிரேக்க ஒழுக்க இயலும் —வண. தனிநாயக அடிகளார் | 65 |

---

இச் சஞ்சிகையில் வெளியிடுவதற்கான கட்டுரைகளை இவ்வாறு அனுப்புக :

பொதுச் செயலாளர்,
ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலம்,
135, தர்மபால மாவத்தை,
கொழும்பு 7


ஆசிரியர் தலையங்கம்

# கலைப்பூங்கா

ஸ்ரீ லங்கா சாகித்திய மண்டலத்தின் முதலாவது தமிழ்ச் சஞ்சிகையை நாட்டு மக்கள் மத்தியில் நடமாட வைப்பதில் பெருமகிழ்ச்சி யடைகின்றோம். ஈழத்திருநாட்டில் வாழும் மக்களின் கலை, இலக்கியம், அறிவியல் முதலாய துறைகளை ஊக்கப்படுத்தி அவற்றை வளர்ப்பதையே நோக்கமாகக் கொண்டது இச்சஞ்சிகை. சாகித்திய மண்டலம் வெளியிடும் முதலாவது தமிழ்ச் சஞ்சிகை என்னும் பெருமையும் இதற்குடைத்து.

இன்று நமது நாட்டிலே பல்வேறு துறைகளில் விழிப்பும் மறுமலர்ச்சியும் ஏற்பட்டு வருகின்றன. தேசீய உணர்ச்சியானது பல ஆக்கப் பணிகளில் மக்கள் உள்ளத்தை நெறிப்படுத்தி வருகிறது. அவற்றை யெல்லாம் பிரதிபலிக்கும் வகையில் ''கலைப்பூங்கா'' அமைய வேண்டும் என்பது எமது அவா. இலக்கியத் துறையில் மட்டுமன்றி, வரலாறு, நுண்கலைகள், முதலாய பிற துறைகளிலும் வல்லுனர்கள் அடுத்துவரும் இதழ்களில் எழுதுவார்கள் என்பது எமது நம்பிக்கை.

''கலைப்பூங்கா'' ஈழநாட்டு மக்களின் கலைக்கோயிலில் ஒரு சிறு விளக்காகவும் அமையவேண்டும் என்பது எமது ஆசை. அதனை நிறைவேற்றும் வகையில் யாவரும் முன் வந்துழைப்பார்கள் என எதிர்பார்க்கின்றோம்.



# சோலைவரி

(தாகூர் கவி மஞ்சரி)

மொழி பெயர்ப்பு: **சு. நடேச பிள்ளை**

நள்ளிரவுக் குறியிடத்தே நான்றனியே சாருமெல்லை
புள்ளொலிப்ப திலைகாற்றும் புடைபெயர்வ திலைமனைகள்
எள்ளளவு மரவமிலா திருப்பனவூ ரிருமருங்கும்
துள்ளியொலி செயு மெனது சிலம்பொலிக்கே வெள்குவனே.

மாடமதி லிருந்தெமது மகிழ்நரடி கேட்குமெல்லை
கூடமதி லயர்ந்து துயில் சேவகன்றன் கூர்வாள்போல்
ஓடையதி னீருறங்கு முயர்மரத்தி னிலையுறங்கும்
மூடமதி யேனுளமே துடிக்குமலாற் றடுப்பறியேன்

எனைத்தழுவி யணைத்தருகே எந்தலைவ ரிருக்குமெல்லை
அனைத்துடலுங் குழையுமென திருகண்க ளிமைப்பயரும்
வனைத்திருளில் விளக்கணைக்கும் வளியுடுக்கள் முகில் மறைக்கும்
தனத்தொளிரு மெனதுமணி தனைமறைப்ப தறியேனே.

# சமவுடமைவாதமும் பழந்தமிழ் இலக்கியங்களும்

கி. லக்ஷ்மணன்

இன்று இலங்கையிலுள்ள செல்வம் முழுவதிலும் ஏறக்குறைய நூற்றுக்கு எழுபத்தைந்து வீதமும் நாட்டுமக்களுள் இருபத்தைந்து வீதத்தினரிடத்தில் முடங்கிக்கிடக்கின்றதெனக் கூறலாம். ஆயிரம் குடும்பங்களுக்குமேல் வாழும் சில கிராமங்களில் உள்ள நிலத்தில் கால்வாசிக்குமேல் ஒரேயொரு குடும்பத்துக்கே சொந்தமானதாக இன்று மிருக்கின்றது. நாட்டின் செல்வத்திற் பெரும் பகுதி ஒரு சிலரது கையில் அகப்பட்டிருப்பதற்கு இது நல்லதோர் உதாரணம். அரசாங்கம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்குச் சம்பளமாகக் கொடுக்கும்பணத்தை நோக்கினுலும் நிலைமை இதைப்போன்றதுதான். அரசாங்கம் கொடுக்கும் சம்பளத்தில் பெரும்பகுதியை ஒரு சிறு தொகையினரே சுவீகரித்துக் கொள்ளுகின்றனர். மாதாமாதம் ஆயிரம் ரூபாவோ அதற்குமேலோ பெறுகிறவர்களின் தொகை சிறிதாயினும் அவர்களிடம் சென்று சேருகிற தொகை அரசாங்கம் சம்பளமாகக் கொடுக்கும் மொத்தத் தொகையில் பெரும் பகுதியாகும். ஏற்றத் தாழ்வான இப்பங்கீடுகளில் விளைவாகப் பலர் இன்றியமையாத தேவைகளுக்குக்கூடப் போதிய பணமில்லாது அல்லற்படுகின்றனர்; ஒரு சிலர் தேவைக்கு மேலதிகமான பணத்தைப் பெற்று அதனைச் செலவழிக்க வழியறியாது வீண் ஆடம்பரங்களில் ஈடுபடுகின்றனர். இதுவே இன்றைய சமுதாய நிலை.

தேவைக்கு மேல்மிஞ்சிய வருமானமுள்ள இந்த ஒருசிலரைப் பார்த்து, "அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்தற்குத் தானும்போதிய வருமானமின்றி வருந்தும் பலருக்கு ஒரு சிறிதாவது உதவுவதற்காக உங்களது பன்னிரண்டு மாத வருமானத்தில் ஒரு மாத வருமானத்தையாவது கொடுத்தருளுங்கள்" என யாராவது கூறினுல் இவர்கள் மனங் கொதிக்கின்றூர்கள். தாங்கள் செய்த முயற்சியின் பலனுகக் கிடைத்த வருமானத்தில் ஒரு சிறு பகுதியையேனும் பிறருக்குச் சுவற விடுவதற்கு நியாயமெதுவுமில்லை என்பதே இவர்களுடைய வாதம். இவர்கள் தாங்கள் தேடிய சொத்து முழுவதையும் தாமும் தம் குடும்பமும் மட்டுமே அனுபவிக்க வேண்டுமெனக் கருதுவோர். இவர்கள் தமக்கென முயன்று தமக்கென வாழ்பவர். பிறர்க்கெனச் சிறிதாவது முயலவோ வாழவோ விரும்பாதவர்.

இவ்வாறு சிலர் பெருஞ் செல்வத்திலே புரள்வதும், பலர் கொடிய வறுமையால் உழல்வதும், செல்வம் படைத்தவர்கள் தமது செல்வத்தை வறியவர்களோடு பகிர்ந்தனுபவிக்க மனம் சிறிதும் ஒருப்படாமையும் இன்று மட்டுமே எழுந்துள்ள பிரச்சினையல்ல. மனித சமுதாயம் தோன்றிய காலந் தொட்டே இப் பிரச்சினையும் இருந்து வந்திருப்பதாகத் தெரிகின்றது.

இவ்விஷயத்தில், ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த எமது முன்னோர் கொண்டிருந்த கருத்துக்களையும் குறிக்கோள்களையும் குறிப்பிடுவதே இக்கட்டுரையின் நோக்கம். இவர்களுடைய கருத்துக்களை இவ்வளவு காலமும் பேணி வைத்திருந்து நமக்குத் தருபவையே சங்க இலக்கியங்கள். அச் சங்க இலக்கியங்களிலே இவ்விஷயத்தை யொட்டிய குறிப்புக்கள் எத்தனையோ காணப்படினும் அவற்றுள் மூன்றே மூன்று இடங்களை மட்டுமே இங்கு குறிப்பிடுவோம்.

செல்வர் அனைவருமே பிறர்க்கென வாழாது தமக்கெனவே வாழ்பவராயிருந்திருந்தால் இந்த உலகம் என்றைக்கோ அழிந்திருக்கும். கிடைத்தற்கரிய அமிழ்தம் கிடைத்தபோதும் அதனைக் கூடப் பிறருக்கும் கொடுத்து வாழும் இயல்புடையவர்களும் சிலராவது இருப்பதனாலேதான் இந்த உலகம் நிலைத்திருக்கின்றது என்கின்றார் புறநானூற்றுப் புலவர் ஒருவர். பெறுதற்கரிய தெய்வாமிழ்தத்தைப் பெற்ற போதும் அது இனியதென்று தனித்துத் தாம் மட்டுமே உண்ணவேணுமென நினையாத இத்தகையவர் தம் முயற்சி எதையும் தமக்காக மேற்கொள்ளாது பிறருக்காகவே முயலுபவர்களெனவும் அப் புலவர் குறிப்பிடுகின்றார்.

> "உண்டா லம்ம விவ் வுலக மிந்திரர்
> அமிழ்த மியைவதாயினு மினிதெனத்
> தமிய ருண்டலு மிலரே" எனத் தொடங்கி
> "தமக்கென முயலா நோன்றாட்
> பிறர்க்கென முயலுந ருண்மையானே (புறம் 182)

என அச்செய்யுளை முடிக்கின்றார் அப்புலவர்.

இந்திரன் அமிழ்தம் கிடைத்தாயினும் அதை இனிதென்று தாம் மட்டுமே உண்ணுதவரும், தாம் செய்யும் முயற்சிகளை தம் நன்மைக்காக மட்டுமே மேற்கொள்ளாது பிறருக்காகவும் மேற்கொள்வோரும் இருப்பதனாலேதான் இந்த உலகம் உண்டு என்பதே இந்த அடிகளின் கருத்து. முதவாம் அடியில் உள்ள உண்டி, ஆல், அம்ம என்ற சொற்களுள் ஆல் அம்ம என்ற இரு சொற்களும் அசைச் சொற்கள். பொருள் கொள்ளும் போது முதலாம் அடியைக் கடைசி அடியுடன் சேர்த்து, "இவ்வுலகம் முயலுநர் உண்மையான் உண்டு" எனக் கொண்டு கூட்டுக

மிக அரிய இப்பாடலைப் பாடியவர் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி எனப்படுவர். இவர் அரச குடும்பத்தினராயினும் அரசர்களுடைய கொடையைச் சிறப்பித்துப் பாடவில்லை. அரசர்கள் தம்மைப் புகழ்ந்து பாடும் புலவர்களுக்கு எதையேனும் கொடுத்தால் அதில் சிறப்பெதுவுமில்லை. பொது மக்கள் தம் சொந்த நன்மை எதையும் கருதாது தம் பொருள்களைப் பிறரோடு பகிர்ந்து அனுபவிப்பதுதான் சிறப்பு. அத்தகைய சிறப்பான இயல்பைக் குறிப்பதே இச்செய்யுள்.

புறநானூற்றிலே பொதுவாகக் கூறப்பட்ட இந்த நல்லியல்புக்கு ஒரு எடுத்துக்காட்டுப்போல அகநானூறு என்னும் சங்க நூலிலே ஒரு பெருமகன் குறிப்பிடுகின்றான். அவனுடைய பெயர் பண்ணன். அவன் தனக்கென வாழாதவன்; பிறர்க்குரியாளன். அவனுடைய பெயரைப் புலவர் குறிப்பிடுதற்கு ஏற்படுத்திய சந்தர்ப்பமும் மிகச் சுவையானது. உத்தியோகமாகப் பிறவூர் சென்றிருந்த தலைமகன் ஒருவன் தன் வீடு திரும்பி வந்து கொண்டிருக்கின்றான். தான் வீட்டை யடையும்போது தன் மனைவி என்ன செய்து கொண்டிருப்பாள் என்பதை அவன் தன் அகக் கண்களாற் கண்டு அதனைத் தன் தேர்ப்பாகனுக்கு வருணிப்பதாக அமைந்த ஒரு செய்யுளிலேதான் பண்ணனுடைய பெயரும் இடம் பெறுகின்றது. அவள் அச்சமயம் தன் குழந்தைக்கு உணவூட்டிக் கொண்டிருப்பாள், எனக் கண்ட அவனுக்கு அது மாலை நேரமாகையால் குழந்தைக்குப் பராக்குக் காட்டுவதற்காக நிலாவை அழைப்பாள் என்ற எண்ணமும் அழைப்பாள் என்பதைக் கருதியதும் அங்ஙனம் அழைக்கும் குரலும் அதன் இனிமையும் நினைவுக்கு வருகின்றன அவளுடைய பேச்சின் இனிமை எதைப்போல இருக்கும் என்பதை ஒரு உவமைமூலம் தன் தோழனுக்கு உணர்த்துகின்றான். அந்த உவமை அபூர்வமானது, நெல்லிக்காயைத் தின்றவர் நீரைக் குடித்தால் ஏற்படும் சுவையையே அவன் தன் மனைவி குழந்தையோடு பேசும் போது ஏற்படும் சுவைக்கு உவமையாகக் கூறுகின்றான். இந்த உவமையின் சிறப்பு இதனுடன் முடியவில்லை. அந்த நெல்லிக்கனியைக் குறிப்பிடும் போதுதான் தலைமகனின் உள்ளத்தின் உயர்வும் அவன்மூலம் பேசும் புலவனின் உள்ளத்துயர்வும் புலனாகின்றன. எந்த நெல்லி மரத்துக் காயையாவது தின்று தண்ணீரைக் குடித்தால் அத்தகைய சுவை பிறக்காது. பண்ணனுடைய தோட்டத்து நெல்லியிலுள்ள காய்களுக்கு ஒரு தனிப்பட்ட சுவையுண்டு. அதனையுடையவன் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாயிருப்பதே அதற்குக் காரணம் எனப் புலவர் கருதுகிறார்போல அமைந்துள்ளது அவர் அவனை விதந்தோதும் முறை.

> தனக்கென வாழாப் பிறர்க் குரியாளன்
> பண்ணன் சிறுகுடிப் படப்பை நுண்ணிலைப்
> புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்
> நீர்குடி சுவையில் தீவிய மிழற்றி (அகம் - 54)

தனக்கென்றே வாழாதவனும் பிறர்க்கெல்லாம் உரியவனுமாகிய பண்ணன் என்பானது சிறுகுடியைச் சார்ந்த தோட்டத்திலுள்ள சிறிய இலையையும் சிறிய வித்தையுமுடைய நெல்லியின் பசுங் காயைத் தின்றவர் நீர் குடித்தபோது எழும் சுவைபோல இனிய மொழி கூறி, என்பது இதன் பொருள்
(படப்பை = தோட்டம்)

நங்கையொருத்தியின் மொழிக்கு, நெல்லிக்காயைத் தின்று நீர் குடித்தபோது எழும் சுவையை ஒப்பிடக் கருதிய புலவன் அச்சந்தர்ப்பத்திற்கூட வேறெவருடைய தோட்டத்தையும்

நினையாது பண்ணனை நினைத்ததிலிருந்து அப்பண்ணனுடைய வாழ்க்கை அப்புலவரின் உள்ளத்தை எவ்வளவு கவர்ந்திருந்த தென்பதும் அதனை எடுத்து உலகுக்கு இயம்ப அவர் எத்துணை ஆவல் கொண்டிருந்தாரென்பதும் நன்கு புலனாகின்றன.

மேலே இலக்கிய ரீதியிலே வற்புறுத்தப்பட்ட, செல்வத்தைப் பகிர்ந்துண்ணலாகிய இந்த அருஞ்செயலை வள்ளுவர் ஒரு விதியாக்கி இரத்தினச் சுருக்கமாக இரு வரிகளுள்ளே அடக்கிக் கூறியுள்ளார்.

''பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின்
வாழ்க்கை வழியெஞ்சல் எஞ்ஞான்றுமில்''
(குறள் 44)

ஒருவன் பொருள் தேடும்போது பழிக்கு அஞ்சி - அதாவது பழியான வழிகளால் அதனைத் தேடாது, பின் அப்பொருளை அனுபவிக்கும்போது பிறருக்கும் பகிர்ந்து அனுபவிப்பானாயின் அவனுடைய சந்ததி ஒருபோதும் அழியாது என்பதே இதன் கருத்து.

(பாத்தூண் = பகிர்ந்து உண்ணும் உணவு)

தனது செல்வத்தைப் பகிர்ந்து உண்ணுபவனுடைய சந்ததி அழியாது என வள்ளுவர் கூறுவதையே புறநானூற்றுப் புலவர் அத்தகையவர்களாலேயே உலகமே நிலைத்திருக்கின்றது எனக் கூறுகின்றார். பொருளைத் தேடும்போது பழிக்கு அஞ்சித் தேடவேண்டும்; பின் அதனை அனுபவிக்கும்போது பிறருக்கும் பகிர்ந்து அனுபவிக்க வேண்டும். இதுவே உலகம் உய்ய வழி என வள்ளுவரும் ஏனைய பழந்தமிழ்ப் புலவரும் அன்று கண்ட இந்த முடிவைத்தான் உலகிலே முன்னேற்றமடைந்த பல தேசங்களும் சென்ற பல நூற்றாண்டுகளாக எவ்வளவோ பூசல்களையும் புரட்சிகளையும் போர்களையும் அனுபவித்தல் விளைவாக இன்று உணரத் தொடங்கியுள்ளன. ஆயினும், எம்மவருட் சிலர் இந்த முடிவை ஒப்புக்கொள்ள இன்று ஒருப்படுகின்றிலர்.

# நமது கலை மரபு

நவாலியூர் சோ. நடராசன்

கலையின் பயன் வீடு; ''அறம் பொருளின்பம் வீடடைதல் நூற்பயனே'' தத்துவ ஞானமன்று. இந்திய தத்துவ தரிசனங்கள் சிந்தனைப் பீடங்களல்ல. அவை வாழ்வின் ராசமார்க்கங்கள். அறிவைச் சேகரிப்பது வாழ்வை நெறிப்படுத்துவதற்கே. தினசரி வாழ்க்கையை அவ்வறிவினுல் வளம்படுத்துவது நோக்கம். ஒழுக்கம் அறிவில் தங்கியிருப்பதுபோலவே சௌந்தரிய உணர்ச்சியும் தத்துவ ஞானத்தில் தங்கியுள்ளது. ஒழுக்கம் நன்மையை அடிப்படையாகக்கொண்டது. சௌந்தரிய உணர்வு அழகை அடிப்படையாகக் கொண்டது. அழகு, நன்மை, உண்மை என்னும் இவை பரஸ்பர சம்பந்தமுடையன. இவ்வுலகத்துப் பலபட்ட வேற்றுமைகளிடையே ஓர் ஒற்றுமை மணிகளைக் கோத்து நிற்கும் நூல்போல விளங்குகிறது. இதுவே ஆத்மா என்று உபநிடதங்கள் கூறும். ''உள்ளது ஒன்று'' இதுவே இதன் அர்த்தம் அதுவும் உள்ளத்திலே உள்ளது. சீவாத்மா-பரமாத்மா என்ற இந்தத் தொடர்பு, இவ்விஸ்வரூபதரிசனம், ''காக்கை குருவி எங்கள் சாதி, கடலும் மலையும் எங்கள் கூட்டம்'' என்ற பேருண்மை. தொட்டுஞ் சுட்டியுங் காணும் பிரபஞ்சப் பொருள்கள், அம்மெய்ப்பொருளின் வெளித்தோற்றம். சத்தப்பிரபஞ்சமும் அர்த்தப்பிரபஞ்சமும் எல்லாம் அம்மெய்ப்பெரும் பொருளின் ஒரு தோற்றமே. தோற்றமெனினும் விஷயங்களைப் பிணைத்து ஊடுருவி நிற்கும் ஒருமையை ஓரளவு உணர்ந்து கொள்வதற்குப் போதுமானதே.

இந்தியக் கலைமரபைப் பற்றிப் பேசுமுன் மற்றுமொரு அமிசத்தை இங்கே கருத்திற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இம்மை, மறுமை என்ற இரண்டு உலகங்களில் மனிதன் பயனடைய வேண்டும் என்பது ஒரு கொள்கை அன்று தொட்டு இருந்து வருகிறது. மறுமையிற் பயனெய்துவதற்கு இம்மையில் செம்மையான வாழ்வு நடத்த வேண்டுமென்று எண்ணினர் நம்மான்ருேர். எனவே மனிதன் இம்மையில் சன்னியாசத்தை மேற்கொண்டான்; தவத்தைச் செய்தான். மறுமைப் பேரின்பத்தை விரும்பி இவ்வுலகில் உடலை வாட்டி, உலக இன்பங்களை மறுத்தான்.

ஆனுல் நாளடைவில் இக்கொள்கையிலும் பெரியதொரு மாறுதலுண்டானது. மனிதன் புலனையடக்கி, ஆசை நீக்கி, எல்லார்க்கும் இதஞ்செய்து வாழ்ந்தால் இம்மையிலேயே அந்த மறுமைப் பயனையடையலாம்; இங்கே, இவ்வுலகில் அந்த நிரதிசயானந்த நிலையை அடையலாம் என்ற கருத்து வளர்ந்தது. இதுவே சீவன்முத்தர் நிலை. அதாவது உயிரோடிருக்கும் பொழுதே ஒருவன் விடுதலை பெற்று முத்தி நிலையை அனுபவிக்கலாமென்ற கொள்கை. இதுவே மேலான முத்தி நிலை. உயர்வற உயர்ந்த பெருநலம்; கீதையிலே புகழ்ந்து பாராட்

டப்பட்ட ''ஸ்தப்பிரக்ஞன்'' நிலை; முழு மதியுடைய பெரியோர் நிலை; தன்செயமலல்லாஞ் சிவன் செயலென எண்ணிப் பற்றின்றி இறுமாந்திருக்கும் பேரின்ப நிலை. இக்கருத்து வளர்ச்சி, நம்மான்றோர் வாழ்வின் காட்சியை முற்றாக மாற்றி விட்டது. மனிதனுடைய ஒழுக்க நெறியின் குறிக்கோள் மாறு விட்டாலும், இம்மையிலேயே பேரின்பத்தையடையலாமென்ற கருத்து, வாழ்வை மிகவும் பொருள் உடையதாகச் செய்தது. இப்புதிய குறிக்கோள் வாழ்வின் பலதிறப்பட்ட பற்றுக்களை ஒழிக்கவிடாது அவற்றை விரிவடையச் செய்தது. இயற்கையாக மனிதருள்ளத்திலேயெழும் இயல்பூக்கங்களை அடக்காமல் அவற்றைத் தூய்மை செய்து பயன்பெற வழி வகுத்தது. ''ஐந்து மடக்கடக் கென்பரறிவிலார், ஐந்து மடக்கு மமராருமங்கில்லை'' என்று திருமூலர் கூறியது கருத்திற் கொள்ளத் தக்கது. மாணிக்கவாசகரும் ''துவந்து வங்கள் தூய்மை செய்து'' என்றார். இவ்வியல்பூக்கங்களைத் தூய்மை செய்யும் முயற்சியிலேதான் கலைகள் பயன்பட்டன என்பதை ஈண்டு குறிப்பிடுதல் சாலும். (பகவத்கீதை அத்தி. V சு. 23-25) இந்தப் பெருநோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அறிவையும் விவேகத்தையும் தீட்டினால் முடியாது; சித்தத்தைத் திடப்படுத்தினால் மாத்திரம் போதாது.

உணர்ச்சிகளைத் தூய்மை செய்ய வேண்டும். அதுவே கலைகளின் ஒரு பயனெனக் கொள்ளலாம். உணர்ச்சி பண்படாவிட்டால் அறிவுஞ் செயலும் பூரணமடையமாட்டா; பக்தியில்லாத அறிவும், அன்பினால் பண்படாத செயலும் துன்பத்தையுண்டாக்கி விடும்.

எனவே இந்த ஆன்மநேய ஒருமைப்பாடும், இம்மையிலேயே பற்றற்ற வீட்டு நிலையை அனுபவிக்கலாமென்ற கொள்கையும் நமது கலை மரபை ஆதியிலிருந்தே வளர்த்து வந்திருக்கின்றன. பாமகர், தண்டி, வாமணர் போன்ற அலங்கார ஆசிரியர்கள் இக்கொள்கைக்கு அடியிட்டனர். கலை விமரிசனத்தின் முதற்படி இவர்களில் காணப்படுகிறதெனலாம். இவர்கள் கவிதைக்கு வேண்டிய குணதோஷங்களை ஆராய்கிறார்கள். சொல்லினாலும் பொருளினாலும் உண்டாகக்கூடிய குணங்களையும் தோஷங்களையும் ஆராய்கின்றனர்.

இவர்களுக்கு மாறாக எழுந்த நவீன விமரிசகர்கள் வேறு கொள்கையொன்றை விரித்தனர். இக்கொள்கைப்படி ஒரு கவிதை இரண்டு வகைப் பொருளை உடையதாயிருக்கும். ஒரு பொருள் வெளிப்படையான பொருள். மற்றது உள்ளே மறைந்து கிடக்கும் பொருள். இதைத் தமிழில் இறைச்சிப் பொருள் என்பர் வெளிப்படையாக வரும் சொல்லும் பொருளும் கவிதைக்கு உடல் போன்றது. இவை பாட்டுக்கு அவசியமான வெளியுருவங்கள்; பழைய ரசிகர்கள் இதையே கொண்டாடினர். ஆனால் நவீன விமர்சகர்கள் கவிதையின் உட்பொருளான இறைச்சிப் பொருளையே பெரிதாக மதித்தனர். எனவே பிராசீன ஆசிரியர்கள் வகுத்த குணதோஷங்களுக்குப் புதிய

விளக்கங் கொடுக்கப்பட்டது. கவிதையின் நோக்கத்தை நிறை வேற்ற எவை பயன்பட்டனவோ அவை குணங்களாகவும், ஏனையவை குற்றங்களாகவுங் கொள்ளப்பட்டன. ஆனால் இக் குணதோஷங்களும் அடுத்து நோக்குமளவுக்கே பிரமாணமாய மைந்தன. ஓரிடத்தில் ஒரு சமயத்தில் குணமாய்த் தோன்று வது மற்றொரு சந்தர்ப்பத்தில் குற்றமாக மதிக்கப்பட்டது. எனவே குணம் தோஷம் என்பவற்றை அளந்து கொள்ளத் தனிப் பிரமாணமில்லாதிருந்தது. கவிதையின் உட்பொருள் அந்தரங்க அருத்தம், அத்தகையதொரு தனி அளவையை வழங்கிற்று. அந்த அளவு கோலால் அளந்து ஒரு கவிதை சிறந்ததா அல்லவா என்பதைச் சொல்லலாமென நவீன ரசி கர்கள் கண்டனர். கவிஞன் தன் உள்ளத்தில் ஆழமாக அனுப வித்த ஓர் உணர்ச்சியை வெளிப்படுத்துகிறான். புலப்படுத்துகி றான். இவ்வாறு புலப்படுத்தப்படும் கவிதை கவிஞனின் உள் ளத்துணர்ச்சியை வெளிப்படுத்தும் திறமை பெற்றுள்ளதா என்பதிலேயே அதன் சிறப்புத் தங்கியுள்ளது.

கவிதையில் அடங்கியுள்ள பொருள் மூன்று தன்மையை உடையதாயிருக்கும் என்றனர். புலவன் உலகத்து நிகழ்ச்சி யைப் புலப்படுத்தலாம்; அல்லது தன் கற்பனையை வெளிப் படுத்தலாம். இன்றேல் ஒரு சுவையைப் புலப்படுத்தலாம். முத லாவது அவ்வளவு விசேடமுடையதன்று. அது கருப்பொருளா யிருக்கும். அவை ஐந்திணையின் சடப்பொருள்கள். அவற்றைப் பற்றிக் கூறும் முறையினால் ஒரு வகைக் கலையின்பம் உண்டாக லாம். எஞ்சிய கற்பனையும் சுவையுமே கவிதையின் முக்கிய அமிசங்களாக அமையும். இந்தக் கொள்கையின்படி கவிதை என்பது இயல்பாகக் கவியின் உள்ளத்திலிருந்தெழும் பேச்சு; அது கற்பனையில் ஊற்றெடுக்கும்; அல்லது ஒரு மெய்ப்பாட்டில் ஊற்றெடுக்கும். இந்த ஊற்றை ஆராய வேண்டுமென்பதே நவீன ரசிகர்களின் கொள்கையாயிற்று. பழைய ஆராய்ச்சி யாளர் கவிதையின் வெளித்தோற்றத்தை யாராய்ந்து குண தோஷங் கூறினர். இது கவிதையின் உடல், கவிதையின் உயிரா யுள்ள சுவையையும் கற்பனையையும் ஆராய்ந்தனர், புதிய ஆராய்ச்சியாளரான ஆனந்த வர்த்தனர் முதலியோர். தத்துவ நூல்களில் வெளித்தோற்றங்களையெல்லாம் ஊடுருவி ஆன்மா என்ற நிலையுள்ளதொரு பொருளுண்டெனக் கூறப்பட்டது. அதே வகையான கருத்து கலையுலகில் சுவை, ரசம், மெய்ப் பாடு என்ற பெயரில் கொண்டாடப்பட்டது. வேறு வேறி யற்கையும் வேறு வேறு தொழிலுமுடைய இவ்வுலகத்து நிலை யில்லா அனுபவப் போக்குகள் ஒரு மெய்ப் பொருளின் தன் மையைக் காட்டும் தோற்றங்களே. அவை கவிதையின் சொல் லும், அச்சொல்லுணர்த்தும் வெளிப்பொருளும் போன்றவை. இவை உடல்; உடலை ஊடுருவி நிற்கும் உயிர்போலக் கவிதை யில் மறைந்து நிற்பது உண்மைப் பொருள். இதுவே நவீன ஆராய்ச்சியாளரின் கொள்கை. நவீனம் எனக் குறிக்கப்படு வோர் ஆனந்தவர்த்தனர் முதலானோர் (கி. பி. 6 ஆம் நூற் றாண்டு. இறையனார்களவியலுரைகாலம்.)

கவிதையின் சிறப்பு ஒரு புலவன் புலப்படுத்த முயலும் கற்பனையின் வளத்திலும், மெய்ப்பாட்டின் செறிவிலும் தங்கியுள்ளதென்று கண்டோம். ஆனால் நாளடைவில் மெய்பாடென்னும் சுவையே பெரிதாக மதிக்கப்படலாயிற்று. இயமநியமங்களினால் இம்மையிலேயே ஒருவன் மேலான வீட்டு நிலையை அடையலாமென்ற கருத்து வளரவே, மனிதன் இயல்பூக்கங்களையும் உணர்ச்சிகளையுஞ் தூய்மை செய்வதற்குக் கலைகளைப் பயன்படுத்தினான்; சுவையே பிரதானமென்ற கவிதைக் கொள்கை இம்முயற்சிக்குப் பேருதவியாயிற்று. உணர்ச்சிகளைப் பயன்படுத்தக் கலைகளைப் பயன்படுத்தலாமென்ற கொள்கை உண்டாயிற்று. எனவே கவிதையுங் கலைகளும் மனிதனுக்கு அறிவைப் புகட்டுவதோடு ஆனந்தத்தையும் கொடுக்குமென்ற கருத்து வலுப்பெற்றது. கவிதையென்று சொல்லும்பொழுது இங்கே நாடகத்தையே பிரதானமாகக் கொண்டனர். ஏனெனில் அது இயல், இசை, நாடகம் என்ற மூன்றையும் தன்னகத்துக்கொண்டு கண் மூலமும் செவி மூலமும் புலப்பட நிற்கிறது. கவிதை கேட்போரைத் தம் வசப்படுத்தி அவர்கள் அறியாமலே அவர்கட்கு அறிவைப் புகட்டுவதோடு அவ்வறிவை இன்பமாக விளையாட்டாகப் புகட்டி விடுகிறது. இக்கொள்கையையே இறையனார் களவுரையாசிரியர் மருந்துக்கு வெல்லஞ் சேர்த்துக் கொடுக்கும் சம்பிரதாயமென்பர். ''கடுத்தின்னாதானைக் கட்டி பூசிக் கடுத்தீற்றியவாறு போல'' என்று குறிப்பிடுகிறார். கவிதையின் நோக்கம் இவ்வாறு இரண்டு விதமாகக் கொள்ளப்பட்டது. முதலில் நேரடியான ஆனந்தத்தை அளிப்பது; மற்றது மறைமுகமாக மனுமகனின் ஒழுக்கத்தை வளம்படுத்துவது. எனவே கவிதையின் மூவிதப் பொருள்களுள் கருப்பொருள் வருணனை, கற்பனை விலாசம் என்பன சிறப்பின்றியொழிய இரசமாகிய சுவை முக்கியத்துவம் பெற்றது. காவியத்துக்கு உயிர் இரசம் என்று வடமொழி ஆசிரியர்கள் கூறும் கூற்றின் பொருள் இதுவே.

எனவே இந்த இரசம் எத்தகையது? என்பதைச் சிறிது ஆராய்வோம். இக்கொள்கையைத் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறியவர் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆனந்தவர்த்தனர். நமது கலை மரபில் இரசவாதம் உயர்ந்த தானத்தை வகிக்கிறது. கவிதையின் நோக்கமென்ன? இதனை இரண்டு கோணங்களிலிருந்து ஆராயலாம். ஒன்று கவிதையைப் பாடும் கவிஞனின் நோக்கம்; மற்றது அதைப் படிக்கும் வாசகர்களின் நோக்கம்; இவற்றுள் ரசவாதிகள் கவிதையைக் கேட்பவரின் நோக்கத்தைப் பிரதானமாகக் கொள்வர். எனவே கவிதையால் வாசகர்க்கு என்ன பயனுண்டாகிறதென்பதை ஆராயலாம். இந்திய எழுத்தாளர் எல்லாரும் கவிதை **பிரீதியை** உண்டாக்குகிறது என்றே கூறுவர். அதாவது இன்பத்தைக் கொடுக்கிறது என்பது. கவிதையால் வேறுபல பயன்களுமுண்டாகலாம். அவை தூரத்துப் பயன்கள். இரண்டாந்தரமானவை. மிகக் கிட்டிய பயன் இன்பம். இன்பமென்றாலென்ன? அஃது உள்ளத்தின் ஒரு நிலை. ஓர் அனுபவம்; கவிதையைப் படிக்கும்பொழுது அல்லது கேட்கும்பொழுது மனத்

தில் உண்டாகும் உணர்ச்சிகளில் இன்பமும் முக்கியமான தொன்று ; ஆனுல் இன்பம் மாத்திரமே உண்டாகிறதென்று வைத்துக்கொள்ளக்கூடாது. வேறு பல உணர்ச்சிகளுள் இன்பம் தலையாயது எனக் கொள்ளலாம்.

ஆனுல் இவ்வின்ப உணர்ச்சி, உண்டி, உறக்கம், மைதுனம் போன்றதொன்ரு ? இல்லை. வெளியுலகத தொடர்பினுலேதான் இன்ப துன்பங்களுண்டாகின்றன. கவிதை (அல்லது கலை) வெளியுலகத் தொடர்பை உண்டாக்குவதற்கு உலகின் தோற்றத்தை நம் முன்னே அமைத்துக் காட்டுகிறது. பிரத்தியட்ச உலகத்தை அது காட்டாவிட்டாலும், அதுபோன்ற ஒரு உலகத்தை உண்டாக்கிக் காட்டுகிறது. உண்மை உலகைப் பார்ப்பதிலும் இந்தப் போலித் தோற்றத்தை உண்டாக்குவதே கலை செய்யும் தொண்டு. இவ்வாறு ஒரு மாயா ரூபத்தை போலித் தோற்றத்தை உண்டாக்குவதற்காகக் கலைஞன் பிரத்தியட்ச உலகில் உள்ள பொருள்களில் தான் வெளிப்படுத்தவிருக்கும் போலித் தோற்றத்துக்கு ஏற்புடையவற்றை மாத்திரம் தெரிந்தெடுத்து மற்றவற்றை விலக்கி விடுவான். சித்திரத்தில் வரைந்த குதிரை இதற்கு எடுத்துக்காட்டு.

கவிஞன் உருவாக்கும் கற்பனை உலகம் உண்மையுலகத்திலிருந்து பிறந்ததானுலும் அது உண்மையிலும் மாறுபட்ட மாயா உலகம். அதிலேதான் அதன் சிறப்பு. ''இல்லதும், இனியதும் நல்லது'' (இறையனுர்களவியலுரை) மான இம்மாயத் தோற்றத்தை உருவாக்குவதுதான் கவிஞனுடைய தொழில் ; அது அவனுடைய திறமையைப் பொறுத்தது. சந்திர உதயத்தை வருணிக்கும் ஒரு புலவர்

> ''மீனினம் ஓடிப் பரந்ததம்மாஊடே
> வெள்ளியோட மொன்று போகுதம்மா--
> முல்லை மலர்ப்பந்த லிட்டனரோ—தேவர்
> முத்துவிதான மமைத்தனரோ'' என்கிருர்.

இது கற்பனை ; இது உண்மையான கவிதைக்கு இன்றியமையாதது—இதனைக் கவிதைக்கு விதை என்பர் — (கவித்துவபீசம்) எனவே பிறைச்சந்திரன் இரவில் விண்மீன்களின் மத்தியில் நகர்ந்து செல்லும் தோற்றம் கவிதை உருவம் எடுக்கும் பொழுது தத்ரூபமாக விராமல், அதற்குமப்பாற் பட்டதொரு காட்சியை உருவகப்படுத்தியுள்ளது. இயற்கைத் தோற்றத்தைக் கற்பனை வேருக மாற்றி விட்டது. இதே சந்தர்ப்பத்தில் வடமொழிப் புலவர் ஒருவர் உலகைப் பார்க்கிருர். அவருக்கு அவ்வுலகம் ''தந்தத்தாற் செய்து வைத்த தரணி'' யாகத் தெரிகிறது. இங்கே என்ன நடக்கிறது. உள்ளபொருளை உயர்ந்த ஒரு இலக்கியப் பொருளாக்குகிருர் புலவர். அப்பொழுது சாதாரணமான சந்திரிகை கலையம்சம் பெற்றுக் கலையழகுடன் காட்சி தருகிறது. கற்பனை செய்த தோற்றம் மாயாரூபமானுலும், போலியானுலும், பொய்யல்ல ; ரசிப்போர்க்குக் கருத்துலகிலும், உணர்ச்சியுலகிலும் ஒரு நிசப்பொருளாக அமைகிறது.

பிரத்தியட்சப் பொருளை, இலட்சியப் பொருளாக்கிப் உயர்த்தி விட்டதால் அப்பொருள் நிச உலகிலேயுள்ள பொருள்களால் மனிதரடையும் சாதாரண உபாதைகளைக் கொடாமல். விருப்பு வெறுப்புக்களையோ, லௌகீகப் பயனுடைமையையோ உண்டாக்காமல், அவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டதாகின்றது. கீதையில் சொன்னதுபோல் ''விருப்பு வெறுப்பு அற்று ஆன்மாவைத் தன் வசப்படுத்தியபின் புலன்களை எங்கணுஞ் செலுத்தி அனுபவிப்பவன் தெளிவடைகிறான்'' என்ற நிலை, இக்கலைப்படைப்பை, இலக்கியச் சிருட்டியை இரசிக்கும் பொழுது உண்டாகிறது. சிந்தனையில், ரசிகர்கள் உள்ளத்தில் முகிழ்க்கும் இத்தெளிவு, செயலற்ற சாத்துவீக நிலையன்று. செயல் முற்றிய பூரண நிலை. ஆனந்த நிலை. கவிதையும் ரசிகனும் இரண்டறக் கலந்த நிலை. இந்த நிலையில் வைத்தே கவிதை தரும் பயன் இன்பம் என்ற கருத்தை ஆராய வேண்டும். இந்த இன்பம் உடல் உபாதைகளால் உண்டாகும் இன்பம் போன்றதன்று. இது ''பராநிர்விருதி'' என வடமொழியாளர் கூறும் பேரின்பம். வீடு ; நூற்பயனாகிய வீடு பேறு ; ''அந்தமிலின்பத்து அழிவில் வீடு''

இவ்வாறு ஆனந்தத்தைக் கொடுக்கும் கவிதையை இரசவாதிகள் இரண்டு வகையாகப் பாகுபடுத்துவர். ஒன்று அகப்பாட்டு ; மற்றது புறப்பாட்டு. இவை பாட்டுக்கு விடயமாகும் பொருள் நோக்கியெழுந்த வேறுபாடாகும். இரசவாதிகள் எல்லாப் பொருளும் கவிதைக்கு விடயமாகலாமென்று கூறினாலும், காதல், வீரம் முதலிய சுவைகளில் ஒன்றைச் சீவ சுருதியாகக் கொண்டு பாடப்படும் கவிதையே சிறப்புடையதெனக் கொள்வர். சுவைகளில் ஒன்றைச் சீவசுருதியாகக் கொண்டு செய்யப்படும் கவிதையை அகப்பாட்டெனக் கூறலாம். மற்றப் புறப்பொருள்களையும் உலக இயல்புகளையும் விஸ்தரித்துக் கூறுவன புறப்பாட்டெனலாம்.

சுவையை வெளிப்படுத்தும் அகப்பாட்டே விசேடமான கவிதையெனக் கருதப்பட்டது. இத்தகைய அகப்பாட்டுத் தனிப்பாடலாகவுமிருக்கலாம் அல்லது அகப்பொருட்துறைகளில் வரும் உரிப்பொருள்களை வைத்து அமைத்த காவியமாகவும் விளங்கலாம். அல்லது சுவைகளில் ஒன்றை முக்கியப் பொருளாகக் கொண்ட நாடகமாகவும் இருக்கலாம். உதாரணமாக காளிதாசரின் மேகதூத காவியத்தையோ, சாகுந்தல நாடகத்தையோ குறிப்பிடலாம். மேகதூதத்திலே இயக்கன் ஒருவன் தன் காதலியைப் பிரிந்து வருந்தும் நிலையை வைத்துக் காவியஞ் செய்யப்படுகிறது. சாகுந்தலத்திலே உடலழகினால் ஒன்றுபட்ட இரு ஆன்மாக்களின் காதற் சரித்திரம் எவ்வாறு ஈற்றில் ஆன்மநேயமாக இருவரையும் பிணைத்துத் தெய்வீக சம்பந்தத்தை உண்டாக்குகிறதென்பதைக் காளிதாச மகாகவி சித்திரிக்கிறார். இவ்வாறு ஆராயுமிடத்துக் காவியங்கள் கூட இந்த வகையில் ஆராயப்படலாமென்பது தெரிகிறது. இராமாயணம் சோக காவியம் ; சிலப்பதிகாரமும் அத்தகையதே.

இப்பொழுது ரசத்தைப் பிரதானமாகக் கொண்டு உரைக்கப்படும் கவிதையே சிறந்த கவிதையென ரசவாதிகள் கூறுவர். ஆனல் இந்தச் சுவை எப்படிப்பட்டது. கவிஞன் மனத்திலே எழும் உணர்ச்சிகளைப் பாட்டாக்க முடியாதென்பதே இரசவாதிகளின் கொள்கை. இதனை விளக்க இராமாயணம் பிறந்த கதையைக் கூறுவார்கள். ஒரு வேடன் ஆணும் பெண்ணுமாக ஒரு கிளையிலிருந்து விளையாடிய அன்றிற் பறவைகளைக் கண்டு, ஆண்பறவையை எய்து வீழ்த்தினன். நிலத்திலே இரத்தந் தோய்ந்து இறந்து கிடந்த தன காதலனைக் கண்டு பெண்பறவை ஆழ்ந்த துயரத்தில் மூழ்கி அழுதது. இச்சம்பவத்தை வால்மீகி கண்டார். உள்ளம் உருகிற்று. உடனே சோகம் நிறைந்ததொரு பாட்டைப் பாடினர். இதுவே ராமாயணமென்ற ஆதி காவியத்தின் ஆரம்பம்.

வால்மீகி தனது துயரைத்தான் அப்பாடலில் பெய்து கொட்டினரா? அல்லது அந்தக் காட்சி தன்னை எவ்வாறு அலைத்ததென்பதைப் பாடினரா? இரசவாதிகள் வால்மீகி தன் துக்கத்தைப் பாடவில்லை; அந்நிகழ்ச்சி எவ்வாறு தன் உள்ளத்தை ஆட்கொண்டதென்பதையே பாடினர் என்று கூறுவர். துக்கத்தில் மூழ்கியிருப்பவர் எவ்வாறு பாட முடியும்? எனவே தன்னை ஆட்கொண்ட அந்த நிகழ்ச்சியையே கவிதை பண்ணினர் என்பர். ஏனெனில் லௌகீக நிகழ்ச்சியான அச்சம்பவத்திலே தோன்றிய சோகத்தை அவர் பாடவில்லை; அது கலையாகாது; புலவர் காட்சியில் அந்நிகழ்ச்சியுண்டாக்கிய நிலையையே அவர் உரைத்தார்; அவருடைய உணர்வு ததும்பிய உள்ளப்பண்பும், கற்பனைச்சக்தியும் சேர்ந்து கற்பனையில் ஒரு புதிய அலௌகீக நிலையை உண்டாக்கிவிட்டன. புலவன் தத்ரூபமாக ஒரு சம்பவத்தைப் படம் பிடிக்கவில்லை. உள்ளத்திலே அச்சம்பவம் பதிந்து பின்னர் புதியதொரு தோற்றத்துடன் இலட்சிய நிலையையடைகிறது. இங்கே உலகவாழ்க்கையின் ஆசாபாசங்கள் மறைந்து விடுகின்றன. கவி, பற்றற்று விருப்பு வெறுப்பின்றித் தன் புலன்களைப் பொருள்களிற் போக விட்டு உலக அனுபவத்திற்கு மேலானதோர் கலையனுபவத்தை அடைகிறன். இந்த அனுபவம் உண்டானதும் கவிதையாக உரைக்கப்படுகின்றது.

புறப்பாட்டிலே சிந்தனையும், உருவகமும் சொற்சுவையும் பிரதான அமிசங்களாயிருக்கும்; அவற்றில் மனத்தையீடுபடுத்தி அக்கவிதை கூறும் பொருளைப் பற்றற்றுச் சிந்திப்பதாலுண்டாகும் அனுபவம் ஒரு வகைத்து. ஆனல் அகப்பாட்டிலே முக்கியமாகப் புலவன் புலப்படுத்துவது உணர்ச்சி; உணர்ச்சியை வருணித்து உணர்த்த முடியாது. ஒரு உருவகத்தையோ கருத்தையோ, காட்சியையோ வருணிப்பதுபோல உணர்ச்சியை வருணித்துப் புலப்படுத்த முடியாது எனவே உணர்ச்சியைத்

தொனிக்கச் செய்யலாம்.அதனை வியஞ்சிய மென்பர். உணர்ச்சியை வாசகர் அனுபவிக்கச் செய்யவேண்டும். பார்ப்போர் உணரச் செய்யவேண்டும் ; இதை உள்ளுறை உவமத்தினுலும், உருவகங்களினுலும்,கருத்துக் கற்பனை என்பவற்றினுலும் புலப்படுத்துவர்.இவை சாதனங்கள் ; இவற்றுல் உணர்த்தப்படுவது சுவை. சுவையை கருதி அறியமுடியாது ; சுவைத்தறிய வேண்டும் ; சுவைத்தல் அனுபவித்தல். இதனையே சுவை என்பர்.

# உரையும் விமரிசனமும்

## (ஒரு குறிப்பு)

க. கைலாசபதி

இலக்கிய விமரிசனம் என்பது இக்காலத்தே இலக்கிய மாணவரிடத்தும், இலக்கிய இரசிகரிடத்தும் பெரிதும் ''அடிபடும்'' ஒரு தொடர். சிறுகதை, நவீனம், நாடகம் ஆகிய கலைவடிவங்களைப் போல இலக்கிய விமரிசனம் என்பதும் மேனாட்டவர் தொடர்பால் தமிழிலே தோன்றியதொன்று என்னும் கருத்துப் பலரிடையே பொதுவாக நிலவிவருகிறது. இலக்கியத்தின் தோற்றம், அது பெறும் பல்வகை வடிவங்கள், அவ்வடிவங்களைப் பற்றி எழும் உப வடிவங்கள், அவற்றின் அமைப்பு, பாகுபாடுகள், அத்தகைய பாகுபாடுகளுக்கும் மனித உணர்விற்கும் உள்ள நுண்ணிய தொடர்பு ஆகியனவற்றைப் பண்டைத் தமிழறிஞர்கள் சிறப்பாகக் கூறவில்லை என்ற கருத்தும் பொதுவாக இலக்கிய மாணவராற் கூறப்பட்டு வருகிறது. இந்நிலையிலே பொதுவாக இலக்கிய விமரிசனம் பற்றியும் சிறப்பாகப் பண்டைத் தமிழிலக்கிய அறிஞர்கள் பற்றியும் நாம் சிந்திப்பது இயல்பாகிறது.

பண்டைக் காலத் தமிழர் இலக்கிய விமரிசனக் கலையைப் போற்றினரா அல்லரா என்ற முடிவிற்கு வருமுன், இலக்கிய விமரிசனம் பற்றிய ஒரு வரைவிலக்கணத்தை நாம் நிறுவிக் கொள்ளுதல் அவசியமன்றோ. தத்துவ வாதிகள் தமது அறிவு வரம்புக்குட் பிரபஞ்ச இரகசியங்களை அடைத்து ஒரு குறிப்பிட்ட கோலத்தில் அவற்றைக் காட்டுவது போலவே இலக்கிய அறிஞரும் இலக்கிய விமரிசனம் என்னும் அறிவியல் வரம்பை அமைத்தும் காட்டியும் வந்துள்ளனர். பொதுவாகவே ஒவ்வொரு காலத்து இலக்கிய மாணவனும் கொள்ளும் வேட்கைக்குச் சாந்தி தரும் வகையிலேயே இலக்கிய விமரிசனமும் அமைந்துவிடுவதை உலக இலக்கிய வரலாற்றிலே நாம் காணலாம். ஒரே நூல் வெவ்வேறு காலப்பகுதிகளிலே வெவ்வேறு மனிதரால் (இலக்கிய விமர்சகரால்) வெவ்வேறு மனோபாவத்துடன் நோக்கப்படுவதை இந்த உண்மைக்குச் சான்றாகக் கொள்ளலாம். இதனை உற்று நோக்கும் போது "எந்த நாளும் நிலைத்திடும் நூலொன்றும் இல்லை'' என்று துணிந்து கூறலாமல்லவா? நிலையான விமரிசனக் கருத்தென்பது எந்த இலக்கிய வரலாற்றிலும் காண முடியாத தொன்றாகும். அவ்வாறாயின் இலக்கிய விமரிசனந்தான் யாது?

சிந்தனைகளும், கருத்துக்களும் ஒழுக்கமும் காலத்திற்கேற்ப மாறும் இயக்கநிலை ஒன்று இருப்பதனாற்றான் விமரிசனமும் தோன்றி வாழ்கிறது. இந்த அடிப்படை நியதியின் துணையைக் கொண்டு இலக்கியத்தை நாம் அணுகுவோமாயின், கவிதை

இன்பம், கவிதை உணர்வு, கவிதா உண்மை, கவிதா நெறி, கவிதை வெறி கவிதையின் நிரந்தரமான உறுப்புக்கள் என்று சொல்லிக் கொண்டு தம்மையே தாம் ஏமாற்றிக் கொள்பவர்களின் குறைபாடு தெளிவாகும்.

கவிதையைக் காலத்தினின்றும், மனித வாழ்க்கையினின்றும் பிரித்தெடுத்து அது தனித்து வாழும் நிறைபொருள் எனக் கொள்ளும் பொழுதுதான் இலக்கிய விமரிசனத்திலே மாயை படர்கிறது. அத்தகைய மாசு படிந்த நோக்குடன் பார்க்கும் பொழுதுதான் பண்டைத் தமிழகத்திலே இலக்கிய விமரிசனம் இருந்ததோ என்னும் ஐயப்பாடும் பிறக்கிறது.

சில திட்டவட்டமான நியதிகளுக்கிணங்க மனித சமுதாயம் இயங்கிக் கொண்டு வருகிறது. தோன்றி வாழ்ந்து மறைந்து விடும் மனித வாழ்க்கையைப் போலவே மனிதன் அமைத்துக் கொள்ளும் சட்டங்கள், நியதிகள், தத்துவங்கள், இலட்சியங்கள், கட்டுப்பாடுகள் முதலியனவும் மாறி மாறிப் பிறப்பெடுத்துக் கொண்டிருக்கின்றன ; உருமாறி வளர்ச்சி நிலை — பக்குவநிலை — யெய்திக் கொண்டிருக்கின்றன. இந்த மூலாதாரமான உண்மையை மறந்து இலக்கியத்திற்கும் இலக்கிய விமரிசனத்திற்கும் சிரஞ்சீவித்தன்மை தேடிக் கொடுக்க முற்படுபவர்கள் தம்மைத் தாமே யன்றிப் பிறரையும் ஏமாற்றுபவராவர் என்பதில் ஐயமில்லை.

புகழ்பூத்த பண்டைத் தமிழ் உரையாசிரியரான பேராசிரியர் தொல்காப்பியத்திலுள்ள சூத்திரம் ஒன்றனுக்கு உரைவிளக்கம் எழுதும் போது பின்வருமாறு கூறியுள்ளார் :—

"............ஒரு காலத்து வழங்கப்பட்ட சொல் ஒரு காலத்து இலவாகலும், பொருள் வேறுபடுதலும் உடைய. அதோளி, இதோளி, உதோளி எனவும் குயின் எனவும் நின்ற இவை ஒரு காலத்திலுள்ள வாகி இக்காலத்திலவாயின. இவை முற்காலத் துளவென்பதே கொண்டு வீழ்ந்த காலத்துஞ் செய்யுள் செய்யப் படா :.............. இனிப் பொருளும் இவ்வாறே காலத்தானும் இடத்தானும் வேறுபடுதலுடைய. ஓரிடத்து நிகழும் பொருள் மற்றோரிடத்து நிகழாதனவு முள. ஒரு காலத்து அணியுங் கோலமும் ஒரு காலத்து வழங்காதனவுள. அவ்வக் காலமும் இடமும் பற்றிச் செய்யுள் செய்யவேண்டுமென்பது; ஒருகாலத்துக் குழை பெய்தாரென்றும், ஒரு காலத்துக் குழல்பட முடித்தாரென்றும், ஆண்மக்களை ஒழிந்த காலத்தும் அது கூறார். பதினெண்பாடை தேசிக மாக்கள் அணியினையுங் கோலத்தினையும் விரவிக் கூறுது அவ்வந் நாட்டார் பூணுமாற்றானும் புனையுமாற்றானும் ஏற்பச் சொல்லுதல் மரபு. இனி நான்கு நிலத்தினும், ஓரிடத்துப் பொருளை ஓரிடத்துளவாகச் சொல்லுதலும், உலகொடு மலைதலும் சமயங்களோடு மலைதலும் கலையோடு மலைதலும் பிறவும் இன்னோரன்னவும் பொருண் மரபின்பாற் பட்டடங்கும்....."
(தொல்காப்பியம், பொருள். 329. பேரா.)

''மரபே தானும்
நாற்சொல் லியலான் யாப்புவழிப் பட்டன்று''

என்னும் இச்சூத்திரத்துக்குப் பேராசிரியருக்கு (சில நூற்றாண்டுகள்) முன்னர் உரைகண்ட இளம்பூரணர்

''மரபாவது தான் இயற் சொல் திரிசொல் திசைச் சொல் வடசொல் என்னும் நாற்சொல்லின் இயற்கையானே யாப்பின் வழிப்பட்டது' '' என்று பொதுப்படக் கூறினர். தனது காலத்து வாழ்க்கை முறை, சிந்தனை ஆகியவற்றிற்கேற்பப் பொருள் மரபையுஞ் சேர்த்தார் பேராசிரியர். இதுதான் விமரிசனம்.

சிலப்பதிகாரம், திருக்குறள், திருக்கோவையார், பத்துப்பாட்டு, கலித்தொகை, முதலிய பழைய இலக்கிய நூல்களுக்கு அடியார்க்கு நல்லார், பரிமேலழகர், பேராசிரியர் நச்சினார்க்கினியார் போன்றோர் உரையெழுதிய போது சமுதாய மாற்றங்களையும் ஒழுக்க வேறுபாடுகளையும் கருத்து வேறுபாடுகளையும் மனத்திற் கொண்டே விளக்கமும் விமரிசனமும் கூறினர். இக்காலத்திலே இலக்கிய விமரிசனம் பற்றி நாம் பேசும்பொழுது அவர்கள் மரபையும் ஒரு சிறிது சிந்தித்தல் பயனுடையதாகும்.

---

# தமிழ் நாகரிகமும் பௌத்த சமயமும்

வண. ஹிஸ்ஸல்லே தருமரத்தின தேரர்

தமிழ் நாட்டிற்குப் பௌத்த சமயம் எப்பொழுது வந்தது? யாரால் கொண்டுவரப்பட்டது? என்ற வினுக்களுக்கு ஆராய்ச்சியாளர் பலவிதமான விடைகளை அளித்துள்ளார்கள். ஆனுல் அசோக சக்கரவர்த்தியின் கற்சாசனங்கள் இக்கேள்விகளுக்குத் தகுந்த மறுமொழிகளை அளிக்கின்றன.

அசோக மன்னனின் மகனுகிய மகிந்தர் என்பவர் கி. மு. 3-ம் நூற்ருண்டில் இலங்கைக்குப் புத்த மதத்தைக் கொண்டுவந்தார். இச்செய்தி இலங்கைச் சரித்திர நூல்களாகிய தீபவமிசத்திலும் மகாவமிசத்திலும் விரிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டிலேயே மகிந்தரால் தமிழ் நாட்டிலும் புத்த மதம் நிறுவப்பட்டது, என்று அசோக சாசனங்கள் கூறுகின்றன. மேலும் கடைச்சங்கத்திற்குரிய மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் பௌத்த மதத்தைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த இளம்போதியார் என்னும் பௌத்த புலவரால் இயற்றப்பட்ட செய்யுளொன்று நற்றிணை என்னும் சங்கநூலில் காணப்படுகின்றது. இக்காரணங்களைக்கொண்டு அசோக மன்னனின் காலத்திலேயே தமிழ் நாட்டில் புத்த மதம் பரவிற்றென்று அறிகின்ருேம்.

அன்றைய தமிழ்ச் சமுதாயத்தில் மாபெரும் புரட்சியை உண்டாக்கியது புத்தமதம். பழமை தொட்டு லௌகீக இன்பத்தில் ஈடுபட்டிருந்த தமிழரின் வாழ்க்கையை மாற்றியமைத்தது இம்மதமே. பௌத்த பிக்குகள் தமிழ் நாடெங்கும் தர்மோபதேசம் செய்து வந்தது மட்டுமன்றி தங்கள் பள்ளிகளில் சிறுவர்களுக்குக் கல்வியையும் போதித்தனர். அத்துடன் பஞ்ச சீலங்கள், அகிம்சை, சீவகாருணியம், பொது உடமை முதலிய அறநெறிகளையும் மக்களுக்கு எடுத்துரைத்தனர். அதன் பயனுக அச்சமுதாயத்தில் மலிந்து கிடந்த உயிர்க்கொலை, அடிமை வியாபாரம் முதலிய தீமைகள் குறைந்து போயின. சாதி வேற்றுமையினுல் ஒற்றுமையும், சகோதரத்துவமும் குன்றியிருந்த அச்சமுதாயத்தில் அப்பண்புகளை ஓங்கிவளரச்செய்தது. புத்த மதத்தில் ஏற்றத் தாழ்வு இல்லை. உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்ற பாகுபாடு இல்லை. பிறப்பினுல் ஒருவர் நீசனுகவோ பிராமணனுகவோ மாட்டார். அவரவர் ஆற்றும் கருமத்தாலேயே அவரவர் பிராமணனுகவோ நீசனுகவோ கருதப்பட வேண்டும் என்பது புத்தர் கொள்கை. இவ்வுபதேசங்களால் புத்துயிர் பெற்ற அச்சமுதாயத்திற்குப் புத்த மதம் அடைக்கலப் பொருளாயிற்று. இந்த வழியில் புத்த மதம் செல்வாக்கை அடைந்ததனுல் திராவிட நாகரிகம் மறுமலர்ச்சி பெற்று இலங்கிற்று என்பதில் ஐயமில்லை.

சங்ககாலப் புலவர்களுள் பலர் பௌத்தர்களாகவே விளங்கினர் என்பதற்கும், சிலர் பௌத்த சமயத்தை நன்கு அறிந்

திருந்தனர் என்பதற்கும் பற்பல சான்றுகளுள. இளம் போதி யார் என்பவர் சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு பௌத்த புலவர். அவரது பெயரே பௌத்தர் என்பதைத் தெரிவிக்கும். மணி மேகலை என்னும் பௌத்த நூலை இயற்றிய கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனுர் பௌத்தராகவே விளங்கினுர். அவர் பௌத்த கொள்கைகளையும், பௌத்த தத்துவ சாத்திரங்களை யும் கசடறக் கற்றவர் என்பதற்கு மணிமேகலையே சாலவும் சான்ருகும். சிலப்பதிகாரத்தில் பல பௌத்த கொள்கைக ளிருப்பதால் இளங்கோ அடிகள் புத்தமதத்தை நன்குணர்ந்த வர் என்பதில் ஐயமில்லை. தம்ம பதம் என்னும் அரியபெரிய பௌத்த நூலோடு ஒப்பிட்டுக் கூறத்தக்க திருக்குறளை யாத்த திருவள்ளுவர் பௌத்த சமயத்தைக் கற்றறிந்தவர் என்பதைத் திருக்குறளே காட்டுகின்றது. மேலும் கோவலனுடைய தந்தை யாரான மாசாத்துவான் என்பவர் பௌத்த சமயத்தவர். மாத வியின் மகளான மணிமேகலை என்பவள் துறவு பூண்டு பௌத்த பிக்குணியாக வாழ்ந்தாள். நாத குத்தனுர் என்பவர் ஒரு பௌத்த புலவர். பௌத்த மதக்கொள்கைகள் தமிழ் நாட் டில் பரவியதனுல் தமிழர்களின் பண்பாடு மேலோங்கியது. தமிழ் நாகரிகம் புத்துயிர் பெற்றது.

மேலும் தமிழ் நாட்டில் பல பௌத்த பிக்குகள் தோன்றி னர். அவர்கள் தமிழ் நாட்டிற்கும் பிற நாடுகளுக்கும் பல தொண்டுகளைச் செய்தனர். அவர்கள் இலங்கை முதலிய வெளி நாடுகளுக்கும் சென்று பௌத்த தருமத்தைப் பிரசாரம்செய்து வந்தனர். அத்துடன் தமிழ் மொழியில் பல பௌத்த நூல்களை யும் இயற்றினர். இவர்களுள் ஆசாரிய புத்த தத்த தேரர், தருமபால ஆசிரியர், போதி தருமர் முதலியோருடைய புகழ் இன்னும் மங்காதிருக்கின்றது. சோழ நாட்டில் பிறந்த ஆசா ரிய புத்த தத்த தேரர் இலங்கையில் அனுரதபுரத்திலிருந்த மகாவிகாரை என்னும் புத்த கோவிலில் சில காலம் தங்கியிருந் தார். இவர் பாளி மொழியில் பல நூல்களை இயற்றி வைத் தார். தருமபால ஆசிரியர் வட இந்தியாவிலிருந்த நாலந்தை என்னும் பல்கலைக் கழகத்தின் தலைமை ஆசிரியராக விளங்கினுர். தஞ்சையில் பிறந்த ஆசாரிய தருமபால தேரர் பாளி மொழி யில் இருந்த பதினுன்கு நூல்களுக்கு உரை நூல்களை இயற்றி னுர். போதி தருமர் காஞ்சிபுரத்திலிருந்து சீனு தேசத்துக்குச் சென்று பௌத்த தருமப் பிரசாரஞ் செய்தார். இன்னும், புத்த நந்தி, சாள புத்திரர், வச்சிரபோதி, புத்த மித்திரர், தீபங்கர தேரர், தர்மகீர்த்தி, திந்நாகர் முதலியோர் பெயர் போன பௌத்த பிக்குக்கள். இவர்களுட் பலர் இலங்கையில் தங்கிச் சமயத் தொண்டாற்றினர் என்று மகாவமிசம் என்னும் இலங்கைச் சரித்திர நூல் கூறுகின்றது.

தமிழ் நாட்டில் இருந்த பௌத்த திருப்பதிகளும் ஊர் களும் பண்டைக்காலத்தில் அந்நாட்டில் பௌத்த சமயம் சிறப்புற்று விளங்கிற்று என்பதற்குச் சிறந்த சான்றுகளாகும். சோழ நாட்டிலிருந்த காவிரிப்பூம் பட்டினம் சிறந்த பௌத்த நகரமாய் விளங்கிற்று. அறவண அடிகள், மணிமே

கலை முதலிய பௌத்த பெரியோர்கள் இந்நகரத்தில் தங்கி இருந்து சமயத் தொண்டுகளையும் சமுதாயத் தொண்டுகளையும் செய்தனர். சோழ நாட்டைச் சார்ந்த நாகைப் பட்டினமும் சிறந்த பௌத்த தலமாகவே விளங்கிற்று. பதினெட்டாம் நூற்றுண்டுவரை பல பௌத்த கோவில்களும், கோபுரங்களும், இங்கே இருந்தனவென்று வரலாறுகள் கூறுகின்றன. இன்னும் காஞ்சிபுரம். வஞ்சிமாநகர், உறையூர் முதலிய நகரங்கள் பௌத்த நகரங்களாகும். பௌத்த கல்வியோடு பௌத்த சிற்பங்கள் பௌத்த ஓவியங்கள் முதலியனவும் பௌத்த நாகரிகத்தின் அறிகுறிகளாகப் பலகாலம் இந்நகரங்களில் இருந்தன. தமிழ் நாட்டிலிருந்த பல பௌத்த விகாரைகள் இப்பொழுது இந்துக் கோவில்களாய் மாற்றி யமைக்கப்பட்டுள்ளன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

தமிழ் நாட்டில் பௌத்தப் பெரியோர்கள் சமயத்திற்கும் நாட்டிற்கும்,மக்களுக்கும் பல தொண்டுகளைச் செய்ததோடு தமிழ் மொழிக்கும்,தமிழ் இலக்கியத்திற்கும் சிறந்த தொண்டு களைச் செய்தார்கள்.

தமிழிலுள்ள ஐம்பெரும் காப்பியங்களுள் மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி ஆகிய பௌத்த காவியங்கள் பௌத்த புலவர்களால் இயற்றப்பட்ட நூல்களாகும். வீரசோழியம் என்னும் தமிழ் இலக்கிண நூல் புத்த மித்திரர் என்னும் பௌத்தரால் இயற்றப்பட்டது. இப்பொழுது மணிமேகலையும் வீரசோழியமும் மாத்திரம் எஞ்சியிருக்கின்றன. பெயர்களோடு இறந்து போன பௌத்த தமிழ் நூல்கள் எண்ணற்றவை. வளையாபதி, குண்டலகேசி, சித்தாந்தத் தொகை, திருப்பதிகம், பிம்பசாரகதை முதலிய நூல்கள் பெயர்களை விட்டுஅழிந்தன. பேர்பெற்ற புத்ததத்த தேரர் பாளிமொழி நூல்களுக்குப் பல உரைகள் பாளி மொழியில் எழுதியிருப்பதில் தென்னுட்டில் வழங்கிய பல பௌத்த கொள்கைகளை எடுத்துக் கூறியுள்ளார் என்றும்,அவற்றை அக்காலத்திலிருந்த தமிழ்ப்பௌத்த நூல்களினின்றும் எடுத்திருக்கக் கூடுமென்றும் ரைஸ் டேவிட்சு (Rhys Davids) என்னும் மேனுட்டு ஆராய்ச்சியாளர் கூறியுள்ளார். தமிழ்நாட்டுப் பௌத்தர்கள் பல பௌத்த நூல்களை இயற்றினர் என்பது இதனல் புலனுகும்

வேள்விகளில் உயிர்க்கொலை நீக்குதல், அரசமரத்தைத் தொழுதல், மடங்களை ஏற்படுத்துதல், அத்வைதம் உண்டாக்குதல் ஆகிய கொள்கைகள் இப்பொழுதும் தமிழ் நாட்டில் விளங்குகின்றன. இவை பௌத்த கொள்கைகள் என்பதை மறக்கக் கூடாது. தமிழ் மொழியில் கலந்திருக்கும் ஆராமம், சமணர், சைத்தியம், சேதியம், தூபம், தூபி, தேரர், தேரி, பிக்கு, பிக்குணி, விகாரம், விகாரை, வேதி, வேதிகை முதலிய பாளி மொழிச் சொற்களும் பௌத்த மதம் தமிழ் நாகரிகத்திற்கு ஆற்றிய தொண்டுகளை நினைவூட்டுகின்றன.

# அவனும் அவரும்

சி. தில்லைநாதன்

மணி ஒன்பதுக்கு மேலாகி விட்டது. முருகனுக்கு வயிற்றைக் கிண்டியது. கோப்பி குடிக்காமல் படுக்கையை விட்டு எழுந்திருக்க முடியாதவனுக அவன் பிறந்திருக்காவிட்டாலும், ஒன்பது மணியாகியும் ஒன்றும் இல்லாமல் வேலை செய்ய அவன் வயிறு இடங்கொடுக்குமா? தனது களைப்பை எல்லாம் ஒன்ருக்கி, ஓட்டமும் நடையுமாக வந்த பொன்னி மீது செலுத்தினுன்.

''அடி கழுதை மனிசன் விடியப்புறம் வந்தால் நேரத்தோடை ஏதாலும் கொண்டரப்படாதே?''

''நான் என்ன இரும்பே? காலமை பெடியனைப் பள்ளிக்கு விட்டிட்டு வர வேண்டாமே?''

''பெடியனும் பள்ளிக்கூடமும் அது வேறை இளவு.''

''அவனையும் உன்னைப்போலை நிலத்தைக் கிண்டிப் பட்டினி கிடக்க வைக்கப் போறியே?''

''ஓ! உங்கை படிச்சுத்தான் புடுங்கிக் கொட்டப் போருங்கள்.''

''சும்மா ஏன் வளவளெண்டு கத்திருய்? விசர்க் கதையை விட்டிட்டு அதைப்போய்க் குடியன்.''

முருகன் பொன்னி கொண்டுவந்த பழஞ்சோற்றுத் தண்ணீரை மிளகாயுடன் கடித்துக் குடித்துவிட்டு அவளுக்கு உதவியாய்க் கிழங்கு பிடுங்கி அவளைச் சந்தைக்கு அனுப்பிவிட்டு மீண்டும் மண்வெட்டியைத் தூக்கிக் கொத்தலானுன்.

வரம்பு வழியாக நமசிவாயம் வந்தார். நெற்றியிலே மூன்று குறி நீறு. நடுக்குறியின் மையத்தில் ஒரு சதப் பிரமாணத்தில் சந்தணப் பொட்டு. கையிலே குடை. நமசிவாயத்தைக் கண்டதும் முருகன் மண்வெட்டியையும் போட்டுவிட்டு, தலையில் கட்டியிருந்த கந்தல் துண்டை எடுத்துக் கக்கத்துள் வைத்துக் கொண்டு நாணிக் கோணி நின்ருன். அவனது நெற்றி வியர்வை சவரஞ் செய்யாது முகத்தில் வளர்ந்திருந்த மயிருக்கூடாக வழிந்து நிலத்தில் வீழ்ந்தது.

''கமக்காரன்! ஏது இந்தப் பக்கம்?''

''என்ன முருகா இன்னும் அந்தக் குத்தகைக் காசிலை மிச்சம் அஞ்சு ருவாயைக் கொண்டந்து குடுக்கேலை.''

''என்ன கமக்காரன் செய்யிறது? ஒரு வரும்படியுமில்லை. பாழாய்ப்போன மழையும் வருகிதில்லை. எப்பிடியண்டாலும் அடுத்த கிழமை தந்திடுகிறன்.''

''உன்னை அந்த மாட்டுக் கொட்டிலையல்லே வந்து மேஞ்சு விடச் சொன்னனுன்? உங்களுக்கு வரவரத்திமிர் அதிகமாகுது.''

அப்பிடிச் சொல்லாதையும் கமக்காரன். வேலை கொஞ்சம் கனக்க. ஒரு மழை பெய்தால் ஓய்விருக்குமண்டா அதுகும்......''

''மழை கிழை வந்தா மாடுகளை எங்கையடா கட்டிறது? அதுகள் நனையிறதே?''

''இல்லை கமக்காரன். கோவிக்காதையும். நாளைக்கு எப்பிடி யண்டாலும்......''

''என்னடா நாளைக்கு? இண்டைக்கு வந்து அதை மேஞ்சு போடு. மழைக் கோலமாய்க் கிடக்கு. நாளைக்கு வந்து அந்த முத்தத்து வேலியையும் கட்டிவிடு.''

''சரி கமக்காரன். வாறன்.''

"அதெல்லாமிருக்க அம்மன் கோயிலிலை இண்டைக்கு என்ரை திருவிழா. வேளைக்கு வந்து கொஞ்சம் விறகு கொத்தி விடு. காய் பிஞ்சேதும் கிடக்கே?

''கத்தரியிலை பூவும் இல்லைக் கமக்காரன். பூசணி குருமன டிச்சுப் போச்சு. கிடந்த தக்காளிக் காயளை ஆரோ காணுமல் புடுங்கிக்கொண்டு போட்டாங்கள். கிழங்குதான் கிடக்குது. நீர் என்னண்டு கொண்டு போறது? நீர் போம். நான் பேந்து வரேக்கை கொண்டாறன்.''

காணிகளைச் செய்வதற்குக் குத்தகையே கொடுக்கவிய லாதபோது எடுபிடி வேலைகள் செய்வதோடு காய்கறி வேறு சும்மா தானம் செய்ய வேண்டியிருக்கிறதே என்று முருகனின் மனதுக்குள் தோன்றிய எரிச்சல் மனதிலேயே தீய்ந்து கொண்டி ருக்கையில் பொன்னி வந்தாள்.

''ஏனடி எவ்வளவு காசுக்கு வித்தாய்?''

''ஒண்டரை உருவாய். ஒரு கொத்து அரிசியும் உப்புப் புளியும் வாங்கினன்.''

''போச்சு! உனக்கு ஒவ்வொரு நாளும் அரிசி சாமானுக் குத்தான் போதும்.''

''பின்னை என்னத்தை விழுங்கப் போருய்?''

''சரியடியாத்தை. அந்தத் தக்காளி வேலியைக் கட்டு.''

வேலியைக் கட்டியவாறே பொன்னி அவசரப் பிரச்சினைகளை அலச ஆரம்பித்து விட்டாள்.

"வீட்டுக் கூரையெல்லாம் பிஞ்சுபோச்சு, மழை வந்தால் என்ன செய்யிறது?"

"மேயக் காசுக்கு ஆர் வீட்டை போறது? நான் என்ன கிண்டி அள்ளிறனெண்டு நினைப்பே?"

''மழை வந்தால் எங்கை படுக்கிறதெண்டாவது யோசிக்க வேண்டாமே?"

"சரி சரி! இண்டைக்கு நமசிவாயத்தாற்றை மாட்டுக கொட்டில் மேயப்போறன். அதிலை மிஞ்சிற ஓலையைக் கேட்டுப் பாப்பம், பழம் ஓலையோடை கலந்து கிலந்து இப்போதைக்கு ஒருவழி பண்ணுவம்!''

"நீ உன்ரை பாட்டுக்கு வயலும் நீயுமண்டு திரியிறாய். வீட்டிலை ஒரு குமர் இருக்கண்டு உனக்கு எண்ணமிருந்தால் தானே''

"என்னடியாத்தை சும்மா ஓயாமல் என்ரை உயிரை எடுக்கிறாய்? வீட்டை மேய், கலியாணத்தைக் கட்டு எண்டு கத்திக் கொண்டிருந்தால் நான் என்ன செய்யிறது?''

''என்ன ரோசம் வந்திட்டுது உனக்கு? அவளாவது ஏதும் தொழில் செய்யிறவனைக் கட்டிக் கொஞ்சமண்டாலும் நல்லாயிருக்க வேணுமண்டு நான் பட்டினிகிடந்து சேத்து அந்தச் சங்கிலியையும் காப்பையும் வேண்டிப் போட, அதையும் கொண்டுபோய் அடைவுவைச்சுப்போட்டு...''

பொன்னியின் குரல் கம்மியது. கண்களில் நீர் வழிந்தது. முருகன் பொன்னியைத் தேற்ற முனைந்தான்.

"கவலைப்படாதையடியாத்தை, எனக்கும் அதுதானே ஆசை. அவளை நிலையான சம்பளம் கிம்பளம எடுக்கிறவனாய் ஒருதனுக்குக் கட்டிக் குடுக்கவேணும். அதுக்காகத்தானே நான் இவ்வளவு பாடு படுகிறன். இல்லாட்டி எங்கடை கஞ்சிக்கு ஏதும் கூலிவேலை செய்யலாம். நான் என்ன குடிக்கிறனே? வெறிக்கிறனே? நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் அந்தக் கடவுள் எங்களுக்குப் பாதகமாகத்தானே இருக்கிறார்." முருகனின் குரல் தளதளத்தது. பொன்னிக்கு ஏன் தான் அப்படி யெல்லாம் பேசி அவனுக்குக் கவலையுண்டாக்கினேமோ என்று மன வேதனை பிறந்தது. அவனை அவள் வழக்கம்போலத் தேற்றினாள்:

"என்ன செய்யிறது? எல்லாம் எழுதின எழுத்துப்படி நடக்கும்?" இருவரது பெருமூச்சுக்களும் ஒன்றாகக் கலந்தன.

நமசிவாயம் வீட்டு வேலைகள் முடிய மாலை ஐந்து மணியாகி விட்டது. முருகன் அங்கிருந்து நேரே வயலுக்குப் போய்த் தொடர்ந்து கொத்தினன். வானம் கறுத்து மழை மெல்லத் தூற ஆரம்பித்தது

“அட இந்தப் பாழாய்ப்போன மழை இப்போதா வர வேண்டும்?”

வயலை நினைத்து மழை வரவேண்டுமென்று நேர்ந்த முருக னுக்கு இப்போ வீட்டு நினைப்பு வந்துவிட்டது. மண்வெட்டி யைத் தோளிலே போட்டுக்கொண்டு வீட்டுக்கு ஓடினன். வீடென்ன? அதுகூட அவர்களின் வாழ்வைப்பார்த்து வாய் திறந்து சிரித்தது.

“எடி சுறுக்காய்ப் பானைசட்டியை மூடிப்போட்டுப் பாயைச் சுறுட்டு, கோவில் தாவாரத்துக்குப் போவம்.”

“அங்கை இண்டைக்குத் திருவிழாவல்லே.”

“எட! அதை மறந்து போனன். அதுகும் இண்டைக்குத் தான் நடக்க வேணுமே? அடகடவுளே! சரி நீ சுறுட்டு நம சிவாயத்தாற்றை மாட்டுக் கொட்டிலுக்குப் போவம்.”

“அவை பூட்டிக்கொண்டு கோயிலுக்குப் போயிருப்பினை யல்லே?”

“பாழாய்ப்போக, அப்ப எங்கை போவம்? எடே தம்பி!”

“அப்பு! புத்தகம் வேண்டாமல் வாத்தியார் பள்ளிக்கு வர வேண்டாமாம். அம்மா காசில்லையாம்.”

“போடா கழுதை, நீ பள்ளிக்குப் போனது காணும், சாணு கத்திலை அள்ளிச்சேர். பொயிலைக் கண்டுக்குப் போடலாம். அந்த விளக்கிக்கை எண்ணெய் இல்லை. நூரமுந்திப் போய் நூர்த்துவிடு. நாங்கள் அந்த வயல் மாட்டுக் கொட்டிலுக்குப் போவம். ஏனடா கொக்கா எங்கை?”

“அவ சுப்பனேடை கதைச்சுக்கொண்டு எங்கையோ போட்டா.”

முருகனும் பொன்னியும் திடுக்கிட்டுப் போனர்கள். அவர் களுக்குத் தலையில் வானமே இடிந்து விழுந்தது போலிருந்தது. முருகன் கையில் சுருட்டி வைத்திருந்த பாய் கைநழுவிற்று. பொன்னி கையில் இருந்த சோற்றுப்பானை அவளது ஆசைபோல் விழுந்து நொறுங்கிச் சிதறியது. இருட்டில் ஒருவரை ஒருவருக் குத் தெரியவில்லை.

“ஏனடா என்னட்டை வந்து சொல்லேலை?”

ஆத்திரத்தில் பொன்னி மகனை அடித்தாள். அவன் வீறிட்டு அழுதான்.

"நான் போய் நமசிவாயத்தாரிட்டைச் சொல்லி அந்தப் பயலை என்ன செய்யிறன் பார்!"

ஆவேசத்துடன் முருகன் மழையில் நடந்தான். பொன்னி ஒரு கப்போடு ஒப்பாரி வைத்தாள். பையன் ஒழுக்கில்லாத ஒரு மூலையில் முடங்கிக்கொண்டு அழுதான்.

சில மாதங்களின் முன்னர் நமசிவாயத்தின் தூரத்து உறவினனை ஒரு ஏழைப் பையன் நமசிவாயத்தின் செல்வ மகளோடு நட்புக்கொண்டிருந்ததற்காக, அவன் மீது பொய்க் குற்றஞ் சாட்டி அவனை நமசிவாயம் சிறைக்கு அனுப்பிவைத்ததை முருகன் அறிந்திருந்தான்.

மழைக் குளிரில் நடுங்கியபடியே உள்ளமும் படபடக்க நடந்த முருகன் கோவிலடியில் நமசிவாயத்தைச் சந்தித்து நடந்ததைச் சொல்லி அழுதான். அவர் முகத்தில் ஒரு கேலியும் குறும்பும் கலந்த சிரிப்பு.

"அதுக்கென்னடா? அவனும் அவளும் விரும்பினால் கூடி வாழட்டுமே!"

"இல்லைக் கமக்காரன், அவளை ஒரு நல்ல இடத்திலை செய்து வைத்து அவள் சந்தோஷமாய் இருக்கிறதைப் பாக்கத் தானே இவ்வளவு கஷ்டப்பட்டன்."

நமசிவாயம் மீண்டும் சிரித்தார். அவருடைய கருணையுடன் தான் சுப்பன் காரியத்தில் இறங்கினான் என்பது அந்தச் சிரிப்பிலே தெரிந்தது. அதை முருகனால் உணர முடியவில்லை.

"ஏன்ரா அவனும் உன்னைப்போலைதானே! நான் சொல்லிறதைக் கேள். இல்லாட்டி எனக்குக் கெட்ட கோவம் வரும். நீ போடா வீட்டை. ஏதோ பெரிய குடும்ப கௌரவம் கெட்டுப் போன மாதிரி! நீ என்ன மகாராசனே பெரிய இடத்திலை சம்பந்தம் செய்ய? போடா, கோவில்லை சத்தம் போடாமல் போய் உன்ரை வேலையைப் பார்."

நமசிவாயம் சர்வ சாதாரணமாகத் தூக்கி எறிந்துபேசினார். முருகனின் ஆத்திரம் அதிகரித்து உள்ளம் கொதித்தது, கொதித்த உள்ளத்துடன் மழையிலே நனைந்தபடி முருகன் தன் குடிசையை நோக்கி நடந்தான்.

# ஈழமும் தமிழ் இலக்கணமும்

சு. வித்தியானந்தன்

தமிழ் மொழியின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத பல துறைகளில் ஈழநாட்டுப் பெரியாரே தமிழ் நாட்டவருக்கு வழி காட்டியிருக்கின்றனர். தமிழ்நாடு தமிழின் உயர்வினை மறந்த காலங்களில் அதனை நினைவூட்ட ஈழத்திலிருந்தே அறிஞர் தோன்றினர். இவர்களுட் பலர் புதிய இலக்கண நூல்கள் எழுதியும் பழைய இலக்கண நூல்களைப் பதிப்பித்தும் சிறந்த தொண்டாற்றினர்.

ஒரு மொழிக்குச் சிறப்புக் கொடுப்பது இலக்கணம். வயலுக்கு வரம்பு எவ்வாறு இன்றியமையாததோ, குளத்திற்கு அணைக்கட்டு எவ்வாறு அவசியம் தேவைப்படுகின்றதோ, அவ்வாறே மொழிக்கும் இலக்கணம் இன்றியமையாததாகின்றது. இலக்கணம் இல்லாத இடத்து மொழி சிதைந்து அழகு குன்றிச் சீர்கெட்ட நிலையை எய்தும். ஆகவேதான் இலக்கணம் ஒரு மொழிக்கு முதுகெலும்பு போலக் கருதப்படுகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே வாழ்ந்த ஈழத்துப் பேரறிஞர் பலர் இதனை நன்கு உணர்ந்திருந்தனர். தமிழ் மொழியின் சீர் குலையாமல் இருப்பதற்குத் தமிழ் இலக்கண நூல்கள் சிலவற்றை அச்சுவாகனம் ஏற்றி, அவற்றை மக்களுக்குப் பயன்படும் வண்ணம் செய்வதற்குப் பலர் முன்வந்தனர். அவர்களிலே தலைசிறந்தவர் சி. வை. தாமோதரம்பிள்ளை.

இலக்கண நூல்களைப் பொதுமக்கள் கற்க மாட்டார்கள். அந்நூல்கள் விலை போவதும் மிகக் குறைவு. எனினும், தமிழ் மொழி மேலுள்ள பற்றினால், குடந்தையில் வழக்கறிஞராக இருந்த போது அச்சிடப் பெறாத அருமையான பழந்தமிழ் நூல்கள் பலவற்றை இவர் பனையோலைச் சுவடிகளைக் கொண்டு பரிசோதித்தார். ஏட்டுச் சுவடிகள் நீர் வாய்ப்பட்டும், தீவாய்ப்பட்டும், சிதல்வாய்ப்பட்டும் மறைந்து கிடந்தன. இந்நிலையைக் கண்ணுற்று உள்ளம் துடிதுடித்து அவர் கூறுகிறார் :—

''ஏடு எடுக்கும் போது ஓரம் சொரிகிறது; கட்டு அவிழ்க்கும் போது இதழ் முரிகிறது. ஒற்றை புரட்டும் போது துண்டு துண்டாய்ப் பறக்கின்றது. இனி எழுத்துக்களோ என்றால் வாலும் தலையுமின்றி நாலு புறமும் பாணக்கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கின்றது.''

''பழைய சுவடிகள் யாவும் கிலமாய் ஒவ்வொன்றாய் அழிந்து போகின்றன. புது ஏடுகள் சேர்த்து அவற்றை எழுதி வைப்பாரும் இலர். துரைத்தனத்தாருக்கு அதன்மேல் இலட்சியமில்லை. சரஸ்வதியைத் தம் பால் வகிக்கப்பெற்ற வித்துவான்களை அவள் மாமி எட்டியும் பார்க்கின்றாளில்லை. திருவுடையீர்! நுங்கருணை

இந்நாள் தவறினுல், பின்பு தவம் புரிந்தாலும் ஒரு தரம் அழிந்த தமிழ் நூற்களை மீட்டல் அரிது. யானைவாய்ப் பட்ட விளம் பழத்தைப் பின் இலண்டத்துள் எடுத்துமென்? ஓடன்ருே கிட்டு வது! காலத்தின் வாய்ப்பட்டஏடுகளைப் பின் தேடி எடுப்பினும் கம்பையும் நாராசமுந்தான் மீளும்!''

''எத்தனையோ திவ்ய மதுர கிரந்தங்கள் காலாந்தரத்தில் ஒன்றன்பின் ஒன்ருய் அழிகின்றன. சீமான்களே! இவ்வாறு இறந் தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்ருவது கிருபை பிறக்க வில்லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்! அயலான் அழியக் காண்கி லும் மனந் தளம்புகின்றதே! தமிழ் மாது நும் தாயல்லவா? இவள் அழிய நமக்கென்னவென்று வாளா இருக்கின்றீர்களா? தேசாபிமானம், மதாபிமானம், பாஷாபிமானம் என்று இவை இல்லாதார் பெருமையும் பெருமையாமோ? இதனைத் தயை கூர்ந்து சிந்திப்பீர்களாக!''

இவ்வாறு உள்ளங் கொதித்து ஆவேசத்துடன் கூறுகின்ருர் சி. வை. தாமோதரம்பிள்ளை. இது வரை எவரும் எட்டியும் பாராத துறையிற் பணியாற்ற முன்வந்தார். தன்னந்தனிய ஞய்ப் பழைய தமிழ் இலக்கணப் புதையலைத் தமிழ் மக்களுக்கு அகழ்ந்தெடுக்கும் அரும் பணியில் ஈடுபட்டார். இச்சேவையில் ஏற் பட்ட இடைஞ்சலுக்கோ குறைவில்லை. இலக்கண ஏட்டுப் பிரதி களைப் பெறுவது மிகவும் கடினமாக இருந்தமையால், பலர் வீடுகள் தோறும் சென்று பிரதிகள் தேடவேண்டிய நிலை ஏற்பட் டது. ஏடுகளை வைத்திருப்போரிடம் அவற்றைப் பெறுவது இன் னும் கடினமாயிருந்தது. ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கி, ஆராய்ந்து பிழைகளை அகற்றிப் பிரதி செய்வது பொறுப்பாக இருந்தது. மேலும் அக்காலத்தில் நூல்களைப் பதிப்பிப்பதற்கு அதிக பணம் தேவைப்பட்டது. இத்துறையில் பணம் செலவிட முன் வருவோர் தொகை குறைவாக இருந்தது. நூல்களைப் பரிசோ தித்துப் பதிப்பவரே முதற் பணம் பொறுக்க வேண்டியிருந்தது. இன்று போல அக்காலத்தில் நூல்களைப் பெற்று வெளியிடும் பதிப் பகங்கள் கிடையா. அத்துடன் இவ்வளவு இடையூறுகளையும் தாண்டி நூலைப் பதிப்பித்தாலும், அதனைப் பாராட்டுவோர் இல்லை; இகழ்ந்து கூறப் பலர் முன்வரிசையில் நின்றனர். இத் தகைய தடைகள் எதிர்ப்பட்டபோதும் தாமோதரம்பிள்ளை அவர் கள் உள்ளம் தளரவில்லை. முழு நம்பிக்கையுடன் தான் செய்யத் தொடங்கிய பணியைத் தொடர்ந்து நடத்தினர். இவரின் விடா முயற்சியாலேயே, தமிழ்த் தாயை இன்று அலங்கரித்து விளங்கும் இலக்கண நூல்கள் பல தோன்றின.

தமிழ் மொழியில் இன்று கிடைத்துள்ள மிகப் பழைய இலக் கண நூல் தொல்காப்பியமாகும். தமிழின் தொன்மையையும் செம்மையையும் எடுத்துக் காட்டும் ஒப்பற்ற இந்நூல் முழுவதை யும் முதன் முதலாகப் பதிப்பித்த தனிச் சிறப்பு இவருக்கே உரி யது. நச்சினுர்க்கினியர் உரை எழுதிய எழுத்ததிகாரமும், ஐந் தியல் நச்சினுர்க்கினியர் உரையும் ஏனைய பேராசிரியர் உரையுமா யுள்ள பொருளதிகாரமும், ஆறுமுகநாவலர் பரிசோதித்த சேனு

வரையர் உரையைக் கொண்ட சொல்லதிகாரமும் இவராற் பதிப் பிக்கப்பட்டன. நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே யென்று வாதாடிய நக்கீரர் இயற்றியதாகக் கொள்ளப் படுவதும், பழந்தமிழ் உரைநடைக்கு ஓர் எடுத்துக் காட்டாக இலங்குவதுமாகிய இறையனூர் அகப்பொருளுரையும் இவர் பதிப் பித்ததே. மேலும் இவர் வெளியிட்ட வீரசோழியம் தமிழ் மொழி யின் வரலாற்றிலே தனியிடம் பெற்றுள்ளது. பதினோராம் நூற் ருண்டிற் புத்தமித்திரர் எழுதிய இவ்விலக்கணம், இடைக்கால இலக்கியத்திற்கு இலக்கணமாகக் கொள்ளப்படுகின்றது. குட்டித் தொல்காப்பியம் என்று போற்றப்படும் சிறப்புவாய்ந்த இலக் கண விளக்கத்தையும் இவரே பதிப்பித்தார். வைத்தியநாத தேசி கர் இயற்றிய இந்நூல் இலக்கண அறிவு படைத்தோர் போற் றற்குரிய ஏற்றம் வாய்ந்தது. இவ்வாறு பல இலக்கண நூல்களை முதன் முதற் பதிப்பித்து, தமிழரின் இலக்கணப் பயிற்சியை குன்றவிடாது இப்பெரியார் ஆற்றிய தொண்டு போற்றற் குரியதே.

இலக்கண நூற் பதிப்பாசிரியருள் அடுத்துக் குறிப்பிடற்குரிய வர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர். தொல்காப்பியம் சேனுவரையர் உரை, இலக்கணக் கொத்து, தொல்காப்பியச் சூத் திர விருத்தி, பிரயோக விவேகம், நன்னூல் விருத்தியுரை முதலி யன இவர் பதிப்பித்த இலக்கண நூல்கள். இவர் பெயரால் இன்று வழங்கும் நன்னூற் காண்டிகையுரை கற்றோராற் போற் றப்பட்டுப் பெரிதும் வழக்கில் இருந்து வருகின்றது. நாவலர் பதிப்பு என்றால் நல்ல பதிப்பு என்ற பெருமை இவர் பதிப்பித்த இலக்கண நூல்களுக்கும் உண்டு.

திருகோணமலையைச் சேர்ந்த தி. த. கனகசுந்தரம் பிள்ளையும் தொல்காப்பியத்தையும் சங்க இலக்கியங்களையும் ஏட்டுப் பிரதி கள் பலவற்றோடு ஒப்ப நோக்கி ஆராய்ந்து, உண்மைப் பாடங் களையும் நுண்பொருள்களையும் கண்டு தொல்காப்பியம் எழுத்ததி காரத்தையும் சொல்லதிகாரத்தையும் வெளியிட்டார். சூத்திரங் களிற் சிலவற்றைத் திருத்தியும், படிப்போருக்கு எளிதில் விளங் கும் வண்ணம் உரையிலுள்ள உதாரணங்களுக்கு இடங்காட்டியும் இவர் பதிப்பித்த எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரையும் சொல்லதிகாரம் சேனுவரையர் உரையும் சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளன. சுன்னாகத்துக் குமாரசாமிப் புலவரோடு சேர்ந்து நம்பியகப்பொருளுக்கு உரை எழுதியும் வெளியிட்டார்.

புலோலியைச் சேர்ந்த வ. குமாரசாமிப் புலவர் சிறு பிள்ளை களோடும் கல்வியறிவற்ற மக்களோடும் பேசும்போது இலக்கண வழுவின்றிப் பேசும் வழக்கம் உடையவர். அதனால், இவர் இலக் கணக் கொத்தர் எனப் பலராலும் அழைக்கப்பட்டனர். இவரும் நன்னூற் காண்டிகை உரையைத் திருத்தி அச்சிட்டனர்.

ஐந்திலக்கணங்களில் ஒன்றாகிய யாப்பை எடுத்துக் கூறும் நூல் யாப்பருங்கலக்காரிகை. இதனை இயற்றியவர் பதினோராம்

நூற்றுண்டுக்குரிய அமிர்தசாகரர். யாப்புப் பயிலுவோருக்குப் பெரிதும் பயன்படும் இந்நூலை உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர் பதிப்பித்தார்.

தொல்காப்பியம் முழுவதற்கும் சிறந்த உரை விளக்கம் எழுதியவர் மகாவித்துவான் சி. கணேசையர் அவர்கள். இளம்பூரணர், தெய்வச்சிலையார், கல்லாடர், சிவஞான முனிவர், இலக்கண விளக்க நூலுடையார் போன்றோரின் முடிபுகளையும் ஆராய்ந்து தாம் வந்த முடிபையும் தமது பதிப்பில் வெளியிட்டுள்ளார். இவரின் உரைவிளக்கக் குறிப்புக்களைக் கொண்ட தொல்காப்பியப் பதிப்பை, முன் எவரும் பதிப்பிக்காத முறையில் மிக அழகாக வெளியிட்டுதவியவர், ஈழகேசரி அதிபர் திரு. நா. பொன்னையா அவர்களே. தொல்காப்பியம் முழுவதையும் முதன் முதலிற் பதிப்பித்த பெருமை சி. வை. தாமோதரம்பிள்ளைக்கே உரியதென முன்பு கூறப்பட்டது. சி. வை. தாமோதரம்பிள்ளைக்கு முன்பே 1847ம் ஆண்டில் மழவை மகாலிங்கையர் தொல்காப்பிய எழுத்ததிகாரத்தை நச்சினார்க்கினியர் உரையோடு பதிப்பித்திருந்தார். அதன் பின்பே, 1868ல் தாமோதரம்பிள்ளை தொல்காப்பியச் சொல்லதிகாரத்தைச் சேனாவரையர் உரையோடு பதிப்பித்தார். அதன் மேல், எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியம் மகாலிங்கையர் பதிப்புக் கிடையாமையால், பலர் வேண்டுகோளுக்கிணங்கத் தாமோதரம்பிள்ளை அவர்கள் அதனைத் திருப்பிப் பதிப்பித்தார். 1885ல் பொருளதிகாரமும் தாமோதரம்பிள்ளையாற் பதிப்பிக்கப்பட்டது. எனவே, தொல்காப்பியம் முழுவதினையும் அச்சுவாகனமேற்றிய பெருமை தாமோதரம்பிள்ளையவர்களைச் சாரும். அவரைப் பின்பற்றி உரை விளக்கக் குறிப்புடன் தொல்காப்பிய மூன்றதிகாரத்தையும் சிறந்த முறையில் வெளியிட்டவர் கணேசையரே.

கணேசையர் தமது இருபத்தைந்தாவது வயதிலேயே அரிய இலக்கண ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதத் தொடங்கினர். இவை செந்தமிழ் இதல் வெளிவந்தன. அக்காலத்தில் இவருக்கும் அரசன் சண்முகனாருக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. தொல்காப்பியப் பாயிரம், முதற் சூத்திரம் ஆகியவற்றிற்கு அரசன் சண்முகனார் 'சண்முக விருத்தி' என்னும் பெயரில் எழுதிய விருத்தியுரையில், ஆகுபெயர் வேறு அன்மொழித் தொகை வேறு என்று நிறுவிய கொள்கையை எதிர்த்து, அவை ஒன்றே எனத் தாம் செந்தமிழில் எழுதிய கட்டுரையில் கணேசையர் நிறுவினர். வேறு பல இலக்கண ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் இவர் செந்தமிழில் எழுதினர். தாம் பின்பு வெளியிட்ட தொல்காப்பியப் பதிப்புக்களில் இவற்றை அனுபந்தமாகச் சேர்த்தார். அளபெடை, போலி எழுத்து என்பன எழுத்ததிகாரப் பதிப்பிலும், தொல்காப்பியச் சூத்திரப் பொருளாராய்ச்சி, பிறிது பிறிதேற்றல், ஆறனுருபு பிறிதேற்றல், இரு பெயரொட்டாகு பெயரும் அன்மொழித் தொகையும், தொகை நிலை என்பன சொல்லதிகாரப் பதிப்பிலும், சிறு பொழுதாராய்ச்சி என்பது பொருளதிகாரப் பதிப்பிலும் சேர்க்கப்பட்டுள்ளன.

இலக்கண நூல்களைப் பரிசோதித்துப் பதிப்பதோடு நில்லாது, இலக்கண நூல்களும் எழுதினர் ஈழத்துப் பெரியார்கள். பழங்காலத்து இலக்கண நூல்கள் வடமொழிப் பண்பைப் பின்பற்றிச் சூத்திரங்களால் இயற்றப்பட்டவை. எனவே, யாவரும் எளிதிற் கற்றறிவதற்கேற்ற, எளிய உரை நடையில் இலக்கண நூல்கள் இயற்றத் தொடங்கினர் பலர். இவர்களிலே தலை சிறந்து விளங்கியவர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர். இவர் எழுதிய இலக்கணச் சுருக்கம் என்னும் நூல் மாணவரிடையே பெரிதும் பயின்று வருகின்றது. இலக்கண வினு விடையும் இவரால் இயற்றப்பட்ட நூலாகும்.

யாழ்ப்பாணத்திற் சங்குவேலியில் வாழ்ந்த சிதம்பரப் பிள்ளை (உவில்லியம் நெவின்ஸ்) என்பவர், இலக்கண விதிகள் சிலவற்றைத் திரட்டித் தமிழ் வியாகரணம் என்னும் நூலை வெளியிட்டனர். இந்நூலின் மூன்றும் பருவமாகிய வசன இலக்கணம் வாக்கியம் எழுதுவோருக்குப் பெரிதும் பயன்படும். இதில் முடிப்பு என்னும் பகுதியிற் சில சொற்களைப் பிரித்துக் கூறிய தாதுக்களை நோக்கும் போது, இவருக்குப் பிற்பட்ட காலத்தவர் சில பதங்களைப் பிரித்துத் தாது காட்டி, நூல்கள் எழுதுவதற்கு வழிகாட்டியவர் இவரேயெனத் தெரிகின்றது.

சுன்னுகத்துக் குமாரசுவாமிப் புலவர், நடவாமடி சீ முதலாக நன்னூலார் வகுத்துக் கூறிய இருபத்து மூன்றீற்றினுள்ளும் அடங்கிய வினைப் பகுபதங்களுக்கும் அவ்வவற்றின் அடியாகப் பிறந்த பெயர்ப்பகுபதங்களுக்கும் பகுதி விகுதி முதலிய உறுப்புக்களைப் பகுத்துக் காட்டி, நூல் ஒன்று இயற்றி, அதனை வினைப்பகுபத விளக்கம் என்னும் பெயரில் அச்சிட்டு வெளியிட்டார். இந்நூலின் பொருள் அமைப்பு சிறந்ததாகப் பாராட்டப்படுகின்றது.

ஆறுமுக நாவலரின் தமையனின் மகனுன த. கைலாசபிள்ளை அவர்கள் வசனநடை எழுதுவோருக்கு உதவியாக வசன இலக்கண நூல் ஒன்றனை எழுதி வெளியிட்டார். அதன் பின், விரிவாக ஒரு வசன இலக்கண நூல் எழுதியதாகவும் கூறுவர். இது வெளிவரவில்லை. பவணந்தி முனிவரது சூத்திரங்களைத் தழுவி இலகுவான உரை நடையில், விரிவான இலக்கண நூல் எழுதினுர் கௌரவ திரு. பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள். இது செந்தமிழ் இலக்கணம் என வழங்கும்.

பன்மொழி அறிஞரும் தமிழ் மொழியே உலகம் தோன்றிய பொழுது உண்டான மொழி என்று வாதாடியவருமாகிய நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் தமது பரந்த அறிவின் துணைகொண்டு 'தமிழ் அமைப்புற்ற வரலாறு' என்ற நூலை எழுதினுர். சொற்பிறப்பு ஆராய்ச்சி என்ற நூலைத் தன்னந்தனியனுக எழுதி வந்தார். சொற்கலை ஆக்கத்திற்கு இவர் ஆற்றிய தொண்டுகளை வியந்த பெரியோர் 'சொற்கலைப் புலவர்' என்ற பட்டம் அளித்து இவரைப் பெருமைப்படுத்தினர்.

மேலே கூறியவற்றை நோக்குமிடத்து இலக்கணத் துறையில் ஈழத்துப் பெரியார் ஆற்றிய தொண்டு நன்கு புலப்படும். பத்தொன்பதாம் இருபதாம் நூற்றுண்டுகளில் தமிழ் மொழி வரம்பிகந்து அழிந்தொழியாமற் காத்தவர் ஈழத்தவரே. இலக்கண மரபைப் பாதுகாத்து வந்தவர் ஈழத்தவரே எனினும் மிகையாகாது. ஈழத்திலே பல உரையாசிரியர்கள் இவ்விரு நூற்றுண்டிலும் திகழ்ந்தமையும் இலக்கண மரபில் இங்குள்ள அறிஞர்களுக்கு இருந்த அறிவைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இலக்கியத்திற்கு — அதுவும் பழைய இலக்கியத்திற்கு — சிறந்த உரை எழுதுவோர் ஆழ்ந்த இலக்கண அறிவு படைத்தவராக இருத்தல் வேண்டும். சிவஞான சித்தியார், கந்த புராணம், பெரிய புராணம், தணிகைப் புராணம், பாரதம், இராமாயணம், இரகு வமிசம், திருவாதவூரடிகள் புராணம், புலியூரந்தாதி, வேதாரணிய புராணம், கந்தரலங்காரம், செந்தூர்ப் புராணம், கூர்மபுராணம், நைடதம் போன்ற பல நூல்களுக்குச் சிறந்த உரைகளை ஈழத்தவர் எழுதியதை எண்ணும் போது, அவ்வுரைகளை எழுதிய ஆசிரியர்கள் தமிழ் இலக்கண மரபினைக் கரைகண்டிருக்க வேண்டுமெனப் புலப்படுகின்றது. இவ்வுரையாசிரியர்கள் இலக்கிய இலக்கண நூல்களுக்குக் கூறும் உரையையும் உரை விளக்கமாகக் கூறும் இலக்கணக் குறிப்புக்களையும் கேட்டுத் தம் அறிவை விருத்தி செய்வதற்குத் தென்னிந்தியாவில் இருந்து பல தமிழ் அறிஞர்கள் ஈழத்துக்கு வந்தனர். அத்தகைய மதிப்பும் பெருமையும் ஈழத்துப் பெரியார்கள் பெற்றிருந்தார்கள் அக்காலத்தில்.

# தீவெட்டிக் கள்ளர்

குழூஉ இறையனுர்

பண்டுயாழ்ப் பாணப் பண்புறு நாடு
மண்டுதன் சொந்த மாண்புறு மரசினை
இழந்து கலங்கி ஏதிலார் கையிற்
பட்டுத் தவித்த பண்பில் காலை
நாட்டுக் காக நலம்பெறு சண்டை
அரசினர் தரப்பில் ஆங்குசெய் திட்ட
கூட்டத் தவர்பலர் மாற்ருர் கையில்
நாடகப் பட்டு நலிந்த காலையும்
பண்டை எதிர்ப்பை மங்க விடாது
நாட்டி லங்கும் மிங்கும் பலப்பல
கூட்ட மாக ஈட்டமாய் நின்று
கலகம் விளைத்துப் பலவா றரசினை
நடத்த விடாதே இடர்கள் விளைத்தனர்
ஆளு மரசோ டொத்தே உழைத்த
சுயநலப் புலிகளோ டொன்ரு தோர்ந்து
வெறுத்து நின்று வெவ்வேறு வழிகளால்
இடர்பல வவர்க்கும் இழைத்து வந்தனர்

எனினும்,

ஏழை மக்களை நலிய விடாதோர்
இடர்க ளின்றி இனிதுகாத் தனர்காண்
ஆளும் அரசினர் ஆக்கி வைத்த
உடையார் விதானை மணியம் முதலா
அரச வேலை பார்ப்போர் தமக்கும்
அரசரோ டொன்றி உழைப்போர் தமக்கும்
கொடிய வழிகளாற் கொடுமை செய்தனர்
நாட்டில் அமைதி இலாத வாறு
கொள்ளை அடித்தும் கொலைபல புரிந்தும்
ஆளவி டாது விளைத்தனர் குழப்பமே.
அத்தகைக் கொடிய கூட்டம் ஒன்று
மயிலிய தன்னை மண்டகக் கிடங்கை
இருப்பிட மாக விரும்பிக் கொண்டு
வல்லை தன்னில் வழிபறி கொள்ளை
நடத்தி வந்த வன்பெரு தீவெட்டிக்
கள்ளர் கூட்டம் கள்ள வழிகளால்
நெஞ்சு நடுங்கி அஞ்சத் தகுந்த
அடல்மிகு செயல்களோ டடாத்துகள் செய்து
நாட்டவர் தமக்கு நடுக்கம் விளைத்தனர்
கூட்டத் தலைவன் கொடுந்தொழி லாளன்

அச்சம் விளைக்கும் அம்மையன் கந்தன்
ஆட்கொல்லி நாகன் ஆகிய வன்கணர்
சகலரும் சேர்ந்து பகலரும் கொடுமைகள்
புரிந்து வந்தனர் புவனம் நடுங்க

2.

மன்னிடும் யாழ்ப்பாண மாண்புடைய நாட்டில்
மாபெரிய வல்லையெனும் பாலைவனம் முன்னுள்
இன்னுயிரை வாங்கிடும் கள்வர்தம் இடமாய்
இருந்ததால் ஆங்குசெல அஞ்சிடுவர் யாரும்.

3.

வழிபறி கொலைகளவு வன்கண்மை யாற்றி
வழியாலே வருமாந்தர் தங்களை யலைத்துப்
பழிசெய்து வாழ்ந்திடும் பாழிதனை மக்கள்
பகர்ந்திடுவர் மணிக்கன் தோட்டமெனும் பெயரால்.

4.

அம்மையன் கந்தனெனு மவர்தலைவன் பேரை
அய்யய்யோ கேட்டாலே ஆங்குள்ள மக்கள்
நெஞ்சமிக நடுநடுங்கி நெட்டுயிர்த்து நிற்பார்
நேரில்லை இவராற்றும் கொடுமைகள் நினைக்கின்.

5.

திண்மையொடு நடுநிசியிற் றீவெட்டி ஏந்தி
சேர்ந்துபெருங் கூட்டமாய்க் கிராமங்கள் சென்று
பண்ணிமிகப் பணம்படைத்தோர் இல்லங்கள் சார்ந்து
பயமின்றி வீட்டாரைத் துயிலா லெழுப்பி

6.

முற்றத்தில் உரலொன்றை நிமிர்த்தியே வைத்து
மூடியே ஆங்கதை வெண்சீலைத் துண்டால்
போற்றித்தம் தலைவனை அதன்மேல் இருத்திப்
புகல்வீட்டுக் காரனை அவன்முன் விடுப்பார்,

7.

உன்வீட்டி லுள்ளபெருந் திரவியங்க ளனைத்தும்
ஒழியாதே எங்கென்று பயமுறுத்திக் கேட்பார்.
வன்பொடவன் கூறுது பிடிவாதம் பண்ணின்
மூடியே கைதனில் நெய்ச்சீலை எரிப்பர்.

8.

இன்னலதைத் தாங்காது செப்பிடுமவ் வேளை
இல்லத்தி னுட்சென்று பொருள்களை வவ்வி
பின்னமிலாத் தம்பாழி மகிழ்வுடனே சென்று
பிரித்தே எடுத்திடுவர் பேதமதில் லாதே.

# பதாயிகு கலம்பகம்

ம. முகம்மது உவைஸ்

கருத்தன் பொருத்தன் கருத்தன் பொருத்தன்
கருத்தன் பொருத்தன் கருத்தன் பொருத்தன்
பதாயிகுக லம்பகத்தைப் பாடுதலுக் காகச்
சதா கருணை செய்யுமவன் ருன்.

இச் செய்யுள் பதாயிகு கலம்பகம் என்ற நூலின் முதற் செய்யுளாக — காப்புச் செய்யுளாக அமைந்துள்ளது. பதாயிகு என்பது முஸ்லிம் திருத்தலங்களுள் ஒன்று. ஹலறத்து சுல்தானுல் லாறிபீன் செய்யுது அகுமதுல் கபீறு (றலி) ஆண்டவர் பிறந்து வளர்ந்து மறைந்த திருத்தலமாக பதாயிகு விளங்குகிறது. அத்தகைய புகழ் பெற்ற பதாயிகு நகரத்தின் பேரில் இக்கலம்பகம் பாடப்பட்டுள்ளது. அகப் பொருள் துறைகளில் பாடப்படும் கலப்பு + அகம் என்று பிரிந்து பொருள் தரும் கலம்பகம் தமிழில் உள்ள தொண்ணூற்றுறு வகைப் பிரபதங்களுள் ஒன்ருகும. இங்ஙனம் பதாயிகு கலம்பகத்தைப் பாடவே வல்ல நாயனின் துணை இப்பாடலில் வேண்டப்படுகின்றது.

பதாயிகு கலம்பகத்தைப் பாடுதற்பொருட்டு எப்பொழுதும் எல்லோருக்கும் கருணைபுரிகின்ற அந்த ஒருவனுகிய அல்லாவிடம் குறை இரங்குகின்ருர் இந்நூலாசிரியர். ஏனெனில் இவ்வாறு துணை புரியக்கூடியவன் ஒருவன் தான் இருக்கிருன். குறிப்பான அன்பினையுடைய ஒருவன் தான் அவன். இதனையே ''கருத்து அன்பு ஒருத்தன்'' என்று பாடலில் ஆசிரியர் குறிப்பிடுகின்ருர். அத்துடன் நூலாசிரியர் நின்று விடவில்லை. அல்லாஹ்வின் தன்மைகளை எடுத்துக் கூறுகிருர்.

கருத்தன் பொருத்தன் கருத்தன் பொருத்தன்
கருத்தன் பொருத்தன் கருத்தன் பொருத்தன்

என்கிருர். கடவுளும், பொருத்தமுடையவனும், பெருமையினது பொருத்தமுடையவனும், கருத்தையுடையவனும், அமைத்தலுடையவனும், பெருமையினது பொருத்தமுடையவனுமாகிய அல்லாஹ் என்று அவன் வருணிக்கப்படுகின்ருன். இக்கலம்பகத்தைப் பாடுதலுக்குப் பொருத்தமுடையவன் என்பதை யுணர்த்தவே பொருத்தன் எனப்பட்டது. கருத்தையுடையவன் என்ற பொருளில் கருத்தை என்று காரணத்துடனே இங்கு ஆளப்பட்டுள்ளது. 'சிபத்' என்னும் பண்புகளுள் ''இருதத்'' என்னும் நாட்டத்தையுணர்த்தவே அங்ஙனம் ஆளப்பட்டுள்ளது. அமைத்தலுடையவன் என்ற பொருளில் பொருத்தன் என்பது அவ்வத்தானங்களுக்கேற்ற சிருட்டிகளை அவ்வக்காலங்களில் அமைக்குந் தன்மையுடையவன் என்பதைக் குறிக்கின்றது.

இவ்வெண்பா முதலீரடியுந் தம்முன் மடங்கிய ஒரு விகற்பமாய, பின்னீரடியும் மற்றொரு விகற்பமாய் இருவிகற்பத்தின் வந்த இன்னிசை வெண்பாவாகும். இவ்வெண்பாவின் இரண்டாமடியினீற்றிற்கும் பொருத்தன் என்பதனை எதுகைபெற்ற தனிச் சொல்லென்று வேறு பிரித்து நேரிசை வெண்பாவெனக் கொள்வாரும் பலர் உளர்.

முதற் செய்யுளிலே மடக்கு அணிகளை அமைத்து தலைசிறந்த முறையில் பதாயிகு கலம்பகத்தை பாடித்தந்தவர் நான்காம் தமிழ்ச்சங்கத்து ''நக்கீரர்'' என்று புகழப்பட்ட வித்துவான் ஆவர். நாகூர் மகா வித்துவானனை அவர் பெயர் குலாம் காதிறு நாவலர். பல பிரபந்தங்களைப் பாடி முஸ்லிம் தமிழ் இலக்கியத்தை வளம் பெறச் செய்த பெருமை வாப்பு மரைக்காயர் புதல்வனை குலாம் காதிறு நாவலரையே சாரும்.

இனிப்பதாயிகு கலம்பகத்தில் இடம்பெற்றுள்ள ஒரு சில செய்யுட்களை எடுத்துக் கொள்வோம். செய்யுட்களை நோக்கு முன்னர் ஒவ்வொரு செய்யுளிலும் பொதிந்துள்ள கருத்துக்களைப் பார்ப்போம். பூஞ்சோலைகள் சூழ்ந்த நகர் பதாயிகு. அது அழகு மிக்கது, பதாயிகுக் கருகில் உள்ள மலை நாடு கவர்ச்சி மிக்கது. விரைகளையுடைய வாவி அங்குள்ளது. கோட்டம், துருக்கம், தகரம், அகில், சந்தனம் என்ற ஐவகை வாசனைப்பண்டம் நிறைந்துள்ள நகரம் பதாயிகு. அம்மலைச் சாரலிலே பல மிருகங்கள் உள்ளன. விஷம் பொருந்திய படத்தையுடைய நாகபாம்புகள் அங்கு வாழ்கின்றன. அஞ்சா நெஞ்சம் படைத்த சிங்கங்கள் திரிகின்றன. தோற்றத்தில் பெரிய யானைகள் நடமாடுகின்றன. இத்தகைய மிருகங்கள் ஒன்று கூடி விளையாடும் காட்டை பதாயிகு நகரில் காணலாம் என்கிறார் ஆசிரியர். அத்தகைய மிருகங்கள் உள்ள காட்டின் ஊடாக வரவேண்டியவர் இப்பாட்டுடைத் தலைவர். எனவே அத்தகைய அபாயத்துக்காளாகாமல் வந்து தலைவியை மணந்து கொள்ளும்படி ஆசிரியர் கூறுகிறார். அகப்பொருள் துறையில் பாடப்பட்ட செய்யுட்களாகையால் காதலைப்பற்றிக் குறிப்பிட்டவர் வெளிப்படையாகக் காதலைப்பற்றிக் குறிப்பிட்ட போதிலும் வேறு கருத்துக்கள் அவற்றில் பொதிந்துள்ளன.

வழியச்சுறுத்தி வரைவு கடாதல் என்ற துறையில் பாடப்பட்ட அச்செய்யுளை இனிப் பார்ப்போம்.

இடமேவு பொழிலாரு மெழிலார் பதாயி
கிறைமேவு மலைநாட விரையேய வாவி
விடமேவு படநாக மடலேறு வேழம்
மிருகாதி யிவைகூடி விளையாடு காடு
வடமேவு முலைமேவி நடமாடு மேது
மடமாது பழிகாரி யெனலாகு மீது
திடமேவு நினதாசை முடிமாறு கூடு
செயனாடு நிறைவேறு திறனாடு கேளே

கலம்பக வுறுப்புகள் பலவுள. அவற்றுள் களி என்பதும் ஒன்று. கள்ளுக் குடுக்கும் கட்குடியன் கூற்றாக வரும் செய்யுள்

களி எனப்படும். கள்குடிப்பவன் அத்தகைய கட்குடியன். அத்தகைய கட்குடியன் செய்யிது அகுமது கபீர் (றலி) அவர்களை எவ்வாறு பாடுகின்ருர் என்று பார்ப்போம். ஆம் சாராயக் கடைகளிலே கள்ளுண்டு. அத்தகைய சாராயக்கடைகள் பல பதாயிகுப் பதியில் அழகாக அமைந்து காட்சியளிப்பதுண்டு. அங்ஙனம் அழகு படுத்தப்பட்ட பதாயிகு நகரில் வாழும் 'களியேம்' என்று கட்குடியர் தம்மை அழைக்கின்றனர். கட்குடியர் அருஞ்செயல் புரிகின்றனர் என்பது அவர்தம் கருத்து. கள்ளுக் குடிப்பதே அவர்கள் செய்யும் அருங்காரியம். கட்குடியர் இங்ஙனம் அருமையான செயல் என்று காணும் காரியத்தைவிட்டு விடும்படி பதாயிகு ஆண்டவர் போதித்துள்ளார். ஆதலினுல் கட்குடியர் ஆண்டகை மீதும் குற்றஞ் சுமத்தத் தலைப்பட்டனர். தமது கட்சியையே—தாம் கட்குடிப்பதையே—உறுதிப்படுத்த அவ்வாறு செய்ய முனைந்தனராம் அந்தக் கட்குடியர், இல்லற வாழ்க்கை நடத்திவிட்டு பல ஆண்டுகளாகக் கவலையில் மூழ்கி இருந்தாராம் அவ்வாண்டகை. பதாயிகு நகரம் இருக்கிலே நிறுவப்பட்டுள்ளது. எனவே பதாயிகு ஆண்டவர் கவலை மிக்கவராய் இருக்கின் காடுகளிலே அலைந்து திரிந்தாராம். கட்குடியராய்த் திரிந்தாராம். இவ்வாறு கூறிய கட்குடியர் தமது கட்குடித்தலை பதாயிகு ஆண்டவரின் கள்ளுக் குடித்தலுடன் ஒப்பிடுகின்ருர். பதாயிகு ஆண்டவர் குடித்த கள்ளைத்தாம் குடிக்கவில்லை என்று ஒத்துக் கொள்ளுகின்றனர், அந்தக் கட்குடியரின் உரையாடல் அத்துடன் நின்றுவிடவில்லை. இன்னும் கூறுகின்றனர். நாம் முஸ்லிம்களாயிருக்கிறேம். எமக்கு நேர் வழிகாட்டி அந்த நேர் வழியால் எம்மை நடத்த வந்தவர் எம்பெருமாஞர் முகம்மது முஸ்தபா றசூல் (சல்) அவர்கள் ஆவர். அவர் பதாயிகு ஆண்டவரின் மூதாதையராவர். அவர்கள் செய்தது என்ன? மயக்கம் போதாதென்று நஞ்சையுண்டார்களாம். இது புலவரின் கூற்றின் வெளிப்புறக் கருத்தாகும். ஆனல் இதனை ஊன்றிக் கவனிப்பின் அச்சொற்களிலே மறைந்து கிடக்கும் பொருளை ஊகிக்கலாம். இங்கு பிரமை என்பது மயக்கத்தைக் குறித்தது. இந்தச் சொல் கூர்மையான அறிவையும் குறிக்கின்றது. அம்மட்டன்று. சாமப்பா என்ன சொன்னுர் என்று தெரியுமா? சாமப்பா சொன்னவற்றைப் பற்றி அறிய முன்னர் சாமப்பா யார் என்பதை அறிதல் வேண்டும் அல்லவா? சாமு நயினர் லெப்பை ஆலிம் என்ற புலவர் நாயகம் என்ற புலவர் அப்பாவே சாமப்பா என்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. அவுலியாக்கள் அனைவரும் கஞ்சாவைத் தள்ளவில்லை என்றும், அது அவர்களுக்கு ஆகும் என்றும் அபிப்பிராயப்பட்டு உறுதிப்படுத்தி இருக்கிருர் என்று கூறப்பட்டுள்ளது. இங்கு நஞ்சு, கஞ்சா, கள்ளு என்று முஸ்லிம்கள் வெறுக்கும் பொருள்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே அவை இங்கு உருவகமாக ஆளப்பட்டுள்ளன. ஆத்மீகப் பொருளையே இவை குறிப்பனவாகக் கொள்ளுதல் வேண்டும். செய்யக்கூடாது என்பவற்றைச் செய்யவே குழந்தை உள்ளம் துடிக்கும். அதிலே பேராசை கொள்ளும். அதே போன்று இஸ்லாம் வெறுத்த சில வற்றில் பேராசை கொண்ட சிலர் இருக்கலாம். அத்தகைய பேராசையை நாம் நன்மையான பொருள்களில் வைத்தல் வேண்டும். அத்தகைய பேராசையை நாம் அல்லாஹ் மீது வைத்தல்

வேண்டும். இங்ஙனம் அல்லாஹ் மீது வைக்கும் பேராசையினை விடமாட்டோம் என்று கட்குடியர் கூறுவதாக இங்கு பாடப்பட்டுள்ளது. சத்தியமாகவே விடமாட்டோம் என்று கட்குடியர் கூறுகின்றனர். இங்ஙனம் களி என்ற செய்யுளில் கட்குடியர் தமது நல்ல தன்மையை—தாம் நல்லவராக மாறப் போகும் தன்மையை—விளக்கிக் கூறுகின்றனர். கட்குடியர் கூறுமாப் போல் குலாம் காதிறு நாவலர் தமது பதாயிகு கலம்பகத்தில் பதாயிகு ஆண்டகையான, ஹலறத்து சுல்தானுல் ஆரிபீன் செய்யிது அகுமதுல் கபீறு (றலி) அவர்கள் மீது தமது பக்தியை தெரிவித்துப் பாடுகின்றார். ஆண்டகை மீது புகழ் மாலை சாற்றுகின்றார். இனி அங்ஙனம் ஆண்டகை மீது பாடப்பட்ட 'களி' என்ற செய்யுளைப் பார்ப்போம்.

ஆமப்பா சாராயக் கடைக ளெல்லாம்
அழகினவா யதிகமா யமைந்து காணும்
அணிநகர் பதாயிகுவாழ் களியே மெங்கள்
அருஞ் செயலை விலக் கென்று வறைகின் றீர்கள்?
காமப்பா லுண்டுபின்னும் பலவாண் டாகக்
கவலை கொண்டு செய்யிதகு மதுல்கபீறு
கண்டுபிற ரறியாத படியி ருக்குக்
காட்டின்கட் குடியராய்த் திரிந்தாரப்பா
நாமப்பா வப்படியா பின்னுங்கேளீர்
நமக்கு வழி காட்டிய தினடத்தவந்த
நபிகளு யகரான வவர்மூதாதை
நஞ்சை யெல் லாம் போதா தென்றுண்டார்.
சாமப்பா கஞ்சாவை யொலிமாரெல்லாந்
தள்ளவில்லை யாகுமென்றே தலைக்கொண் டாரத்
தகையாங் கள்ளாசையினைக் கடவுண்மீது.
சத்தியமா விடமாட்டோம் விடமாட்டோம் (33)

எனவே இங்கு மக்களை நல்வழிப்படுத்த செய்யிதகுமதுல் கபீறு (றலி) அவர்கள் கடைப்பிடித்த காரியங்களையே கட்குடியர் வாயிலாகக் குலாம் காதிறு நாவலர் ஈண்டு எடுத்துக் காட்டியுள்ளார்.

இன்னொரு செய்யுளில் புலவர் தம்மை ஓர் அடியானுகக் கருதுகிறார். சுல்தானுல்லாரிபீன் செய்யிதகுமதுல் கபீறு அவர்களின் அருளைப் பெரிதும் விரும்புகிறார். அவர் மீதுள்ள அன்பு மேலீட்டினுல் வாடி வதங்குவதாகக் கூறுகிறார். ஆனுல் இந்த அடியானுக்கோ அந்தப் பெரியார் இடத்துக்குச் செல்லும் ஆற்றல் இல்லை. எனவே பதாயிகு ஆண்டவரின் அருளைப் பெற வேறோர் உபாயத்தைக் கையாளுகின்றார். அவரிடம் தூதனுப்பத் தீர்மானிக்கின்றார். ஆண்டகையிடம் தூதாக மேகத்தையே அனுப்புகின்றார். 'மேகமே! இங்கே வருவாயாக. நீ எனக்காகத் தூது செல்ல வேண்டும். பதாயிகு மக்கள் புகழ்கின்ற ஒரு பெருந்தகை இருக்கின்றார். அவர் ஆரிபீன்களுக்கெல்லாம் சுல்தானுகை விளங்குகின்றார். அந்தப் பெரியாரின் திருப்பாதங்கட்குச் சமீபமாக நீ போக வேண்டும். உடனே நீ போதல் வேண்டும். அங்கு

விரைந்து சென்று அந்த ஆண்டகையின் அருளை வாங்கிக்கொண்டு வந்து தரல் வேண்டும். அங்ஙனம் நீ அவர் தம் அருளைக் கொண்டு வந்து தந்தால் அவர்பாலுள்ள ஆசை மேலீட்டினால் வருந்திக் கொண்டிருக்கும் அடியேன் உய்ய வழி பிறக்கும்'' என்பதே அந்தத் தூதாகும். மேகம் விடுதூது என்று அமைந்துள்ள செய்யுளை இனி எடுத்துக்கொள்வோம்.

> வாராய் நீ கொண்டால் வளஞ்சொல் பதாயிகெனும்
> ஊரார் புகழ்சுல்தானுல்லாரி| பீனடிகள்
> சேராயா லின்னேயே சேர்ந்தன் றருள் வாங்கித்
> தாராய் நசைகூர் தமியே னுயுமாறே

தொன்று தொட்டு நிகழ்வது சம்பிரதாயம் எனப்படும். கலம்பகத்திலும் சம்பிரதாயம் என்றோர் உறுப்பு உண்டு, இத் தகைய சம்பிரதாயம் என்ற செய்யுளில் மனிதனால் செய்யமுடி யாத சாதனைகள் பாட்டுடைத் தலைவரான செய்யிதகுமது கபீறு (றலி) அவர்களின் சாதனைகளுடன் ஒப்பிடப்படுகின்றன. ஒப்பிடப்பட்டு பாட்டுடைத்தலைவரின் சாதனைகளைப் பொறுத்த வரையில் அவை சம்பிரதாயமல்ல என்ற முடிவுக்கு ஆசிரியர் வருகிறார்.

அகன்று பரந்திருக்கும் இந்த மாபெரும் ஆகாயத்தை வில்லாக வளைத்திடுவோம். இந்த மணலைக் கயிறாகத்திரிப்போம். மலைகளையெல்லாம் தவிடுபொடியாக்கி வானவெளியிலே ஊதிடு வோம். வியாபித்திருக்கும் இந்தக் கடற்பரப்பை குடித்து வற்றச் செய்திடுவோம். நாம் எண்ணிய எண்ணமெல்லாம் எண்ணிய வாறே செய்து முடிப்போம். அம்மட்டன்று. இன்சானை — மனி தனை ஹைவான்கள் — மிருகங்களாக்குவோம்; ஹைவான்களை — மிருகங்களை — இன்சான்கள் மனிதர்களாக்குவோம். சீனத்தை வங்காளமாக்குவோம். மேகஞ் செல்ல வேண்டிய திசையை நாமே விதிப்போம். ஆனால் இவையெல்லாஞ் சாதனைகள் அல்ல. ஆனால் எது சாதனை? பதாயிகு ஆண்டவர் கடலிலே இருந்து பிடித்து உண்டமீனை உயிர்ப்பித்ததே மிகப் பெரிய சாதனை யாகும். அத்தகைய பெருமான் போதித்தவற்றைக் கொண்டு உண்மையையும் படைப்புகளையும் ஒன்றாகச் சேர்ப்போம். இக் கருத்தினையே குலாம் காதிறு நாவலர் தமது பதாயிகு கலம்ப கத்தில் பின்வருமாறு அமைத்துள்ளார்.

> வானத்தை வில்லாக வேவளைப் போமிந்த மணலினைக்
> கயிறாக்குவோம்
>
> வரைகளைத் தவிடுபொடியாக்கி யாகாசத்து மார்க்கமா
> யூதிடுவோம்
>
> ஈனத்தை யடையாத கடலைக்கு டித்தியா மெண்ணிய
> வெலாமுடிப்போம்
>
> இன்சானை ஹைவான்க ளாக்குவோம் ஹைவானை
> யின்சான்க ளாக்கி விடுவோம்.

சீனத்தை வங்காளமாக்குவோம் மேகமது செல்கவெனவே
விதிப்போஞ்

செப்புமிவை வல்ல சம் பிரதாய மல்ல முற் சிந்திற்
பிடித்தயின்ற

மீனத்தை யுயிரோ டெழுப்பிய பதாயிஃ விளங்குபெருமான்
மகிழ்ந்து

விண்டவொரு மொழிகொண்டு ஹக்கையும் கல்கையும்
விரவியிடவொன்ருக்குவோம்.

(ஹக்—உண்மை; கல்க்—படைப்பு)

இத்தகைய கலம்பக இலக்கணங்கள் அமைந்த தமிழ் நூல்கள் பல முஸ்லிம் புலவர்களால் பாடப்பட்டுள்ளன. சிறந்த இலக்கிய நூல்களாகத் திகழும் இவற்றை நாம் போற்றிப் படித்துப், பயன் பெற்றுப் பாதுகாப்போமாக.

# பரந்த தமிழகம்

ஆ. வேலுப்பிள்ளை

**"செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே"** என்றான் தற்காலத்தில் தமிழை வாழவைக்கப் பிறந்த கவிஞன் பாரதி. இந்த அடிகள் காதில் விழுந்ததும், தமிழ் நாடு என்பது எது? அது எங்குள்ளது என்ற கேள்விகள் உள்ளத்தே தோன்றுகின்றன. தொல் காப்பியத்தில் செந்தமிழ் நிலம் என்று ஒன்று பேசப்படுகிறது. செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரு நிலங்களில் திசைச் சொல் வழங்கின என்றும் தொல் காப்பியர் அதே மூச்சிலே கூறிவிடுகிறார். அவர் செந்தமிழ் நிலத்தின் எல்லையை வரையறுக்கவில்லை. அந் நிலம் பாண்டியநாட்டில் ஒரு பகுதியாக இருக்கவேண்டும் என்று சேனாவரையர் தவிர்ந்த ஏனைய தொல்காப்பிய உரையாசிரியர்கள் கருதுகிறார்கள். பிற்காலச் சோழப் பேரரசின் அமைச்சர் பெருந் தகைகளுள் ஒருவரான சேக்கிழார், சமணத்தை யழித்துச் சைவத்தை வாழ்விக்கச் சம்பந்தர் பாண்டிய நாடு சென்றதைக் கூறும்போது தமிழ்நாடு சென்றார் எனக் கூறுவர். எனவே தமிழ் நாடு என்பது பாண்டியநாடு அல்லது அதன் ஒரு பகுதியாக இருக்கலாமோ என்ற ஐயுறவு எழுகின்றது.

எமது திராவிடச் சகோதரரான தெலுங்கு மொழி பேசும் மக்கள் தமிழ் நாடு என்று எதைக் கொண்டார்கள் என்று காண்பதும் இவ்விடத்தில் பொருத்தமானதே. ஆந்திர நாடு தனி மாகாணமாக்கப்படும்வரை, ஆந்திரரது தோஷங்களில் முக்கியமான தொன்று 'மதராஸ்மனதே' என்பது. இவ்வாறு சென்னைப் பட்டினத்திற்கு உரிமைகோரிய ஆந்திரர், தமிழ் நாடு, பழைய சோழ, பாண்டிய கொங்கு மண்டலங்களை மட்டுமே கொண்டதென வாதித்தனர். இந்தக் கோரிக்கையை ஏற்காத தமிழர், தமிழ் நாட்டின் எல்லை தொண்டை மண்டலம் முழுவதையும் தன்னுள்ளடக்கியது, இன்றைய ஆந்திராவில் காணப்படும் திருப்பதி வரையில் பழைய தமிழகத்தின் எல்லையிருந்தது என்று காட்ட முயற்சித்து, அதற்குச் சான்றாக வடவேங்கடந்தென்குமரியாயிடைத் தமிழ் கூறு நல்லுலகம், என்ற தொல் காப்பியப்பாயிரப் பகுதியை எடுத்துக் காட்டினர். இவ்வாறு கூறுவதுடன் திருப்தி யடையாத தமிழர் சிலர், புவியியலறிஞர் சிலர் பல்லாயிரமாண்டுகளுக்கு முன்பு இன்றைய இந்து சமுத்திரத்தில் லெமூறியா என்றொரு நிலப்பரப்பு இருந்ததாகக் கூறுவதை எடுத்துக் காட்டி, அந்தக் கண்டமே ஒரு காலத்தில் தமிழ் நாடாகத்தானிருந்ததென ஆரவாரஞ் செய்தனர். லெமூரியாக்கண்ட மிருந்த காலத்தில் தமிழ் மொழியே தோன்றியிருக்கமாட்டாது என்பதை உணர்ந்த வரலாற்றுணர்ச்சி ஓரளவாவதுள்ள தமிழறிஞர் சிலர் இந்தியாவின் ஏனைய பகுதிகளை நோக்கித் தம் கவனத்தைத் திருப்பினர். திராவிடர் யாவரும் ஒரு காலத்தில் தமிழராயிருந்தனர், ஏனைய திராவிட மொழிகளெல்லாம் தமிழிலிருந்தே தோன்றின என்ற கருத்துப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் மனோன்மணியத்தில் தோன்றித் தமிழ்ப்பற்று

மிருந்தோர் சிலரிடை இன்றும் பவனி வருகின்றது. இந்து நதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்திற்கும் திராவிட நாகரிகத்திற்கும் உள்ள சில பல ஒற்றுமைகளை எடுத்துக்காட்டி, சிந்து நதிப்பகுதி பழைய திராவிடத்தின் ஒரு பகுதியே எனக்காட்ட இன்றைய அறிஞர் சிலர் முயல்கின்றனர்.

பரந்த தமிழகத்தைக்காண அறிஞர் செய்யும் முயற்சி, தமிழ் நாட்டை ஒரு அங்கமாகக் கொண்டுள்ள இன்றைய இந்தியாவிற் குள்ளும் தமிழ் நாட்டின் எல்லையாக அமைந்த இந்து சமுத்திரத் திற்குள்ளும் அடங்கி விடவில்லை. மத்திய தரைக்கடற் பகுதியைச் சேர்ந்த நாடுகளுக்கும் தென்னிந்தியாவிற்கும் உள்ள தொடர்பு களைப் பற்றிப் புதை பொருளாராய்ச்சியாளர் நிறைய ஆராய்ந் திருக்கிறார்கள். அந்த நாடுகளில் சில ஆயிரமாண்டுகளுக்கு முன்பு வழங்கிய மொழிகளுக்கும் திராவிடமொழிக்கும் பலவித ஒற்றுமை களிருப்பதைக் கண்டனர். கோவில், பூசை. தேவரடியார் முதலிய கலாச்சார அமைப்புகளில் சுமேரியாவிலிருந்த பழைய நாகரிகத் திற்கும் தென்னிந்திய நாகரிகத்திற்கும் நிறைய ஒற்றுமைகள் காணப்படுகின்றன. என்று அறிஞர்கள் கருதுகின்றனர். திராவிட மொழி, திராவிட நாகரிகம் என்பன மத்திய தரைக்கடற் பகுதியி லிருந்தே தென்னிந்தியாவிற்கு வந்திருக்கலாம் என்பது இன்றைய வரலாற்றறிஞர் எண்ணம். கி. மு. 1000 ஆண்டுகளளவிலாவது, மத்திய தரைக்கடல் நாடுகளுக்கும் தென்னிந்தியாவிற்கும் வணிகத் தொடர்புகலிருந்ததற்குச் சான்றுண்டு. தமிழரின் மூதாதையர், இக்காலத்தில் கடல் மார்க்கமாக வந்து இன்றைய தமிழ் நாட்டிற் குடியேறி யிருக்கலாம்; அல்லது, ஆரியரைப் போல, கைபர்கண வாய் முதலியவற்றினூடாக வந்திருக்கலாம். தமிழர் வரலாற் றைப் பற்றி விரிவான குறிப்புகள், சங்ககாலத்திலிருந்தே, இன்று எமக்குக் கிடைக்கின்றன. சங்ககாலத் தமிழர் கடல் வணிகத்தில் பெரிதும் ஈடுபாடுடையவராக இருந்தமைக்குச் சங்க இலக்கியமும் யவன அறிஞர் சிலர் எழுதிவைத்துள்ள குறிப்புகளுமே சான்று. எனவே, சங்க காலத் தமிழர் மத்திய தரைக்கடல் நாடுகளோடு தொடர்புடையராக வாழ்ந்திருக்கலாம். உரோமப் பேரரசு இப் பகுதியைச் சேர்ந்த ஒரு நாடே. திராவிடரின் தாயகமாகிய மேற் காசியா உரோமராட்சியிலடங்கியிருந்தது. உரோமரும் தமிழ் நாட்டிற்கு வந்து வணிகம் புரிந்தனர். உரோமப் பேரரசு வீழ்ச்சி யோடு, தமிழ் நாட்டின் மேலைத் தேச வணிகம் குறைகிறது. மேற் காசியாவில், செமிதிக் இனத்தார் செல்வாக்கு அதிகரிக்கின்றது. அறபு இனத்தாராட்சி ஆங்கெல்லாம் படிப்படியாக ஏற்படுகின் றது. தமிழிலக்கியங்கள் பெரிய கடல் கோள், ஒன்று அல்லது பல வற்றைப் பற்றி, புலம்ப ஆரம்பிக்கின்றன. சீரும் சிறப்புமாக இருந்த தமிழரின் தாயகம் கடலுக்கிரையாகி விட்டதாக, சிலப்பதி காரம் மணிமேகலை, கலித்தொகை, இறையனாரகப் பொருளுரை முதலியவைகளிலெல்லாம் குறிப்புகள் வருகின்றன. கிறீஸ்துவுக்கு முன்னுள்ள சில நூற்றாண்டுகளில் சில சிறு கடல் கோள்கள் ஏற் பட்டனவென்றும், சில சிற்றூரின் பகுதிகள் அழிந்திருக்கக் கூடு மென்றும் ஆராய்ச்சியாளர் சிலர் விளக்குகின்றனர். தமிழிலக்கி யங்களிற் பேசப்படும் கடல் கோள் ஓரளவு பெரியது போலக் காணப்படுகிறது. மேற்காசியாவிலிருந்த திராவிடரின் பழைய

தாயகத்துடன் தொடர்பு குறைந்த களப்பிரராட்சிக் காலத்திலும் பல்லவர் காலத்திலும் கடல் கோள்களைப் பற்றிய இக்கதை உலாவுவது ஒரு சந்தேகத்தை எழுப்புகிறது. மறைந்த தமிழகம் திராவிடரின் பழைய தாயகமாக இருக்கலாம் போலத் தோன்றுகிறது. கடலாற் பிரிக்கப்பட்டுத் தொடர்பற்று விட்ட வேறொரு நிலப்பகுதியே தமிழர் தாயகம், தாம் அங்கிருந்தே இன்றைய தமிழ் நாட்டிற் குடியேறினர், என்பதே இறையனாரகப் பொருளுரை கூறும் கடல் கோள் பற்றிய கதையின் அடிப்படை உண்மை போலப்படுகிறது.

வரலாற்றுக் காலத்திலேயே இன்றைய தமிழ் நாட்டிற்கும் தென் கீழ் ஆசியாவிற்கும் இருந்த தொடர்பைப் பற்றிப் பல சான்றுகள் காணலாம். தென் கீழ் ஆசியாவின் பழைய நாகரிகம் அரசியல் முதலியயாவும் இந்திய நாகரிகத்துடன் பின்னிப் பிணைந்திருப்பதை நோக்கும் அறிஞர், தென் கீழாசியாவைப் 'பரந்த இந்தியா' என அழைக்கின்றனர். பௌத்தமும் இந்து மதமுமே இப் பகுதியில் செல்வாக்குப் பெற்றிருந்தன. வடமொழி சாசனம் முதலியவற்றில் சிறப்பிடம் பெற்றது. சாசனங்களின் லிபி இந்திய லிபிகளை ஒத்துள்ளது. மன்னர்களின் பெயர், அரசுகளின் பெயர் பெரும்பாலும் இந்தியப் பெயர்களாகக் காணப்படுகின்றன. உடைந்த கோவில்கள், அழிந்த நகரங்கள் முதலியன இந்தியச் சிற்பக்கலையைப் பறை சாற்றுகின்றன. இந்தோ-சீனசுவர்ண பூமியென்றும் இந்தோனேசியா சுவர்ணதீப என்றும் பெயர் பெற்றிருந்தன. கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் சுவர்ண பூமியிலும் யாவா, சுமத்திரா போன்ற சுவர்ணதீபப் பகுதிகளிலும் இந்திய முறையான அரசுகளிடம் பெற்றன என்பதற்கு சீனர் எழுதிவைத்துள்ள குறிப்புகளே சான்று பகருகின்றன. இந்தியர்கள் கடல் கடந்தே இந்தப் பகுதிக்குச் சென்றிருக்க வேண்டுமாதலால், பெரும்பாலும் கீழைக் கரை தென்கரையிலிருந்தே சென்றிருக்க வேண்டும். இந்தியாவின் தென் கீழ்க் கரையில் வங்காளிகள், ஒரிஸ்ஸா மக்கள், தெலுங்கர் தமிழர் முதலிய இனத்தாரே வாழ்கின்றனர். ஒரிஸ்ஸா மக்கள் அதிகம் நாகரிக வளர்ச்சியில்லாதவர்கள். கடல் கடந்து சென்று நாகரிகம் பரப்பினுர்களென்று அவர்களைக் கூறுதல் அடாது. சாதவாகனப் பேரரசு காலத்தில் தெலுங்கு மக்கள் தென்கீழாசியாவிற் சென்று குடியேறினரென்றே கொண்டாலும், பிற்காலத் தெலுங்கர் கடற் செலவில், அதிகம் அக்கறை காட்டவில்லை. மிகுந்திருப்பன வங்காளமும் தமிழ் நாடுமே. இரண்டு நாடுகளும் தங்கள் பங்கை ஆற்றின என்று கொள்ளலாம் போலத் தோன்றுகிறது. இந்தியாவுக்கும் தென் கீழ் ஆசியாவுக்கும் உள்ள தொடர்புகளைப் பற்றி ஆங்கிலத்தில் அதிக நூல்கள் எழுதியிருப்பவர்கள் வங்காளிகளே. வங்காளத்தின் பங்கை உயர்த்திச் சொல்ல முயல்வதை, அவர்கள் நூல்களில் காணலாம். கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி முதலியோர் தமிழ் நாட்டின் பங்கைச் சிறப்பாக எடுத்துக் காட்டுவர். தமிழ் நாட்டின் பங்கு வங்காளத்தின் பங்கிலும் சிறப்பாக இருந்திருக்கலாம் என்று நினைப்பதற்கு ஒரு காரணம் இருக்கிறது. வங்காளம் வளம் கொழிக்கும் நாடு; தமிழ் நாடு வறுமையால் வாடும் நாடு. நாம் நமது நாட்டை எவ்வளவு தான் உயர்த்திக் கூறினுலும், தமிழன் ஆண்டானுக இருந்த காலத்தி

லும் சரி, அடிமையாக இருக்கிற காலத்திலும் சரி, பிறநாடு சென்று, பிறநாட்டுச் செல்வத்தை வணிக மூலம், திறை மூலம் அல்லது கூலி மூலம் பெற்று வாழ வேண்டியவனுகத்தான் இருக்கிருன். அதனுல, திரைகடலோடித் திரவியந் தேடுவதில் அவன் முன் நின்ருனென்றே கூறலாம்.

தமிழ் நாட்டின் பங்கைக் குறைவாக மதிப்பிடுபவர்கள், தென்கிழாசியாவில் காணப்படும் சாசனங்கள் தமிழ் மொழியிலன்றி வட மொழியிலேயே எழுதப்பட்டிருப்பதையும், மன்னர் பெயர்கள் வடமொழிப் பெயர்களாகக் காணப்படுவதையும் தங்களுக்குச் சாதகமாக எடுத்துக் காட்டுவர். அப்பகுதிச் சாசன லிபியும் சிற்ப முறைகளும், பல்லவர் காலத் தமிழ் நாட்டிலிருந்த லிபியையும் சிற்ப முறைகளையும் நினைப்பூட்டுவதை அவர்கள் வேண்டியளவு கவனிப்பதில்லை. ஆரியநாகரிகத்தைப் புதிதாக ஏற்ற தமிழர் அதைக் கடல் கடந்து கொண்டு சென்று பரப்பினுர்கள் என்று அறிஞர் நீலகண்ட சாஸ்திரி கூறுவது பொருத்தம் போலக் காணப்படுகிறது. புதிதாக ஒரு சமயத்தை அல்லது வாழ்க்கை முறையை நீண்ட காலமாகப் பின்பற்றுபவர்களிலும் பார்க்க மிக அதிக ஆவேசமுற்று ஏனையோரையும் தம் நெறிக்குத் திருப்ப முயற்சித்தல் உலக இயல்பு. இந்தப் பண்பே, கடல் கடந்து சென்ற தமிழ் நாட்டினரிடையிலும் காணப்பட்டிருக்கிறது போலத் தெரிகிறது. தமிழ் நாட்டிற்கூடத் தனி வடமொழிச் சாசனங்களும் வடமொழி — தமிழ்மொழி கலந்த சாசனங்களும் பல்லவர் காலத்திலும் அதற்குப் பின்னும் தோன்றுகின்றன. பல்லவ மன்னரும் அவருக்குப் பின் தமிழ் நாட்டையாண்ட வேந்தரின் மிகப் பலரும் வடமொழிப் பெயர்களையே சூடினர். எனவே, இவைகளைக் கொண்டு மாத்திரம் நாம் ஒரு முடிவுக்கு வர இயலாது.

கி. பி. பதினேராம் நூற்ருண்டில், சோழப் பேரரசு கடாரங் கொண்டது. மலாயா, சுமத்திரா, யாவா முதலிய நாடுகளிற் பெரும் பகுதியை உள்ளடக்கியிருந்த சைவேந்திரப் பேரரசு சோழப் பேரரசுடன் மோதித் தோல்வி கண்டது. அப்பேரரசின் தலைநகராகிய கடாரம், சோழப் பேரரசன் முதலாம் இராசேந்திர சோழனது படைகளிடம் அடிபணிந்தது. இதற்கு முன்பு தமிழர் தென்கிழாசியாவில் ஆட்சி புரிந்ததற்கு என்ன சான்று உண்டு என்று சிலர் கேட்கலாம். தமிழ் நாட்டுப் பேரரசு ஒன்று படையெடுத்து இப்பகுதியை வெற்றி கண்டது. இதுவே முதற்றடவையாயினும், தமிழ் நாட்டு மக்கள் இதற்கு முன்பு சென்று அங்கு ஆட்சி புரிந்திருக்கலாம். இலங்கையைக் கைப்பற்றி, ஒரு மாகாணமாக்கித் தமிழரசர் ஆண்டது சோழர் காலத்தில் தான். ஆனுல் கி. மு. இரண்டாம் நூற்ருண்டிலிருந்து தமிழர் இலங்கையை ஆண்டதற்குச் சிங்களவர் எழுதி வைத்திருக்கிற மகாவமிசம், சூலவமிசம் என்பனவே, சான்று. இலங்கையிற் போலத் தென்கிழாசியாவில் தமிழர் பல்வேறு பகுதிகளை ஆண்டிருக்கலாம்.

தென்கிழாசிய வரலாறு, இன்னும் முற்ருக ஆராயப்படவில்லை. அப்பகுதி வரலாறு சீராக உருப்பெறும் போது, அது

பரந்த தமிழகத்தின் வரலாருக அமையக் கூடிய சாத்தியக் கூறு கள் தென்படுகின்றன. அப்பகுதி வரலாற்று நூல்களும் ஆராய்ச் சிகளும் தென்கீழாசியாவிற் பெரும் பகுதியைச் சமீப காலம் வரை யாண்ட பிரஞ்சுக்காரர், ஒல்லாந்தர் மொழிகளில் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றுள் சிலவற்றைத் தழுவி ஆங்கில நூல்கள், சில இந்திய அறிஞரால் எழுதப்பட்டிருக்கின்றன. சமீப காலத்திற் சுதந்திரம் பெற்ற அப்பகுதி நாடுகள் தங்கள் வரலாற் றைத் தகுந்த முறையில் ஆராய முயற்சி யெடுக்கும் என நம்ப லாம். இன்று பிற மொழிகளிற் காணப்படும் ஆராய்ச்சிகளையும் இனி வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படும் ஆராய்ச்சிகளையும், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளிற் கொண்டு வரத் தமிழ் நாட் டறிஞர் முயலவேண்டும். தமிழர் வரலாறு, தமிழ்க்கலாசாரம் பற்றிய விளக்கம், ஏன் தமிழ்க் கல்வியே—மறைந்துவிட்ட பரந்த தமிழகத்தைப் பற்றிய அறிவில்லாமல் பூர்த்தியாகாது. தொல் காப்பியமும் திருக்குறளும் கம்பராமாயணமும் தான் தமிழ், அவற் றைப் படித்தால் தமிழ்க் கல்வி பூர்த்தியடையும் என்று பழைய மரபில் தமிழ் கற்றவர்கள், தொடர்ந்தும் ஆர்ப்பாட்டம் செய் யக் கூடும். ஏனைய தமிழறிஞர், தமிழர் வரலாற்றின் இப்பகுதிக் குத் தங்கள் கவனத்தைத் திருப்புவதில் தாமதம் செய்யக்கூடாது.

---

# வெருகலம்பதி : செவிவழிச் செய்தி

க. கணபதிப்பிள்ளை

***[கிழக்கிலங்கையில் உள்ள வெரு கலம்பதியைக் குறித்து அப்பகுதி மக்களுக்குள் செவி வழியாக நிலவிவரும் செய்திகளை யாம் கேட்டவாறே மேல்வரும் கட்டுரையில் தந்துள்ளோம். பௌராணிகக் கருத்துக்களும், சரித்திரச் செய்திகளும், சமூக உண்மைகளும் ஒன்று சேர்ந்து மிளிருகின்றன. இங்கு காணப்படும் சமூக உண்மைகள் பல சோழப் பெருமன்னர் காலத்தைப் படிப்பவர்களுக்கு நினைவூட்டுவனபோலும். இத்தல வரலாறு பல நோக்குள்ளதாகலின் இக்கட்டுரை யாவராலும் இன்புறத்தக்கது என எண்ணுகின்றோம்.]***

மட்டக்களப்புப் பட்டினத்துக்கு வடக்கே 47 கல் தூரத்தே, திருக்கோணமலையிலிருந்து தெற்கே 135 கல் தூரத்தில் வெருகலம்பதி அமைந்திருக்கிறது. வெருகல் என்பது வெருகுச் செடி. அவ்வூரிற்குத் தெற்கே வங்காள விரிகுடாவில் விழும் மகாவலி கங்கையின் கிளையாகிய வெருகல் கங்கையில் அச்செடி மிகுதியாகக் காணப்படுவதினால் இப்பெயர் வந்ததென அங்குள்ளோர் கருதுவர். வெறலகல (கடற்கரை மலை) என்னும் சிங்களச் சொல் திரிந்து வெருகலாகியது எனவும் கொள்வர்.

இப்பகுதிக்கருகே மலைக்குன்றுகள் பல உள்ளன. அப்பகுதியில் உடைந்த பழைய நாகரிகச் சின்னங்கள் பலவற்றை இன்றும் காணலாம். அங்கு பரந்து கிடக்கும் காட்டிற்குள்ளே, ஒரு காலத்தில் சிறந்த நாகரிகம் இருந்ததற்கு அறிகுறியாகச் சிவலிங்கங்களும், நந்தி உருவங்களும், கல்வெட்டுக்கள் பொறித்த பாறைகளும் எங்கும் உள்ளன. இங்கிருந்து சற்றேறக்குறைய 15 கல் தூரத்தில் திருமங்கலாய் என்று இன்று அழைக்கப்படும் இடத்தில் நந்தலிங்க சுவாமி கோயில், கண்ணகி கோயில், ஆதி வைரவன் கோயில் ஆகியன அழிந்து கிடக்கின்றன. வேறொரு பெரிய சிவன் கோயிலையும் இங்கு காணலாம். இதனை இப்பொழுது அகத்திய ஸ்தாபனம் என அழைப்பர். இங்குள்ள சிவலிங்கத்தை அகத்தியர் நிறுவி வழிபட்டார் என்பது கர்ண பரம்பரைக் கதை. இதை திருக்கரைசைப் புராணம் குறிப்பிடுகிறது.

இவ்வூருக்குப் பத்துப் பதினைந்து கல் தூரத்திலுள்ள கிளிவெட்டி, புதுவூர், திருமங்கலாய், குருக்கள் கங்கை, பள்ளிதிடர், பங்கிரு, சுங்காவில், விளாங்காடு, கந்திரிவெளி ஆகிய கிராமங்களுக்கூடாகப் பொலநறுவைக்குப் போகும் பழைய பெருந்தெரு

ஒன்று அழிந்து கிடக்கிறது. ஆகவே, இங்குள்ள நாகரிகம் 11-ம் 12-ம் நூற்றுண்டுகளில் இலங்கையில் சிறப்புற்றோங்கி விளங்கிய சோழ நாகரிக காலத்தில் உன்னத நிலையை அடைந்திருத்தல் வேண்டும். பொலநறுவையில் சிவ சின்னங்கள் சிலமுற்றிருத்தல் போலவே இங்கும் அவை இடத்திற்கிடம் சிதைந்து கிடப்பதை இன்றும் காணலாம்.

இங்கு அப்பகுதியிலுள்ளவர்களுக்குள் வழக்கிலிருக்கும் கேள்விக் கதையொன்று இருப்பதும் நோக்கற் பாலது. இதைப் பிற் காலத்திற்றேன்றிய திருக்கரைசைப் புராணத்திற் காணலாம். அக்கதை மேல் வருமாறு:— 'அயோத்தியையாண்ட சிங்கபூதர பூபாலன் என்பான் அங்குள்ள வேறெரு மன்னனல் முறியடிக்கப் பட்டு சலகாமி என்னும் குதிரையில் ஏறிக் கடலோரஞ் சென்றுன். அங்கிருந்து கப்பல் மூலம் இலங்கையை நோக்கி வந்து வெருகலம்பதிக்கு அண்மையிலுள்ள இலந்தைத் துறையில் வந்து இறங்கினுன். குதிரையை ஒரு மரத்திற் கட்டிவிட்டு, தண்ணீர் விடாயினுலும், பசிக் களையினுலும், ஒரு மரத்தினருகில் தூங்கினுன். அவ்விடத்தில், இலங்கையைப் பாதுகாத்த பூதம் ஒன்று அவனை வந்துகண்டது. கண்டவுடன் அவனுடைய இராசகளையைக்கண்டு, வியப்பெய்தி, அவனை அணுகி, ''நீ யார்? உன்னூர் யாது? இங்கு வந்தவாறு என்னை ?'' என்றெல்லாம் வினவியது. ''அயோத்திமா நகரை ஆண்ட சிங்கபூதரன் யான். அவ்விடத்து எனது நாற்படைகளையும் மாற்றுர் தோற்கடித்தனர். அதனுல், நாடிழந்து இங்கு வந்தேன்'' என்று கூறினுன். மன்னனெனக் கேட்டவுடன் களிப்புடன் மன்னனை நோக்கி, ''மன்னு! ஈழ மன்னனுடைய மகள் திருமங்கையைத் திருமணஞ் செய்தால், உனக்கு இலங்கை முழுவதையும் தருவேன்'' என்று கூறிற்று. அவன் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்து திருமணஞ் செய்வது நன்றெனத் துணிந்தான். காற்றினும் கடிய வேகமாகச் செல்லும் சலகாமி என்னும் குதிரையின் மீதேறி, குண்டைப் பூதம் வழிகாட்டிச் செல்ல, திருமங்கையை நாடிச் சென்றுன். அவளை மணமுடித்தான். மகிழ்வுடனிருந்தான்.

இதற்கண்மையில், கங்குவேலி என்னும் ஊரில் சிவன் கோயில் ஒன்று அழிந்து கிடக்கிறது. இன்று இப்பழைய சிவன் கோவிலுக்கு அண்மையில் புதியதொரு சிவன் கோயிலும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் ஆடி அமாவாசைத் தீர்த்தத்திற்கு முன்பு திருக்கரைசைப் புராணம் படித்துப் பயன் கூறுவர். அடுத்த நாள் மகாவலி கங்கையின் இடது கிளையாகிய குருக்கள் கங்கையில் தீர்த்தத் திருவிழா நடக்கும். இது கங்குவிலிலிருந்து 5 கல் தூரத்திலுள்ளது. இவ்வாறு போகும்போது இடையிலுள்ள அகத்திய ஸ்தாபனத்திற்குத் தூப தீபங் காட்டுவர். (குருக்கள் குடிகொண்டமையால் இக்கங்கையை குருக்கள் கங்கையென்று கூறுவர்). திரும்பி வரும்போது, அகத்திய ஸ்தாபனத்தில் சிவலிங்கத்திற்குத் திருமுழுக்காட்டி, தீபாராதனை செய்து வழிபட்டு மீளுவர். இதன் சூழலிலுள்ள வேளாண் குடிகள் மழை குறைந்த காலத்து மழை பெய்வான் வேண்டி நேர்த்தி வைத்து மழை

பெய்த பிற்பாடு பொங்கற் பூசை நடத்துவர். இவ்வகத்திய ஸ்தாபனம் வந்த வரலாறும் மிக வியப்பானது.

கைலாயத்திலே மலையரசன் மகள் உமாதேவியாருக்கும் சிவபெருமானுக்கும் திருமணம் நிறைவேறிற்று. இந்த மணத்திற்குத் தேவர்களும் முனிவர்களும் ஒன்று கூடினர். இதனால், வட திசை தாழ்ந்து தென்றிசை உயர்ந்தது. இதனைச் சமன் செய்வதற்கு அகத்தியனாரைத் தென்றிசைக்கட் போதியெனச் சிவபெருமான் கட்டளையிட்டார். இதனைக் கேட்டதும் அகத்தியமாமுனிவர் ''எம்பெருமானே! அடியேனுக்குத் தங்கள் திருக்கல்யாணத்தைக் காணும் பேறு இல்லையா?'' என்று வினாவினார். இதனைக் கேட்டதும் சிவபெருமான் ''தென்றிசைக்கட் போதி; ஆண்டு உனக்கு எம் திருமணக் கோலத்தைக் காட்டுதும்'' என்று திருவாய் மலர்ந்தருளினார். அகத்தியமாமுனிவர் கங்கையாருடைச் சென்று காவிரியாரையும், சமதக்கிண முனிவரிடஞ் சென்று அவர் மகன் திரணதூ மாக்கினியையும், புலத்தியனாரிடஞ் சென்று அவர் உடன் பிறந்த சகோதரியிடம் குமரியார் உலோபா முத்திரையாரையும் பெற்றுக் கொண்டு தென்றிசைக்கு ஏகினர். ஏகும் வழியில் விந்தியத்தை அடக்கி, பல சிவத்தலங்களைத் தரிசித்துக் கொண்டு சந்தனப் பொய்கைப் பெரும் பொதிகைக்கு வந்து சேர்ந்தார். ஆண்டுச் சில காலம் இருந்த பின்னர் தென்கயிலைக் கோண நாயகரது புகழைக் கேட்டு அவர் திருக்கோலக் காட்சியைக் காண, இலங்கைக்கு வந்தார். வந்து கோண நாயகரைத் தரிசித்ததும் சமனொளிபாதத்தை அடைந்து, இறைவனின் திருவடிகளை வணங்கி, பின் அங்கு நின்று மாவலிகங்கையைப் பார்த்தார்.

அதன்பின், சமன் கூடத்தை விட்டகன்று மகாவலிகங்கைக் கடற்படியும் இடத்தைக் கண்ணுற்று ஆனந்தித்துக் குருக்கள் கங்கையில் தீர்த்தம் ஆடினார். அப்போது இறைவன் அசரீரி மூலம், ''குருக்கள் கங்கைக் கீழ்க்கரையிலுள்ள கரசை ஓர் உத்தம இடம். சிவலிங்கத்தை வைத்து வழிபட ஏற்றது'' என்று திருவாய் மலர்ந்தருளினார். அகத்தியர் சிவலிங்கத்தைத் தாபித்து வணங்கினார். இக்கோயிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்குத் திவ்விய மாமணிச் சர்வ தீர்த்தமுடையவர் என்று பெயர். உமையவளுக்குப் போதி சத்தி என்று பெயர். மூத்த பிள்ளையாருக்கு நவ தீர்த்த விநாயகர் என்று பெயர். அகத்திய மாமுனிவர் இங்கிருந்து இறைவனை வழிபட்ட பின்பு திரும்பிப் பொதிகை மாமலைக்கு எழுந்தருளினார். இதன் பின்பு விஷ்ணுமூர்த்தி (திருமால்) மச்சாவதாரம் கொள்ள, அவர் மார்பை விட்டு, மகாலக்குமி (திருமகள்) அகன்று கரசைக்கு எழுந்தருளி, இக்கரைசைப் பெருமானை வழிபட்டு, திருமால் திருமார்பை வந்தடைந்தார்.

இஃதிவ்வாறிருக்க, வெருகலம்பதிக்குக் கிழக்குப் பக்கத்திலே இலந்தைத் துறை என்னும் ஒரு துறையுண்டு. இத்துறை முகத்தில் மதுரை மாநகரிலிருந்து அம்மன் சிலைகள் மூன்று வந்திறங்கின. இவ்விடத்து ஆதிகாலத்து கருங்கல்லாற் கட்டப்பெற்ற அம்மன் கோயில் ஒன்றுண்டு. அங்கெழுந்தருளிய அம்பாளின் பெயர் செம்பக நாச்சியார். இக்கோயிலுக்கு உப்பாற்று நடுவில்

அம்மன்குளம் என்னும் தாமரைப் பொய்கை ஒன்று இன்றும் அமைந்திருக்கிறது. அது என்றும் வற்ருத நன்னீர்த்தடாகம். இக் கோயிலில் எழுந்தருளிய செம்பக நாச்சியாரைச் சிந்து நாட்டு மக்கள் தமக்கு உறைவிடமாகிய ஈச்சிலம்பத்தைக்குக் கொண்டு சென்று வழிபட்டு வருகின்றனர். செண்பக நாச்சி அம்மையாரு டன் கொண்டு வந்த பத்திரகாளிச் சிலையை சம்பூர்க் கடற்கரை யில் காட்டுத் தேங்காய் மரநிழலில் எழுந்தருளிவித்து அதற்குச் செவ்வாய்க்கிழமை தோறும் பூசை நடத்துவர். இவற்ருேடு வந்த கண்ணகி அம்மையார் சிலையை மட்டக்களப்பின் தென் பாகத்து ஓர் ஊருக்குக் கொண்டு சென்று அங்கே வழிபாடாற்று கின்றனர். இவ்வம்மையார் மீது பிராமணப் பிள்ளையார் பாடிய ''மழைக்காவியம்'' இன்றும் பாடப்பெற்று வருகிறது.

இனி வெருகலம்பதி வரலாற்றினை ஒருவாறு கூறுவாம்:- தமிழ் நாட்டில் சற்றேறக் குறைய 14 ஆம் நூற்ருண்டிற்குப் பிந்திய காலத்தில் நல்லநாதச் செட்டியார் என்னும் பெயருள்ள செல் வர் ஒருவரிருந்தார். அவர் தொழு நோயால் துன்புற்ருர். முரு கர் அன்பராகையினுல், தென்னிலங்கையிலுள்ள கதிர்காமத் துக்கு யாத்திரை போய், அங்கு முருகப் பெருமானை வணங்கித் தனது நோயை நீக்கிக்கொள்ள விரும்பினுர். அவ்விருப்பத்தோடு கப்பலேறி அக்காலத்துப் பெருந்துறையாக விளங்கிய கொட்டியா புரத்தில் வந்திறங்கினுர். அங்கிருந்து பெருந்தெருவினூடாகக் கதிர்காமத்தை நோக்கி யாத்திரை போனுர். பல நாள் நடந்து காட்டுக்கூடாகச் சென்ருர். புலி, கரடி, யானை முதலிய விலங்கு கள் நிறைந்த காடுகளுக்கூடாக நடந்து களைப்புற்று, வரும் வழி யில் ஒரு சிற்ருற்றினைக் கண்டார். அதன் கரையில் போயிருந்து களைப்பாறிக் கொண்டார். அக்காட்டிலுள்ள வன விலங்குகளைக் கொன்று, உண்டு ஊனை வளர்க்கும் வேட்டுவத் தலைவனும் அவன் கூட்டமும் வில், அம்பு முதலியன ஏந்தியவராய் வந்து செட்டி யாரைச் சூழ்ந்துகொண்டனர். வேடர் தலைவன் செட்டியார் முன்னிலையில் செட்டியாரறியா மொழியொன்றினுல் உரையாடி னுன். அவற்றிற்குச் செட்டியார் சைகை மொழியினுல் விடை யிறுத்து, தான் கதிரை யாத்திரை போவதற்காக வந்திருப்பதை அவனுக்கு விளக்கினுர். உடனே வேடர் தலைவன் தன் அம்பை யும் வில்லையும் நிலத்திலே வைத்துத் தன் கூட்டத்தாரை நோக்கித் தன்னிருப்பிடஞ் சென்று மான் தோல் இரண்டு எடுத்து வருமாறு கட்டளையிட்டான். அவர் விரைந்தோடி அவன் ஆணை யின்படி, அழகிய இரு மான் தோல்களைக் கொண்டு வந்தனர். ஒரு மான் தோலில் வேட்டுவத் தலைவன் இருந்தான். மற்றைய மான் தோலைத் தன்னருகே விரித்து, செட்டியாரை அதன்மேல் இருக்கும்படி வேண்டினுன். அதன் பின்பு தனது கூட்டத்தின ரைக் கொண்டு தேனும், தினைமாவும், மானிறைச்சியும் அவ ருக்கு முன் வைத்து அவரை உண்ணுமாறு வேண்டி விருந்தோம் பினுன். அவற்றைச் செட்டியார் உண்டு, அருகிலேயுள்ள நீரை யருந்தி, தன் பசிக்களையையும் வழிநடந்த இளைப்பையும் நீக்கித் திரும்பவும் தமக்கு வேடன் அளித்த மான் தோல் இருக்கையில் அமர்ந்தார். பொழுது பட்டது. காடு எங்கணும் இருள் பரவத் தொடங்கியது. அப்பொழுது வேட்டுவர் தம்மிருப்பிடஞ் செல்ல

எண்ணினர். அருகிலேயிருந்த வேப்பமரத்தருகில் ஒரு மான் தோலைப் பரப்பி அதிலே செட்டியாரைப் படுத்துறங்கி இரவைக் கழிக்குமாறு வேண்டிச் சென்றனர். செட்டியார் தன் படுக்கை மீது அமர்ந்து தனது இரு கைகளைக் கூப்பி, முருகப் பெருமானை வணங்கித் தனக்குப் பாலித்த அருளை மெச்சி மெச்சிக் கண்ணீர் வார்த்து மயிர் சிலிர்த்து வாயார வாழ்த்தினுர். அதன்பின், மான் தோலின்மீது படுத்தார். நடந்து வந்ததினுல் எழுந்த கால்வலியினுலும், வேடுவர் அளித்த விருந்துண்ட ஆயாசத்தினுலும். தொழு நோயின் வருத்தத்தினுலும், அவருக்கு நீண்ட நேரம் தூக்கம் வரவில்லை. அங்குமிங்கும் புரண்டுகொண்டு படுத்திருந்தார். நள்ளிரவு வேளைதான் ஒரு சிறிது தூக்கம் வந்தது, அப்பொழுது கனுவிலே முருகப் பெருமான் காட்சியளித்தார், அந்நேரத்தில் செட்டியார் இரு கரங்களையும் கூப்பி வணங்கி, உள்ளமெலாம் கசிந்துருகி, ''எம்பெருமானே! அடியேன் இப்பிறப்பிற் பெற்ற பாக்கியமே பாக்கியம். நின்னைக் கண்டேன். என் பிறவிப் பயனை அடைந்தேன்!'' என்று விளம்பினுர். அது கேட்டு எம் பெருமான், ''அன்பனே! நீ தொழு நோயினுல் துன்புற்ருய். இந் நிலையில், என்னை வணங்கக் கதிர்காமத்திற்கு யாத்திரை செய்யத் துணிந்து கொண்டாய். உனக்கு என்மீதுள்ள பேரன்பினை மெச்சினேன். அஞ்சேல்! அஞ்சேல்! கதிரை என்பது மிகவுந் தூரத்திலுள்ளது. நீ அங்கு வருந்தி யாத்திரை செய்ய வேண்டா. இங்கு நீ எனக்கு ஒரு கோயில் கட்டி, சித்திர வேலாயுதர் என்ற பெயரினுல் வழிபடுவாய்'' என்ருர். அப்பொழுது, இதனைக் கேட்ட செட்டியார், ''எந்தாய்! என்னிடம் கையிற் பணமில்லை. கோயிலைக் கட்டி யெழுப்புவதற்கு ஆளில்லை. அங்ஙனமாக எங்ஙனம் கோயில் கட்டி வழிபடுவேன்'' எனக் கைகூப்பி அடிதாழ்ந்து வணங்கி நின்ருர். அப்பொழுது, முருகப்பிரான், ''அஞ்சவேண்டா, இதிலிருந்து 5 கல் தூரத்தில் அரிப்பு என்னுமிடம் உள்ளது. அங்குள்ள மலைகளுக்குள் ஏழு கிடாரம் திரவியம் மறைந்துள்ளது. அவற்றில் ஒரு கிடாரத்தை எடுத்து வந்து திருப்பணியை நிறைவேற்றுவாய்'' என்று திருவாய் மலர்ந்தருளினுர்.

கனு முடிந்ததும், துயில் உணர்ந்து முருகன் திருவருளை நினைந்து நினைந்து கண்ணீர் சொரிந்தார் செட்டியார். உடனே வெருகலாற்றிற்குச் சென்று வெருகல் இலைகளைப் பறித்து வந்து, மான் தோல்களின் மேல் பரப்பி அதன் மீது துயின்ருர். விடியற் காலையில் எழுந்து தன்னை நோக்கிய பொழுது தன் நோய் நீங்கப்பெற்றதைக் கண்டு பேரானந்தங் கொண்டார். எம்பெருமான் திருவிளையாடலை எண்ணி யெண்ணி இன்புற்றுத் தன்னிடம் பணித்த கட்டளையின்படி அரிப்பை அடைந்து ஏழு கிடாரங்களுள் ஒரு திரவியக் கிடாரத்தினை எடுத்து மறைத்து வைத்து விட்டு கோயில் அமைத்தற்கு வேண்டிய ஆயுதங்களைக் கொண்டு வரவும், சிற்பிகளை அழைத்து வரவும் தென்னுடு சென்ருர். சிற்பிகளையும், கோயில் வழிபாட்டுக்கு வேண்டிய பரிவாரங்களையும் நாவாய் கொண்டு இலங்கைத் துறையில் வந்து இறங்கினுர். இலங்கைத் துறை அவர் கட்டிய கோயிலுக்கு 3 கல் தொலைவில் உள்ளது. காலந் தாழ்க்காது கோயில் வேலைகளை

ஆரம்பித்து விரைவில் அதனைக் கட்டி முடித்தார். அவர் அமைத்த கருங்கற் கற்பக்கிரகமும், அர்த்த மண்டபமும் இன்றுமுள்ளன. ஏனைய பாகங்கள் காலத்திற்குக் காலம் அமைக்கப்பட்டன. சித்திர வேலாயுத சுவாமியை வள்ளி தெய்வயானை சமேதராய் மூலத்தானத்தில் வைத்துள்ளார். இக்கோயிலுக்குத் தென்கீழ்த் திசையில் கதிர்காம சுவாமி கோயில் அமைந்துள்ளது. செட்டியாருடன் வந்த, வண்ணார், அம்பட்டர், பச்சர், பறையர், சிந்து நாட்டர், பிராமணர், பண்டாரங்கள் தனித்தனி நீர் பெறுவதற்கு வெட்டப்பட்ட குளங்கள் இன்றும் இலந்தைத் துறையண்மையில் அமைந்து கிடக்கின்றன. செட்டியாருடைய உருவம் இந்தக் கோயிலின் விமானத்தின் வடதிசையில் வைக்கப்பட்டுள்ளது. அதன் இரு மருங்கிலும் இரு மல்லர்கள் வீர கோலத்துடன் நிறுவப்பட்டுள்ளனர்.

இக்கோயில் இரு மரபுந் தூய எதிர்வீர சிங்க இரத்தின பூபால பிள்ளை வன்னிமை பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது. இவரைத் தொடர்ந்து 32 பூபால பிள்ளை வன்னிமைகள் பரிபாலித்து வந்தனர். இவருள் இறுதியாக பரிபாலித்தவர் தனித்துண்ணுப் பூபால பிள்ளை வன்னிமையாவர். இவரைப் பல்லக்கிலேற்றி கோணேச கோயிலிலிருந்து காலாட்கள் காவி வருவர். இவர் இறுதியாகத் தான் ஏறி வந்த பல்லக்கினை அங்குள்ள கதிர்காம சுவாமி கோயிலுக்குக் கொடுத்துள்ளனர். அந்த அழகிய பல்லக்கு இன்றும் கதிர்காம சுவாமி மண்டபத்திலே உள்ளது.

இந்தக் கோயிலில் ஆண்டு தோறும் ஆவணித் திங்களின் உத்திர நன்னுளில் கொடியேற்றம் நடைபெறும். அதைத் தொடர்ந்து 18 நாட்கள் விழாவெடுப்பர். 19ம் நாள் கார்த்திகைத் திருநாளில் தீர்த்தம் நடைபெறும். ஒவ்வொரு நாளும் நடக்கும் திருவிழா விறுதியில் பத்ததியிற் கூறியவாறு பத்ததி படித்து அழைக்க முறையே **இருபாகை முதன்மை, சங்கமக் குருக்கள், பூபால வன்னிமை, நாடுபெற்ற வன்னிமை, கருலூலக்கணக்கு, பண்டாரக் கணக்கு, நாட்டுக் கணக்கு, தெருநாடு, குருநாடு, சிந்துநாடு** ஆகியோர் வந்து வந்து குருக்களிடம் காளாஞ்சி பெறுவர்.

இக்கோயிற் பரிபாலனம் பெரிய கங்காணம், கோயில் விதானை, உண்டியற் கங்காணம், கபடாக் கங்காணம், ஆகியோர் மேற்பார்வையில் நடைபெறும். இங்கு சுவாமி திருமுழுக்குக்கு வெருகல் கங்கையில் நீர் எடுத்துச் செல்வோரை திருமஞ்சனத்தார் என அழைப்பர். நெற்குற்றி, மாவிடித்து, பயறு குற்றி, கோயிலுக்கு உதவும் திருப்பணிப் பெண் மாணிக்கத்தாள் என அழைக்கப்படுவள். இக்கோயிற் பரிபாலகர் பலர் வெருகலம் பதியின் வடதிசையிலிருந்து மூன்று கல் தூரத்திலுள்ள ஈச்சலம் பத்தை என்னும் ஊரில் குடியிருக்கின்றனர். தம்பலகாமத்துக் கோணேசர் கோயிலுக்கும் இக்கோயிலுக்கும் ஒரே கோயிற் பரம்பரை அர்ச்சகராக அமர்ந்து வருகின்றனர். திருவிழாக்

காலங்களைத் தவிர்த்த நாளாந்த பூசை செய்வோரை **சங்கமக் குருக்கள்** என அழைப்பர்.

இக்கோயிலிலுள்ள மேளமும் குழலும் அற்புதமானவை. மேளம் ஐந்து கல் தொலைவிற்குக் கேட்கக் கூடியது. இது கஞ்சாக் கொட்டினால் அமைந்தது. குழல் இரண்டு முள நீளமுடையது; மரத்தினாலாயது; பித்தளைப் பூண் போட்டது. இவை இரண்டும் கண்டி மன்னனால் வழங்கப்பட்டவை என்பர் சிலர்.

திருவிழாத் தொடங்கி ஆறு நாட்கள் பிள்ளையாரும் அத்திரதேவரும் உள்வீதி வலம் வருவர். 7 ஆம் நாள் சந்தி காவல் நடைபெறும். அதன் பின் மூத்த பிள்ளையாரும் அத்திர தேவரும் உள்வீதியும் வெளிவீதியும் வலம் வருவர். 9 ஆம் நாளன்று சித்திர வேலாயுத சுவாமி கேடகத்து எழுந்தருளி இவர்களுடன் வலம் வருவர். பழங்காலத்து 13 ஆம் நாளில் நடைபெறும் திருவிழாவிலன்று இக்கோயிலிலிருந்து தென்மேற்றிசையில் ஒரு மைல் தூரத்திலுள்ள திக்காலை என்ற இடத்திற்குக் குருக்களும் கோவிற் பணியாளரும், பாகனும் பிற்பகலிற் போய் மடை வைத்துப் பூசை செய்து கூ, கூ என்று அழைப்பர். அப்பொழுது மலை போன்ற கருநிறத்தையுடைய கொம்பன் யானை ஒன்று காட்டிலிருந்து மரங்களை முறித்துக் கொண்டு பிளிறிக்கொண்டு வரும். இதனைப் பாகன் அன்பாக அழைத்துக் கோயிலுக்குக் கொண்டு வருவான். அன்று தொடக்கம் கதிர்காம சுவாமி இக்கொம்பன் மீது ஏறிப் பவனி வருவார். கதிர்காம சுவாமிக்குத் திருவிழா நடைபெற்று முடிந்தவுடன், சித்திர வேலாயுதர், மூத்த பிள்ளையார், அத்திர தேவர் முதலியோர் பவனி வருவர். தாந்தி என்பது இவ் யானையின் பெயர். இக்கோயிலிலிருந்து 16 கல் தொலைவில் சம்பூரூருக்குப் பக்கத்தே இளக்கந்தை என்னும் ஓர் ஊருண்டு. இதனைக் கரடிமலை என்றுங் கூறுவர். ஒரு நாள் தாந்தி என்னும் இக்கொம்பன் யானை ஆண்டுள்ள வேட்டுவன் ஒருவனின் நெல் வயலை மேய்ந்தது. இதனைக் கண்ட வேட்டுவனுக்குச் சீற்றம் உண்டாக தாந்தி மீது நஞ்சு பூசிய ஈட்டி எறிந்தான். அதனை வாங்கிக் கொண்டு தாந்தி என்னுங் கொம்பன் ஆனைத்தீவு கிரான் வெளிக்குக் கிழக்கேயுள்ள இடத்தில் வந்து விழுந்தது. அதனை இன்றும் கொம்பன் விழுந்த பள்ளம் என்று அழைப்பர். சிறிது உணர்வுற்று சித்திர வேலாயுத சுவாமி கோயிலின் திருமுன்னிலைக்கு வந்தது. வந்த கொம்பன் தண்ணீர்த் தாகத்தினால் வெருகல் கங்கையை அண்மி நீர் பருகிற்று. அத்தருணம் வெருகலாற்றிலுள்ள ஒரு பெரும் முதலை கொம்பனின் கையை இழுத்தது. கொம்பனும் முதலையும் சிறிது நேரம் போர் செய்த பின் முதலையை வெளியே யிழுத்துக் கொம்பன் வீசியது. பின்பு சித்திர வேலாயுத சுவாமியை வந்து வணங்கி ஓவென ஓலமிட்டு அலறி வீழ்ந்து இறந்துபட்டது. கதிர்காம சுவாமி குருக்களுக்கு ஆணையிட்ட பணிவுடைப்படி தம்பமண்டபத்தின் ஓரத்தில் சித்திர வேலாயுத சுவாமி முன்னிலையில் அடக்கஞ் செய்யப்பட்டது.

தாந்தியுடைய தந்தமும் முதலையுடைய பல்லும் கதிர்காம சுவாமி கோயில் மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டனவென்று கூறுவர். தாந்தி என்ற திருப்பெயர் இருபாற் பெயராகக் கிழக்கிலங்கையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

கதிர்காம சுவாமி பவனி வரும்போது வீதியிலுள்ள ஆண், பெண், குழந்தைகள் தெய்வமுற்று அறிவு கெட்டு தூக்கியெறியப்படுவர். அவ்வேளையில் குருக்கள் தீர்த்தக் கலசத்திலே உள்ள தீர்த்தத்தால் முகத்திலே எறிய அவர்கள் உணர்வுற்று எழும்புவர். அப்பொழுது அர்ச்சகர் தன் மனதிலே தோன்றியபடி நேர்கடனைக் கூறுவர். இந்நேர்கடன் பெரும்பாலும் காவடியாகவே இருக்கும். 16 ஆம், 17 ஆம், 18 ஆம் திருவிழா நாட்களில் இக்கோயிலுக்கு வரும் காவடிகளுக்குக் கணக்கில்லை. ஆண்களும் பெண்களும் பிள்ளைகளும் காவடி எடுப்பர். அதுவுமன்றி நோய் நீங்கிய மாடுகளும் காவடி எடுக்கும். இது ஒரு கண்கொள்ளாக் காட்சி.

18 ஆம் நாட்திருவிழா இரவு சித்திர வேலாயுதர் இக்கோயிலுக்குக் கிழக்கிலுள்ள தாமரைக் குளத்துக்குச் சூகர வேட்டையாடச் செல்வர். சூகரம் என்பது பன்றி. இச்சூகரத்தை மாவினால் ஒரு பன்றிபோல அமைத்து, அதனைப் பெருமிடாவில் அவித்து தாமரைக் குளத்தருகு வைப்பர். சுவாமி தாமரைக் குளத்தருகு வந்தவுடன் குருக்கள் வேலாயுதம் ஒன்றைத் தாங்கி, பன்றி வேட்டையாடும் வேடர்போல விளையாடி வேலாயுதத்தினாலே எறிவர். எறியப்பட்ட சூகரத்தை மஞ்சள் தெளித்த வெள்ளைச் சீலையுட் பொட்டணியாய்க் கட்டி மாணிக்கத்தாள் தலையில் வைத்துக் கொண்டு சுவாமி முன் செல்வாள். சுவாமி கோயில் வாயிலுக்குத் திரும்பி வந்ததும் புலவர் வாதம் நடைபெறும். அம்பாள் பக்கம் பெரிய குருக்களும் சுவாமி பக்கம் பாட்டு வழி சந்ததியிற் தோன்றிய நீலாப்பளைப் பத்தினி அம்மன் போசகரும் நின்று வாதம் புரிவர்.

இக்கோயிலில் மட்டக்களப்புப் பட்டணத்திலிருந்து 4 கல் தூரத்திலுள்ள இஸ்மயில் என்னும் இயற்பெயர் கொண்டவனும், செயித்தான் என்னும் பட்டப் பெயர் கொண்டவனும் மாய மருந்தில் வல்லவனும் அஞ்சனம் பார்ப்பதிற் தீரனும், வசியப் பொட்டு அணிந்து யாவரையும் மயக்கும் வல்லனுமாகிய கள்வர் தலைவன் தனது கூட்டத்தோடு நல்லநாதற் செட்டியினாலே வெருகலம்பதியில் வைக்கப்பட்ட இரத்தினங்களும், தங்க அரிசியும், இரத்தின மாலைகளும், முத்துப் பதக்கங்களும் ஆகிய விலை பெற்ற திரவியங்களை ஓடத்திலே வெருகல் ஆற்றின் ஊடாகக் கோயிலுக்குச் சென்று தட்டான் ஒருவனின் உளவின் உதவியினாற் திருடிச் சென்றான். களவெடுத்தபின் மீண்டு ஓடத்தில் ஏறிச்சென்றான். செல்லும்போது வெருகல் ஆற்றிலுள்ள முதலைகள் தோணியைத் தடுத்தன. அப்பொழுது கோயிலுக்குரிய பெரிய குத்து விளக்கு இரண்டையும் ஆற்றுக்குள் வீசி உயிர்தப்பிச் சென்றனன். இவ்வாறு களவாடிப்

பொருட்களைக் கொண்டவரும் கொடுத்தவரும் கொள்ளைநோய் வாய்ப்பட்டு இறந்தனராம். இக்களவு நிகழ்ந்தது ஒரு நூற்றுண்டுக்கு முன்னர் என்பர். வெள்ளி செவ்வாய்க் கிழமைகளில் அகப்புறத் தூய்மையோடு சித்திர வேலாயுதரை வணங்கிவிட்டு வெருகல் கங்கைக் கரையில் போய் நின்று பார்த்தால், இரு விளக்குகள் எரிகின்றதை கண்ணுறுவர் என அப்பகுதியில் வாழ்வார் கூறுவர்.

சித்திரைத் திங்கள் கொண்டாட்ட காலத்திலே ஆடவரும் பெண்டிரும் கயிற்று ஊஞ்சல் கட்டி ஆடுவர். அத்தருணத்திலே காதல் சம்பந்தப்பட்ட இசைப் பாடல்களைப் பாடுவர்.

# விண்மீன்கள் நாணும்

வ. கோவிந்தபிள்ளை

பாதஞ் சிலம்பொலிக்கப் பைங்கொடியாள் மார்பகத்தே
ஓதுசிந் தாமணிதான் ஒள்ளிடவே—மேவிக்
கலையரசி வந்துநின்றுள் கண்குளிரக் கண்டேன்
சிலையானேன் சிந்தனையுட் சேர்ந்து.

விண்மீன்கள் நாணும் விழிகாணிற் திங்களோ
தண்வதனங் காணிற் தலைகவிழும்—பெண்மான்கள்
பேசா தகலும் பிடியொதுங்கும் பேரழகி
ஆஆ இவள்யாரோ வென்று.

புடைபெயர்ந்தேன் பொற்றெடியாள் பூங்கரத்தைப் பற்றக்
கடைவிழியாற் பார்த்தாள் கனிவாய்—இடையின்
எழில்கண்டேன் பூங்கொம்பே என்பேன் மனதிற்
களிகொண்டேன்! கண்ட விடத்து.

அசைத்தா ளுதடுகளை ஆரமிழ்தஞ் சேர்த்தே
இசைத்தமிழில் நெஞ்சம் இழக—அசைத்திட்ட
கால்கள் நடம்பயிலக் கண்கள் கரங்கள்வழிச்
சேல்களெனச் சென்றனவே சேர்ந்து.

நிலைமறந்தேன் என்றனது நெஞ்சம் இழந்து
கலைமகளின் நாட்டியத்தைக் கண்டே —சிலையாய்
இருந்தவெனைத் தொட்டிழுத்தாள் ஏகினேன் ஆங்கண்
விருந்தளித்தாள் வேல்விழியாள் தான்.

# கிழிந்த அங்கி

''எழிலி''

''எட்வின் ஐயாவின் கறுப்புக் ''கோட்'' எங்களுக்கு ஒரு நாளைக்குத் தேவைப்படுகிறது.''

சிரிநிவச விருந்தையில் ஓர் ஆசனத்தில் அமர்ந்து மேற் கூறிய சொற்களைச் சொன்ன வாலிபன் இருபதுக்கும் இருபத்து நான்குக்கும் இடைப்பட்ட வயதினனுவான். அவன் கற்றவன் அல்லன். எனினும் அக்காலத்தில் கிராமப்புறத் திண்ணைப் பள் ளிக்கூடத்தில் பெறக்கூடிய அறிவை அவனும் பெற்ருன். சிறு வயதிலிருந்து அவன் திண்ணைப் பள்ளிக்கூடத்திலே படித்தான். அவன் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் முதலில் ''மணலில்'' எழுதக் கற்றுக் கொண்டான். ஆதலினுல் அவன் கடதாசியில் எழுதும் போது கூட எழுத்துக்கள் பெரியனவாயிருக்கும். சில வசனங் களைக் கொண்ட ஒரு கடிதத்தையாயினும் அவன் தனது கை எழுத்தில் எழுதும் பொழுது 'பூல்ஸ்கப்' தாளில் இரண்டு அல்லது மூன்று பக்கங்களை நிரப்பக் கூடியதாக அது இருக்கும்.

சாரம் ஒன்றை உடுத்து வேருெரு சாரத்தால் தோளை மூடிப் போர்த்திக் கொண்ட அவன் நாற்காலியின் ஒரு பக்க அருகில் உட்கார்ந்திருந்தான். நாற்காலியின் மற்றப் பக்க அருகை நகத் திணுல் சுரண்டிக்கொண்டிருந்தான். முடியுமானதொன்ருே எனப் பார்க்க முயல்பவன்போல் வலது கையால் சுரண்டிக் கொண்டிருந் தான். பெரிய மூக்கையும் பஞ்சு நிரப்பப்பட்ட தலையணை போன்று மலர்ந்த கன்னத்தையும் உடைய அவனது முகத்தில் இருந்த இரு கண்களிலும் அச்சமும், அவைக்கூச்சமும், பணிவும் பிரதிபலித்துக்கொண்டிருந்தன என்று தான் கூற வேண்டும்.

இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் சாரமும் உட் சட்டையும் கிராமச் செல்வந்தர்களின் உடையாக இருந்தன. இன்று போல் காற்சட்டை 'கோட்' அணியும் 'ஐயாமார்' அக்காலத்தில் இருக்கவில்லை. அக்காலத்தில் கிராமத்தில் ,ஆரச்சிருலஹாமியின்' புதல்வர்கள் மாத்திரமே 'கோட்'டும் 'டுவீட்' துணியும் அணிந்தனர். அரசாங்க பதவி பெற்றவர்களை யும் அவர் தம் புதல்வர்களையும் தவிர ஏனையோருக்கு அங்கி பொருத்தமுடையதன்றென்று கருதினமையினுலோ என்ன வோ கிராம மக்கள் சாரத்தையும் உட்சட்டையையும் அணிவ

தில் அல்லது ஒரு சாரத்தை உடுத்து வேறொரு சாரத்தை கழுத்தில் இடுவதில் திருப்தி அடைந்தனர்.

“ஆ! கொர்னேலிஸ், ஏன் உனக்குக் கறுப்பு அங்கி?”

‘‘என்ன? ஆரச்சி அம்மையாருக்குத் தெரியாதா? கலியாணம் அல்லவா?

‘‘கலியாணம்.........’’

‘‘ஆம்’’

‘‘யாருக்கு?’’

கொர்னேலிஸ் சிரித்தான். எனினும் பதிலளிக்கவில்லை. வியப்படைந்த ஆரச்சி அம்மையார் ‘‘யாருக்கு’’ எனப் பல தடவை கொர்னேலிசிடம் கேட்டார். கொர்னேலிசிடமிருந்து பதில் கிடைக்கவில்லை. இறுதியில் அவனுடைய மௌனத்தின் காரணத்தைப் புரிந்து கொண்ட ஆரச்சி அம்மையார் கண் சிமிட்டிப் புன்முறுவல் பூத்தார்.

“அப்படியாயின்.....................கலியாணம் உனக்குத்தானே”

‘‘எனக்குத் தெரியாது.......................எனக்கென்று கூறுகிறார்கள்’’ என்று வாலிபன் வெட்கப்பட்டவன் போன்று நிலத்தை நோக்கியவனுய்த் தான் உட்கார்ந்திருந்த கதிரையை அதிகமாக நகத்தால் சுரண்டினான்.

‘‘அப்படிச் சொல்லு.....................இனி எங்கிருந்து?’’

‘‘அகோனிஸ் பிள்ளையின் வீட்டிலிருந்தாம்’’

‘‘அப்படியென்றால் வாசியுள்ள இடம் அல்லவா? அவர்களிடம் காணி பூமி அதிகம் உண்டு. காசு என்றால் கிடைக்காது......... அகோனிஸ் பெரும் உலோபி. சரி, அங்கி எப்போதைக்குத் தேவை?’’

‘‘ நாளை மறுநாள்.’’

“ஆ! கொர்னேலிஸ், முக்கியமான திருமணத்துக்கு வேறொருவன் அங்கியை அணிவது நல்லதா? உனது அப்பா காசு இல்லாதவரா? “கோட்” ஒன்றைத் தைத்துத் தரும்படி அப்பாவிடம் சொல்.’’

“கோட்” ஒன்று தைப்பிக்கவேண்டும் என்று சொன்னதும் அப்பா ஏசிப்போட்டார்.’’

இன்றுபோல் மேனாட்டுப் பண்பாடு பரவாத அக்காலத்தில் கிராம மக்கள் அனைருவம் 'லாக்க'த் துணிகளின் விலையை அறியாதோராவர். 'லாக்க'த் துணியினால் அங்கி ஒன்றைத் தைப்பிப்பதற்கு சிறு காணி ஒன்றின் பெறுமானம் தேவைப்படும் எனச் சிலர் கருதினர். கறுப்பு அங்கி கொர்னேலிசின் தகப்பன் நினைப்பது போன்று பெறுமதியான தொன்றன்றென்பது ஆரச்சி அம்மையாளுக்குத் தெரியும். அதுபற்றிக் கொர்னேலிசிடம் கூற அவள் விரும்பவில்லை. கொர்னேலிஸ் போன்றவர்கள் அதன் உண்மையான விலையை அறிந்துகொண்டால் அவள் தன் புதல்வனின் கறுப்பு அங்கியின் பெறுமதியும் குறைந்துவிடும் என்று அவள் எண்ணினாள். அங்கியின் பெறுமதியை மாத்திரமன்றி ஆரச்சி அம்மையாரின் குடும்பப் பெறுமானமும் குறைய ஏதுவாகும் என அவள் எண்ணியமையால் தொடர்ந்து ஒன்றும் அதைப்பற்றிக் கதைக்கவில்லை.

"நல்லது.........அப்படியென்றால் 'கோட்'டைத் தரலாம்.

"'டுவிட்' துணியும் வேண்டும்.''

"ட்-வீட் துணி'' என ஆரச்சி அம்மையார் மிக முயன்று ஆங்கிலப் பெயரைச் சரியாக உச்சரித்தார். அவ்வம்மையாருக்கு ஆங்கிலம் தெரியாது எனினும் மகன் அச்சொல்லைக் கூறுவதைக் கேட்டிருக்கிறார்.

"ஆம் கமிசையும் கழுத்துப்பட்டியும் இரண்டு சப்பாத்தும் வேண்டும். இவை அனைத்தையும் கவனமாக உபயோகித்து விட்டுத் திருப்பித் தருகிறேன்.''

"எட்வின் ஐயாவின் சப்பாத்துக்கள் உனது காலுக்குப் பொருந்துமா?''

"அன்றைக்கு மாத்திரம் ஏதோ ஒரு வகையில் சரிக்கட்டிக் கொள்ள இருந்தால் போதும் என அப்பா சொன்னார்.''

"சரி, அப்படியென்றால் பார்ப்போம்.''

விவாக தினத்தன்று கொர்னேலிஸ் காலையிலேயே எழுந்து உடை உடுத்துத் தயாரானான். அங்கி அவனுக்குச் சற்றுச் சிறிதாக இருந்தது. எனினும் ஏதோ ஒரு வகையில் அணிந்து அங்கியின் இரண்டு அருகுகளையும் ஒன்று சேர்த்து பொத்தான் இட்டான். அடி தூக்கும் பொழுது நிலத்தில் விழும் அளவுக்கு சப்பாத்துக்கள் பெரியன; அவ்வேளையில் பயன்படுத்திக்கொள்ள இயலும் வகையில் சீலைத்துண்டுகள் இரண்டை இரண்டு சப்பாத்துக்களுள்ளும் செலுத்தி அவற்றைச் சரிக்கட்டிக் கொண்டான். கொர்னேலிசோவெனின் நன்கு வளர்ந்த தேகக் கட்டையுடைய சிறந்த ஒரு வாலிபன். அவனுடைய கண்கள் சிறியன. அதிகம் ஒடுக்கமில்லாத நெற்றி; நீண்டுயர்ந்த மூக்கு; மென்மையான இரண்டு உதடுகள்; சிறிய வாய்; அவன் சாரமும் உட்சட்டையும்

அணிந்திருக்கும் பொழுது நல்ல தோற்றத்தையும் ஞாபகசக்தியையும் உடைய ஒரு வாலிபன். பிறரிடம் கேட்டுப் பெற்ற கமிசையும் அங்கியையும் அணிந்து கொண்ட பின்னரோவெனின் அவன் கட்டழகன் போல தோன்றவில்லை. அவனிடம் இயற்கையாகவே இருந்த அச்சமும் அவைக்கூச்சமும் மேற்கூறிய உடைகளை அணிந்த பின்னர் பன்மடங்காக அதிகரித்தன. கள்ளங்கபடமற்ற அவன் பிறவி முட்டாள் போன்று காட்சி அளித்தான். கொர்னேலிஸ் கற்றவன் அல்லனெனினும் அறிவிலியுமல்லன். அவன் ஓர் இளைஞன் எனினும் சிறுபிள்ளை போன்று பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடப்பவன். தாய் தந்தையர் சொல்வதை நல்லது, சரி என அவன் எப்பொழுதும் எண்ணினுன். அவன் ஒரு போதும் பிறந்த கிராமத்தை விட்டுச் செல்லவில்லை. உலகத்தைப்பற்றி ஒன்றும் அறியாத அவன் திருமணம் புரிய இணங்கியதும் தாய் தந்தையர் சொன்னமையினுலேயாம்.

தனது உறவினருடன் மணவாட்டியின் வீட்டுக்குச் சென்று மணமகளுக்குக் கூறையுடுப்பித்தல், மாலையிடுதல் முதலியனவும், பின்னர் விவாகப் பதிவுகாரரிடம் சென்று அவர் சொல்வதைச் சொல்லி பதிவுப் புத்தகத்தில் கையொப்பமிடுவதும் கொர்னேலிசுக்கோவெனின் வருத்தமுண்டாக்குவதும் களைப்படையச் செய்வதுமான கடினகாரியமாயின. கொர்னேலிஸ் விவாகப் பதிவுகாரரின் அடிமைத் தன்மையிலிருந்து தப்பித் தனது மனைவியுடன் வந்து குதிரை வண்டியில் அமர்ந்தான். அதற்குப் பின்னரே அவனுடைய மனது ஆறுதலடைந்தது, தன்னை மணம்புரிந்த நங்கையை முன்னர் ஒரு முறைதான் கொர்னேலிஸ் கண்டிருக்கிருன். அவளுடன் இதற்கு முன்னர் ஒரு போதும் அவன் உரையாடியதில்லை. இப்பொழுது அவள் அவனுடைய மனைவி எனினும் அவனுக்கு முன்பு அறிந்திராத அதிதியாக இருந்தாள். அவள் அச்சத்தாலும் நாணத்தாலும் அல்லலுறுகிறவள் போன்று அவனுக்குத் தோற்றியது. அவளை அழைத்தால் அவள் அவனை ஏசிவிடுவாள் எனக் கொர்னேலிஸ் நினைத்தான்.

மணமக்களிருவரும் பரிவாரங்களும் மணமகன் இல்லத்தை அடையும்போது மாலை ஆறு மணி இருக்கும்.

"ஏன்.........கவலைப்படுகிறீர்கள்?........." எனக் கேட்டுக் கொண்டு கொர்னேலிசின் மனைவி இருக்கை ஒன்றில் அமர்ந்து வருந்திக்கொண்டிருக்கும் தனது கணவனை நெருங்கினுள்.

மணமக்களிருவருக்கும் வந்த பரிவாரங்களுக்கும் தாய் தந்தையர் இராப்போசன விருந்து ஒன்று அளித்தனர். விருந்துபசாரத்தின் பின்னர் மணமக்களிருவரையும் ஆசீர்வதித்துவிட்டு அவர்களைக் கொண்டுவந்து விடவந்த பெண்களும் ஆண்களும் தத்தம் வீடு நோக்கிச் செல்லலாயினர். அவர்கள் சென்ற பின்னர் கொர்னேலிஸ் அறையுட்புகுந்து ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி இருந்தான். அவனுடைய மனைவி அவன் முன்னிலையில் இருந்த சிறு மேசையில் கையைவைத்து அதில் சாய்ந்துகொண்டிருந்தாள். அவர்களின் அறையில் மாத்திரமே விளக்கு ஒன்று எரிந்துகொண

டிருந்தது. கால் மணி நேரம் சென்றுவிட்டபோதிலும் கொர்னேலிசின் வாயிலிருந்து ஒரு சொல் கூட வெளிப்படவில்லை. அவன் கற் சிலை ஒன்றுபோல் ஆடாமல் அசையாமல் சிந்தித்த வண்ணம் இருந்தான். இதன் மர்மத்தைப் புரிந்துகொள்ள முடியாத அவனுடைய மனைவி மெல்ல மெல்ல அவன் பக்கம் நடந்து தனது சிறிய வலக்கையை அவனுடைய தோளில் வைத்து "கவலையோடிருப்பதேன்?" எனக் கேட்டாள்.

கொர்னேலிசிடமிருந்து பதில் கிடைக்கவில்லை. அவள் மீண்டும் மீண்டும் வினவினுள் எனினும் அவனிடமிருந்து விடை கிடைக்கவில்லை. அவன் முன்னிலையில் அவள் முழந்தாளிட்டு "ஐயோ! ஏன் அழுகிறீர்கள்?" என நடு நடுங்கிய குரலில் கேட்டாள். சோக கீதம் ஒன்றுபோல் அது கர்னேலிசின் காதில் ஒலித்தது அவன் தலையை உயர்த்தி தனது மனைவியின் முகத்தைப் பார்த்தான். பெருமூச்சினுல் அமைந்த உதடுகளையும் அன்பு நிறைந்த இரு கண்களையும் கொண்டு நாணத்தால் அல்லலுறும் அவளுடைய மிருதுவான முகத்தைக்கண்ட கொர்னேலிசிடம் இற்றைக்கு முன் ஒருபோதும் ஏற்படாத ஒரு புத்துணர்ச்சி தோன்றியது.

"நான் அழவில்லை............சிந்தித்தேன்."

"சிந்தனை செய்து வருந்துவதேன்? நான்.........எனது........."

"இல்லை."

அவனுடைய துக்கத்துக்குக் காரணம் அவளுடைய பிழையன்று என்பதைக் கேட்டதும் அவள் பெருமகிழ்ச்சி அடைந்தாள், அவளிடமிருந்த சந்தேகம் அகன்றது.

"வருந்துவதேன்? என்னிடம் கூறுங்கள்."

"நான் கூற விரும்பவில்லை."

"இல்லை.........இல்லை, கூறுங்கள்."

அசிடாவின் பிடிவாதம் காரணமாக கொர்னேலிஸ் தனது வருத்தத்துக்குரிய காரணத்தை விவரித்தான். "நான் இன்று உடுத்துக்கொண்டு சென்ற துணியும் கோட்டும் என்னுடையதல்ல. அவற்றை ஒருவனிடம் கேட்டுப் பெற்று உடுத்துக்கொண்டு போனேன். உன்னுடைய வீட்டை அடைந்து வண்டியிலிருந்து இறங்கும்போது ஆணி ஒன்றில் சிக்கி 'கோட்' கிழிந்துவிட்டது. பின்னர் சுருட்டுச் சாம்பல் விழுந்து துணியும் சற்று எறிந்துவிட்டது. இனி, இவை இரண்டிற்கும் நட்ட ஈடு செலுத்தவேண்டும். உன்னுடைய அப்பா சீதனமாக காசு கொடுக்கவில்லை. அதற்காக எனது அப்பா கோபத்தோடு இருக்கிறுர், எனவே அப்பா ஒரு நாளும் இவற்றிற்கு நட்ட ஈடு செலுத்த காசு தரமாட்டார்."

"நல்லது, அதைச் செலுத்த முடியாதா என்ன?"

"செலுத்துவதெப்படி? நீ எனது அப்பாவின் தன்மையை அறியமாட்டாய். நான் சம்பாதித்த காசும் அப்பாவிடம். சிறுவர்களுக்குக் காசு தேவைப்படாது என்று கூறி அப்பா அவற்றையும் எடுத்துச் சேர்த்துக்கொண்டார். அப்பா மிகவும் சிக்கனமாகவே உண்ண உடுக்கச் செலவு செய்வார். எனது தேவைக்கு ஐந்து ரூபா பெற்றுக் கொள்ள முடியாது."

"நல்லது அதை நான் செலுத்துகிறேன்," எனக் கூறிக் கொண்டு அசீடா புன்முறுவல் பூத்தவளாய் அவளுடைய வலது கையை அவனுடைய கழுத்தைச் சுற்றிவர இட்டு அவளுடைய முகத்தை அவனுடைய இடது தோளின் மேற்பாகத்தில் தங்கச் செய்தாள்.

"உனக்குக் காசு எப்படிக் கிடைக்கும்?" என்று கேட்டவனுய் கொர்னேலிசு அவளுடைய தலையைப்பிடித்து தன்னுடைய கன்னத்தை அவளுடைய தலையில் சேர்த்து இறுக்கினுன்.

"ஏன் என்னுடைய நகை நட்டுக்கள்?"

அவளுடைய வாயிலிருந்து வெளியான மேற்கூறிய சொற்கள் இன்னிசைபோன்று அவனுக்குக் கேட்டது. அவளுடைய தலை மயிர் நனைக்கப்பட்ட நறுமண நீர் காரணமாகவும், கழுத்தில் பூசப்பட்டிருந்த மணங்கமழ் சந்தனம் காரணமாகவும், அவளுடைய மூக்கிலிருந்து வெளிப்பட்ட மூச்சும், மலர்களின் நறுமணம் கலந்த தென்றற் காற்றுப்போன்று கொர்னேலிசின் உள்ளத்தைக் கவர்ந்தன. அவன் இரு கைகளாலும் அவளுடைய தலையைப் பிடித்து கண்களை தனது முகத்தில் தங்கச்செய்தான். நாணமேலீட்டால் நிலத்தை நோக்கிய காதல்கனிந்த அவளுடைய இரு கண்களும் இரண்டு இந்திரநீல மாணிக்கங்கள் போன்று பிரகாசித்தன. சற்று மலர்ந்த நாணம் நிரம்பிய சிரிப்பலைகளைக் கொண்ட அவளுடைய உதடுகள் இரண்டின் ஊடாக முத்துப் போன்ற மிக்க வெண்மையான சிறுபற்கள் காட்சி வழங்கின.

மனைவி ஒருத்தியிடம் இத்தகைய விழுமிய பண்புகள் இருக்கும் என கொர்னேலிஸ் இதற்கு முன்னர் அறியவில்லை. "இல்லை ..... ...............நகை நட்டுக்களை விற்பதில்லை."

(மாட்டின் விக்கிரமசிங்ஹவின் 'இருனுகபாய' (ඉරුණු කබාය) என்ற சிறு கதையின் மொழி பெயர்ப்பு.)

# சம் யோன் பேசே

அ. வி. மயில்வாகனம்

இவ்வுலகில் இயற்கைவளம் நிறைந்தநாடுகள் மத்தியவல யத்தில் பலவுள. அவை மத்திய வலயக் காடுகளும் அக்காட்டில் வாழும் விலங்குகளும் பறவையினங்களும் உடையனவாக விருக்கும். சமகோட்டுத் தாவரங்கள் பயிரிடப்பட்டுள்ள நல்ல பசியகழனிகளையும் அவற்றில் வேலை செய்யும் தொழிலாளர் களையும் இவ்வலயங்களிற் காணலாம். சிறு தீவுகளில் என்ருல், கடற்ரெழிலாளர் வள்ளங்களிற் சென்று வெகுதூரத்திலும் மீன் பிடித்து வருவதைக் காணலாம்.

கொலம்பசு கண்டுபிடித்த பகாமாசுத் தீவுகளுக்குத் தென் கிழக்கே பெரிய அந்திலீசு, சிறிய அந்திலீசு, என்று இரண்டு கூட்டம் தீவுகள் உண்டு, இவற்றுள் சிறிய அந்திலீசிலுள்ள குவாடலூப்பு என்னும் முருகைக் கற்பார்ச் சிறுதீவும் முன்னே கூறப்பட்ட காலநிலைக்கு உதாரணமாகவுள்ளது.

இத்தீவு பல ஆண்டுகளாக பிரெஞ்சு ஆட்சியின் கீழ் இருந்து வருகின்றது. இங்கு யாத்திரிகராகச் சென்ற பழைய பிரெஞ்சுக் குடியேறிகளும் சிவப்பிந்தியப் பழங்குடி மக்களும் வாழுகின்றனர். இப்பழைய பிரெஞ்சுக் குடும்பங்களுள் ஒன்று அலெட்சிசு குடும்பம். இக்குடும்பத்தில் 1887இல் பிற்காலத்தில் பெரும் புகழீட்டவிருந்த சிறு குழந்தை ஒன்று பிறந்தது. இதற்கு அலெட்சிசு இலெகர் என்ற பெயர் வழங்கப்பட்டது. இலெகர் உரிய காலத்தில் பிரெஞ்சு கற்றுச்சட்டநூல் வன்மை யும் பெற்ருர்.

சட்டநூல் அறிவும் பிரெஞ்சு மொழியில் ஆற்றலும் ஒருங்கே அமையப்பெற்ற இவர், நாட்டுப் பற்றும் அதிகம் உடையவராகக் காணப்பட்டார். இவர் 1917 இலிருந்து 1922 வரை சீன தேசத்தில் பிரெஞ்சுத்தானிகருக்கு ஒரு செயலாள ராகக் கடமையாற்றிவந்தார். பின்பு, 10 வருடம், வெளிநாட்டுச் செயலாளராயிருந்த **பிருயண்டு** என்பவருக்குச் சேவை செய்தார். ஆயினும், 1940 ஆம் ஆண்டின்பின், அமெரிக்க ஐக்கிய மாகாணத்திலேயே உவாசிந்தனில் வாழ்ந்து வருகின்ருர். இவர், 1940 ஆம் ஆண்டு வரையும் தாமே நிரந்தர செய லாளராகப் பதவியேற்றிருந்தார். இவர், தம்முடைய இளம் வயதிற்ருனே பாட்டுப்பாடத் தொடங்கிவிட்டார். குவாடலூப்பின் அழகினையும் அங்குவீசும் மத்தியவலயக் காற்றின் விரைவையும் அதன் பயனையும், அங்கே பெய்யும் மழையையும் அதன் பயனையும் எடுத்து உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாகவும் உரைச் செய்யுளாகவும் பாடியுள்ளார். 1924 இலேயே இவருடைய சிறந்த பாடல் பிரசுரிக்கப்பட்டது. அதுதான் **அனபேசு** என்பது. இதனை 1930 இல் T.S. எலியற்று என்பார் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். சம்யோன் பேசே என்பது

இவருடைய சூட்டு நாமம், இதுவே இவருடைய நூல்களில் வழங்குவது.

இவர் சீனு தேசத்திலும் கோபிவனுந்திரத்தலும் இருந்த பொழுது பெற்ற அனுபவத்தின் காரணமாக பாடியமைத்த பாடல்கள் இவை. காற்றினைப்பற்றி 1946 இல் இவர் பாடிய நீண்டபாட்டானது ஆழத்திலும் செறிவிலும் நயத்திலும் பெயர்போனது என்பர்.

சீனர்கள் வாழ்க்கையையும் அவர்கள் முயற்சிகளையும் வழக்கங்களையும் சீனதேசத்து வளப்பங்களையும் இயற்கை நலன்களையும் படம் பிடித்துக் காட்டும் இவருடைய பாடல்கள் வெட்டெனவான கடும் நடையையுடையன. இவற்றிடை 'புதுமை' பிறக்கின்றது, சொற்களிற்சந்தம் பிரிக்கமுடியாது இருக்கின்றது.

சென்ற ஆண்டு இவருடைய பாடல்களைப் பிரெஞ்சு அரசாங்கம் மெச்சிப் பண்பாட்டாராய்ச்சி அமைச்சின் மூலம் இவருக்கு ஒரு பரிசு வழங்கியது. இதற்குப் பேரரும்பரிசு (Grand Prix) என்று பெயர். இந்தப் பரிசு '55ஆம் ஆண்டிலேயே இவ்வருக்கு வழங்க முயற்சி எடுக்கப்பட்டது. ஆயினும், இவ்வாண்டுதான் இது கைகூடியது. இவருடைய பாடல்கள் ஒப்புயர் வற்றன என்று பண்பாட்டமைச்சினர் இவருக்குப் புகழ் மாலை சாற்றியுள்ளார். இந்தப் புகழ், இப்புலவர் வாழும் சந்ததியில் தோற்றிய பிரெஞ்சுப் புலவர் எல்லோரிடையிலும், ஒப்பிட்டுப்பார்த்து இவருக்கு வழங்கப்பட்டது, ஆதலால் இவருடைய ஆற்றலை நாம் ஒருவாறு அறியலாம்.

இவருக்கு இவ்வாண்டில் நோபெல்பரிசு கொடுத்தவர்கள் இவருடைய பாடல்களில் தாம் காணும், **விளிப்பு மனோபாவத்துக்கும் உயர்ந்து எழுந்து பறக்கும் கற்பனைக்கும் என,** பரிசு வழங்கியதாகக் கூறியுளர்.

இந்தப் பரிசு இவ்வாண்டு 2½ இலட்சம் ரூபாவரையில் உள்ளது இதனை திசெம்பர் மாதம் 10 ஆம் திகதி ஆகிய அல்பிரட்டு நோபெல் ஞாபக தினத்தில் வழங்கியுள்ளார்கள்.

இவர் பாட்டுக்கள் ஒரு உன்னதத் தோற்றத்தை அளிக்கின்றபடியாலும், **மலாமே, இறிம்போட்டு** என்போர் போன்ற பெரும் புலவர்களின் தத்துவ வெளிப்பாட்டு முறையைக் கைப்பற்றியபடியாலும், சாதாரண நிகழ்ச்சியிலிருந்து பெருந்தத்துவ ஞானக் கருத்தை வெளிப்படுத்துவதாலும், இப்பரிசு இவருக்கு வழங்கப்பட்டது என்று அறிவுடையோர் கூறுகின்றனர்.

இனி, இவருடைய பாக்கள் சிலவற்றைக் காண்போம்.

## அனயேசு

(1) காலம் மூன்றிடைக் கண்ணிய பதவி
சீலம் பொருந்திடச் சேவித்துப் பின்
சட்டம் தீட்டிய தரையின் எதிர்வு
கூறுதல் முயன்றேன்.

உதயத்தாயுதம் உலவா அழகிது, கடலு
மவ்வணமே —
குதிரைக் கீந்த பெருந்தரை நிலனும்
இக்கலங்கமில்வானம் கருத்திற்றருமே !
இரவி தோன்றிற்றிலது, பெயரலுமின்று.
சத்தியோ பெரிது, எம்மிடை உறையும் !
வைகறைக்கடலோ ஆவியின் திடவுளம்
போன்று தோன்றுமால் —

"வெங்கலச் சருகிடைக்குட்டி பிறந்தது,
நொதுமலாளன் வழியிற் போவான் நம்
கையிடைக் கரும்பழம் பலதந்தகன்றான் ;
பேரியுங் குழலும் எழுந்தன மரத்திடை ;
போற்றுவென் மகளே, அழகுடையாளே !"
என்பதைக்காண்க.

முதற்கண் இதனைக் கருத்துடைய ஒரு பாட்டாக நாம் கருதுதல் வேண்டும். இதனிடை எண்ணக் கருவே உற்று நோக்கவேண்டியது. குட்டி பிறந்ததும், நம்கையில் யாரோ வழிப் போக்கர் பழங்களைத் தந்து விட்டுச் செல்லுகிறார். அவர் பரவி மலருகின்றது. மேள முழக்கமும் குழலும் ஒருங்கொலிக்கின்றன. கரியும் மலருங் கலந்திருக்கின்றன. இதுவே எங்கள் பாதையிற் காண்பது. இவ்வழிப் போக்கன் உலகிலுள்ள எல்லாத் தெருவிலும் இவ்வாறே செல்வான் போலும், ஆதலால் மகளே ! அழகிய உடை தரித்தவளே ! உனக்கு வணக்கம்.

இங்கே கடவுளின் திருவிளையாடலையும் உலக இயற்கையையும் பிராணிகளின் தோற்றத்தையும் புலவர் தம் கருத்தால் வருணிக்கின்றார். புவியில் தோன்றியுள்ள பொருள் எல்லாம் ஞாயிற்றின் வலிமையால் மிக்க பெரிய வலுவினைப் பெற்றுள. ஆவியின் திட்பம் உடம்பிடை எவ்வாறோ, அவ்வாறு மாகடலும் இருக்கின்றது என்கின்றார்.

இன்னுமொரு உரைச்செய்யுள் வருகிறது.

## பட்டினத் தோற்றம்

இதுவே யுலகத்தியற்கை ! யாவையும் நன்றே கூறுவேன்.
கருங்கல்லொடு வெங்கலமும் காலைஞாயிற்றின் கதிர்பட்டுத் தலை காட்டும்
கோயிலும் கடமும் எழுந்தன. முள்ளும் பூண்டும் தீயினில்
அவிந்த, புகையின் கற்றைபோந்தெழுந்து கடலிடை மாலுமி தலைமிசைத்தோற்ற
பெரும்புவி உச்சி உருமாறிற்றென்றனனுல், தரையெரிந்தெழு தீயினை
மலையிழிந்தோடு நீரருவி மடுத்து
வழி செய்யும்.

இதுவே பட்டினத்துதயம்! காலை ஞாயிறு புனிதப் பெயரொடு தோன்றிற்று! மலையடி வாழும் மாந்தர் நாமும் மரப்படிதம்மில் இருந்தழிவோமே? என்கின்றார் புலவர்

இப்பாட்டில் புலவரின் உருவக ஆற்றல் தோன்றுகின்றது. அவருடைய கூரிய அறிவு கட்டில்லாது எழுந்து எங்கும் பறக்கின்றது. மலையிலும் கடலிலும் காற்றிலும் ஆற்றிலும் சென்று, பின்பு உள்ளத்திற்குத் திரும்புகின்றது. இவருடைய உவமானமும் அது அமைக்கும் கருத்தும் எம்மை ஆழ்ந்து யோசிக்கும்படி செய்கின்றன.

இன்னும் ஒன்று :—

"மாகடற் புள்ளிட்ட "ஏகாந்தம்" என்னும் நீலமுட்டை காலை ஞாயிறிற்பொற்பழம் போலுமால். நெருநலுளது ஈண்டு பறந்தது! நாளை விழாவும் குழுமமும் உளவால், வீதியில் தோரணம் நாட்டி சிறு மரம் பெருமரம் வீழ்திய குற்றிகள் குப்பையில், தீந்த நாளையில் விழாவாம்!" என்னும் போது, ஏகாந்தம் இனிமையாகக் காணப்பட்டது, எனினும் அது நிலையில்லாது போகிறது—பின்பு, விழாதோன்றிற்று, சிறுமரம் பெருமரத்தை அகற்றுகின்றது. உலக நிலையாமை காட்டப்படுகின்றது.

இவர்தம் பாடல்களில் உலகத்தை உற்று நோக்கி, அதனைச் சீரிலும் அடியிலும் அமைத்து அழகுபட ஒப்புவிக்கின்றார். இது அவருடைய தியான நிலையில் உருவாகும் முறையிலேயே அமைக்கப்பட்டுள்ளது. அவர் பேச்சே அவருடைய மூச்சு; சொல்லே அவற்றின் உருவம்! அவரைச் சுற்றியுள்ள உலகு அவருடைய சொல்லில் பரிணமித்துத் தோன்றுகின்றது. இத்தோற்றம் ஒரு புதிய உலகினைச் சிருட்டித்துக் காட்டும். இது பழையதிலிருந்து தோன்றிய புதுத் தோற்றம் ஆகும்.

சம்யோன் பேசேயின் பாடல்களில் வரியையோ சொற்களையோ பிரித்தெடுக்க முடியாது. ஒன்று ஒன்றற்கு ஆதாரமாயுளது, ஓசை நயமும் தொனிப்பும் ஒப்பான உட்கருத்துமே விரிவு பெற்றுள. இவருடைய பாக்கள் நம் கண்முன்னே விருத்தியடைகின்றன. இதுவே மொழியிலிருந் தெழுகின்ற சித்திர வேலைப்பாடாகும். இவருக்கு இப்போது வயது 73.

# திருக்குறளும் கிரேக்க ஒழுக்க இயலும்

### வண. தனிநாயக அடிகளார்

திருக்குறளைப் பற்றி எழுதிய மேல்நாட்டு அறிஞர்களுள் டாக்டர் அல்பேட் சுவைட்சர் இணையற்ற முதன்மை வாய்ந்தவராவர். தம்முடைய ''இந்தியச் சிந்தனையும் அதன் வளர்ச்சியும்'' என்ற நூலில் சமணமும், பௌத்தமும் ஏனைய இந்திய சமயங்களும் பெரும்பாலும் உலகத்தையும், வாழ்க்கையையும் மறுத்து அவை மாயையெனுங் குறிக்கோள் உடையன என்கின்றார். எனினும், இந்தியாவில், பண்டைக் காலத்திலும், உலகத்தையும் வாழ்க்கையையும் மாயையன்று, அவை வாய்மையென்று வற்புறுத்தும் எழுச்சிக் கொள்கைகள் பரவி வந்தன என்பதற்குத் திருக்குறளிலிருக்கும் குறட்பாக்களே ஒப்பற்ற சான்றுவன என்றும் வலியுறுத்தியுள்ளார். உலக இலக்கியத்தில் திருக்குறளைப் போன்றதொரு உயர்ந்த ஞானப் பொன்மொழிகளைக் கொண்ட தொகை நூலைக் காண்பது அரிது என்பதும் அவருடைய கருத்து. டாக்டர் சுவைட்சரின் கூற்றின் பொருத்தத்தை உணர்வதற்கு, அன்னாருடைய ஆராய்ச்சி வன்மையையும், ஒழுக்க இயல் இலக்கிய அறிவையும் நன்கு உணர்தல் வேண்டும். ''இந்தியச் சிந்தனையும் அதன் வளர்ச்சியும்'' என்பது அவர் எழுதிய ஒரு நூல். பண்பாட்டின் தத்துவத்தை ஆராயும் வேறிரு நூல்களையும் அவர் யாத்துள்ளார். இவற்றுள் ''பண்பாடும் ஒழுக்கவியலும்'' என்பது ஒன்று. இந்நூலில் ஒழுக்க இயலின் வரலாற்றைக் கூறி, இன்று உலகம் இன்பமாக வாழ்வதற்குச் "செயல்முறையில் உயிருள்ள ஒழுக்க இயல்'' வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார். தம்முடைய நூல்களில், டாக்டர் சுவைட்சர் இந்திய ஒழுக்க இயல் இலக்கியத்தையும், சீன ஒழுக்க இயல் இலக்கியத்தையும் மேலைநாட்டின் பல்வேறு அறிஞர் எழுதிய அறத்துறை நூல்களையும் ஆராய்ந்துள்ளார். இத்தகைய அறிஞர் திருக்குறளைப் பற்றி உயர்ந்த கருத்துக்களைக் கூறுவாரெனின், திருக்குறள் உலகத்தார் அனைவரின் புகழிற்கு உரியது என்பதில் சிறிதேனும் ஐயமில்லை. டாக்டர் சுவைட்சர், திருக்குறளை டாக்டர் கிருவுளினுடைய ஜேர்மன் மொழிபெயர்ப்பின் வழியாகவே அறிந்தவர். அவர் திருக்குறளின் மூலத்தைத் தமிழிற் படித்திருந்தால் இன்னும் அரிய, நுண்ணிய கருத்துக்களைத் தெரிவித்திருப்பார் என்பது திண்ணம்.

### வள்ளுவரும் மேலைநாட்டு அறிஞரும்

இவ்வாறு திருக்குறளை முதல் நூலாகவும், வழி நூலாகவும் கற்ற மேலைநாட்டு அறிஞர் அதனைத் தாமறிந்த மேலைநாட்டு

நீதி நூல்களுடன் சீர்தூக்கிப் பார்த்திருக்கின்றனர். இது காறும் நான் பார்த்த மேலைநாட்டு அறிஞரின் நூல்களில, திருக்குறளைப்பற்றி முதன் முதலில் குறிப்பிட்டவர் போர்த்துக்கீச அறிஞரும், கத்தோலிக்கத் திருமறைச் செல்வருமாகிய யுவான் தே வில்லா கொண்தே. அவர் பதினாறும் நூற்றாண்டில், கோட்டையிலிருந்த பூவனிக்கவாகு (1521—1551) எனும் சிங்கள அரசனுடைய அரண்மனையில் தம் திருமறையைப் பற்றிக் கருத்தரங்கம் நடத்தும்போது தம்முடைய கொள்கைகளுக்குத் திருக்குறள் எனும் நூல் சான்றாக விளங்குவதென விளம்பியுள்ளார். "நீங்கள் மறைவாக ஒளித்திருக்கும் வள்ளுவரின் நூலைப் படித்துப் பார்த்தால் அங்கு நான் கூறும் கிறித்துவச் சத்தியங்களையும் மற்றும் ஏனைய கிறித்துவக் கொள்கைகளையும் காண்பீர்கள்'' என்று சிங்கள மன்னன் முன்னிலையில் இயம்பினர். யூவான் தே வில்லாக் கொண்தே ஈழநாட்டினையும், இந்தியத் தமிழ் நாட்டினையும் நன்கு அறிந்தவர். பதினாறும் நூற்றாண்டின்கண் போர்த்துக்கீசர் திருக்குறளைப்பற்றி அறிந்திருந்தனரென்பதோடு அந்நூற்றாண்டில் சிங்கள மன்னன் அரண்மனையில் தமிழ்மொழி எத்தகைய செல்வாக்கை அடைந்திருந்தது என்பதையும் இம்மேற்கோள் காட்டுகின்றது.

இத்தாலி நாட்டில் பிறந்த பேரறிஞரும், தமிழ்ப் புலவருமான வீரமாமுனிவர் (இறந்தார் 1747) திருக்குறளின் முதலிரு பால்களையும் இலத்தீனில் மொழி பெயர்த்து அப்பாக்களுக்கு இலத்தீன் மொழியில் ஓர் உரையும் எழுதியுள்ளார். மிகவும் பொருத்தமாகத் திருக்குறளை உரோமைத் தத்துவ ஞானி சேனெக்காவின் (கி. மு. 4—கி. பி. 5) ஒழுக்க இயல் நூல்களுடன் ஒப்பிட்டுள்ளார் வீரமாமுனிவர். பத்தொன்பதாம் நூற்றாண்டின்கண் புதுவையில் சில ஆண்டுகள் (1832—1852) வாழ்ந்த ஆரியல் என்னும் பிராஞ்சிய அறிஞர் திருக்குறளை வியந்து போற்றுகின்றார். உலக மக்களினுடைய சிந்தனையில் உயர்ந்த இடம் பெறும் நூல் திருக்குறள் என்றும் அந்நூலின் ஆசிரியர் உலக மாந்தர் அனைவர்க்குமே தம் கருத்துக்களைத் தெரிவிக்கின்றார் என்றும், பூர்ணுப் (Bournoff) எனும் கீழ்த்திசைக் கலைவல்லுநர்க்கு ஒரு கடிதத்தில் எழுதினார்.

இதே நூற்றாண்டில் தே பூவன்தேனே என்பவர் "வள்ளுவரின் காதல் நூல்'' எனுந் தலைப்புடன் காமத்துப்பாலை பிரெஞ்சு மொழியில் வெளியிட்டார். வான்சோன் எனும் அறிஞர் இந்நூலிற்கு எழுதிய முன்னுரையில் காரைக்கால் வாழ்நர் ஒருவரால் திருக்குறளின் மூன்று பால்களும் பிரெஞ்சு மொழியில் பெயர்க்கப்பெற்றதென்றும் அக்கையெழுத்துப் பிரதி 1761 ஆம் ஆண்டு பாரீஸ் தேசிய நூல் நிலையத்தில் வைக்கப்பெற்றதென்றும் கூறியிருக்கின்றார். ஆயினும் இப்பிரதியை இதுகாறும் எவரும் கண்டிலர். பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே டாக்டர் கிரௌவுளும், திருக்குறளை ஜெர்மன் மொழியில்

பெயர்த்துள்ளார். இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஆங்கில மொழியில் திருக்குறளைப் பெயர்த்த பேரறிஞர் போப், கிரேக்கக் குறட்பாக்களுடன் திருக்குறளை ஒப்பிடுதல் கூடுமென்றும் திருக்குறள் காட்டும் சமூக நிலையும், கிரேக்கக் குறட்பாக்கள் காட்டும் சமூக நிலையும் ஒரே தன்மை வாய்ந்த வையென்றும், தம் மொழிபெயர்ப்பின் முகவுரையில் மொழி கின்றனர். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் திருக்குறளினு டைய பான்மையைப் பேரறிஞர் அகுஸ்தீனுடைய நடைக்கு ஒப்பிட்டுத திருவள்ளுவரைத் தமிழ்ச் சுருக்க வசன அறிஞர் (Magister Sententiarum) என்று அழைக்கின்றனர்.

போப்பையர் தம் மொழிபெயர்ப்பு நூலின் குறிப்புக் களில் காட்டும் மேற்கோளாட்சிகளில் பல்வேறு நாட்டு அறி ஞர்களுடைய கருத்துக்கள் தோன்றுகின்றன—

உபநிஷதம், ஹிதோபதேசம், பகவத்கீதை, மனுதருமம், தருமபதம், புத்தரைப்பற்றி ஓல்டன்பேர்க் எழுதிய நூல்; கிரேக்கப் புலவர் ஈஸ்கிலிஸ், அரிஸ்தோத்திலின் ஒழுக்க இயல், இலத்தீன் புலவர் ஹொறஸ், ஒவிட், தெறன்ஸ், வேர்ஜில், அந்தோனீனஸ், கத்துல்லஸ், தியோனிசியுஸ், காத்தோ; இத்தாலியப் புலவர் தாந்தே; ஆங்கிலப் புலவர் சேக்ஸ்பியர், தெனிசன், பிறவுனிங், கீபில், உவேட்ஸ்வெத்; விவிலிய நூலில் பழமொழி, நான்கு நற்செய்தி நூல்கள் முதலியன. போப்பையருக்கு இடமும் காலமும் கிடைத்திருந்தால் இன் னும் விவிலிய நூலிலிருந்தும், கிரேக்க இலத்தீன் புலவர்களி லிருந்தும், சீனத் தத்துவ ஞானிகளிலிருந்தும் பல மேற்கோள் களைக் காட்டியிருந்திருப்பார்.

## ஒழுக்க இயலின் தோற்றம்

உலகில் ஒழுக்க இயல் சிந்தனை படிப்படியாகவே வளர்ச்சி யுற்றது. அச்சிந்தனை பெரும்பாலும் சமூகத்தின் அமைப்பை யும், வளர்ச்சி நிலையையும் ஒட்டியே மாறிக் கொண்டும், செம்மையும் சீரும் அடைந்து கொண்டும் வந்துள்ளது. முன் னொரு காலத்தில் மக்கள் தம் சமூகத்தால் வரையறுக்கப் பெற்ற வாழ்க்கையையே கடைப்பிடித்து அவ்வழக்கினை மீறாது ஒழுகி வந்தனர். இதனை ஒழுக்க இயல் வரலாற்று வல்லுநர் "வழக்கு ஒழுக்கம்" (Customary morality) என்பர். பின்னொரு காலத்தில் மக்கள், வழக்கைக் குருட்டு முறையில் கடைப் பிடியாது இது நன்மை, இது தீமை எனும் உணர்ச்சியுடன் தழுவி வந்தனர். இவ்விரண்டாம் நிலையினை "உணர்ச்சி ஒழுக் கம்" (Conscious morality) என்பர். நன்மை என்பது யாது, கடமை என்பது யாது, நீதி என்பது யாது, இவற்றைக் கடைப்பிடிப்பது எக்காரணங்கள் பற்றி என்று ஆராய முற் படுதல் "பகுத்தறிவு ஒழுக்கம்" (Rational morality) எனும் மூன் ருவது நிலை. இந்நிலையிலேயே மெய்யுணர்வின் வல்லார் ஒழுக்க இயலை மெய்யுணர்வின் ஒரு பகுதியாக ஆராய்ந்தும், தொகுத்தும், வகுத்தும், கற்பித்தும் வருவர்.

படிப்படியாகவே பண்டைத் தமிழ் மக்களும் ஒழுக்கத்தின் உணர்ச்சியில் வளர்ந்திருக்க வேண்டும். முதலில் ஒரு நிலையில் தம் கூட்டுறவு வாழ்க்கை விதித்தவாறு தம் நிலத்திற்கேற்ற பழக்க வழக்கங்களைத் தழுவி வந்தனர். பின்னர் போரிலும், காதலிலும் ஈடுபட்டு வந்த மக்கள், வீரம், புகழ், மானம், வாய்மை, சான்றாண்மை என்று பண்புகளைப் பற்றியும், அப்பண்புகளைக் கொண்ட வீரரைப் பற்றியும் அகவலரும், பாணரும் பாடக்கேட்டு, அப்பண்புகளைப் பேணி வந்தனர். இறுதி நிலையில் புலவரும், சமய சிந்தனையாளரும் அறத்தின் தன்மையையும், அதன் பல துறைகளையும் ஆராய்ந்து நீதி நூல்களையும், செய்யுட்களையும் யாத்தனர். இம்மெய்யுணர்வின் விரிந்த மலர்ந்த காலத்திலேயே வள்ளுவரும் தம் நூலினைத் தொகுத்திருத்தல் வேண்டும்.

## எகிப்தில் ஒழுக்க இயல்

ஒழுக்க இயலைப் பற்றி நாம் அறியும் முதல் ஏடுகள் எகிப்தில் தோன்றியவை. இவ் ஏடுகள் நம்மைக் கிறித்துவுக்கு முன் ஈராயிரத்திற்கும் நாலாயிரத்திற்கும் இடைப்பட்டுள்ள ஆண்டுகளுக்குக் கொண்டு செல்கின்றன. நைல் நதிக் கரையோரங்களில் உள்ள எகிப்து மக்கள் உழவிலும், வணிகத்திலும் ஈடுபட்டு வந்தனர். பல வகுப்புகளாகப் பிரிக்கப்பெற்ற சமூகத்திற்கு, பரவோன் தலைவனாகவும், அவனைத் தொடர்ந்து வலிமை மிக்க சமயக் குரவர்களும், நில உரிமை பெற்ற உயர் குடிமக்களும், அவர்களுக்குப் பணியாற்றும் ஏவலாளரும், அடிமைகளும் வாழ்ந்து வந்தனர். குத்தகை உழு தொழில் முறையையும், விளை பொருளில் ஒரு பகுதியினை அரசனுக்கு வரியாகக் கொடுப்பதையும் மக்கள் மேற்கொண்டனர். எகிப்தின் வணிகக் குத்தகைச் சூழ்நிலையில் நீதி, நேர்மை, உண்மை, அரசப் பற்று எனும் ஒழுக்கக் கொள்கைகள் தோன்றி நிலை பெற்றன. ஆயினும். எகிப்தியர் ஒழுக்க இயலில் பெரு முன்னேற்றம் அடைந்திருக்கவில்லை யென்பதை ஆராய்ச்சியாளர் பலர் ஒப்புக் கொள்ளுகின்றனர்.

ஒழுக்க இயல் பற்றிய இலக்கியம் எகிப்தில் வளர்ச்சியடைந்திருந்த தென்பதற்கு வாழ்க்கையை நடாத்துவதற்கான முறைகளையும், உண்மைகளையும், பழமொழிகளையும் கூறும் அவர்களின் நூல்களே எடுத்துக் காட்டாகின்றன. இந்நூல்களே உலகில் நாம் இதுகாறும் அறிந்த முதல் நூல்களாகவுமிருத்தல் கூடும். இந்நூல்கள் சிறுவரையும், காவலரையும் கற்பிக்க எழுதப் பெற்றன. பிற்காலத்தில் இந்நூல்களைச் சிறார் கல்விப் புத்தகங்களாகப் பயின்று வந்தனர். மாணாக்கர் இப்பாட நூல்களை யெல்லாம் படியெடுத்துப் படித்தனர். எகிப்தில் இத்தகைய கையெழுத்துப் படிகள் பல கண்டெடுக்கப் பெற்றிருக்கின்றன. பிதாகோதேப் (Pita-hotep) என்ற பேரமைச்சர் எழுதிய "கற்பனைகள்" என்ற நூல் அவற்றுள் ஒன்று.

இந்நூலைத் தம் கிழப்பருவத்தில் தம் புதல்வனின் பயிற்சிக்காக எழுதினுர் பிதாகோதேப் (கி. மு. 2860?). இந்நூலிற் கூறப்பெறும் சில விதிகள் பின்வருமாறு.

1. சொல்வன்மை வாய்ந்தவன்தான் எந்த அவையிலும் பேசவல்லவன். எத்தொழிலிலும் பேசுந் தொழில் மிகவும் கடுமையானது.

2. நேர்மையைச் செழிக்க வளர்ப்பாயாக; அதன் மூலம் உன் பிள்ளைகள் வாழ்வார்கள்.

3. நேர்மை வழி நின்றவனே உறுதியாய் வாழ்பவன்.

''மெரிக்கரை (Merikere) அரசருக்கென (கி. மு. 2300) எழுதப் பெற்ற அறிவுரைகள்'' எனும் வேறெரு நூலில் இங்ஙனம் கூறுகின்றுர் நூலாசிரியர்;

1. முன்னேர் வழி நின்று பண்பு அடைந்தவனுக்குத் தான் உண்மை வரும்.

2. தந்தையரையும், முன்னேரையும் கண்டு அறிக; அன்னரின் அறிவுரைகள் எழுத்து வடிவில் உள்ளன,

அமென்ஓமப்பே (Amenomope) என்பவருடைய ''பழமொழிகள்'' கி. மு. ஆயிரத்தில் எழுதப் பெற்றன. இப்பழமொழித் தொகையே உலகில் முதற் பழமொழித் தொகை நூல் என்று கருதுகின்றனர். இந்நூலிலுள்ள இரு பழமொழிகள் கீழ்வருமாறு.

1. துன்பத்தில் அனுபவிக்கப்படும் செல்வத்தினும், இன்பத்திற் சுவைக்கப்படும் கூழ் இனிது.

2. வலிமை படைத்தவரின் நன்கொடைகளைக் கொள்ளற்க; எளியாரை வருத்தாதே.

திருக்குறளிலிருக்கும் ஒரு சில கூற்றுக்களின் கருத்து எகிப்தியரின் இப்பழமொழிகளுடன் ஒப்பிடத்தக்கவை. ஆயினும் திருக்குறள் காட்டும் ஒழுக்க நீதி எகிப்திய ஒழுக்க நீதயினும் பெரும் வளமும் உயர்வும் பெற்றது. எகிப்தியரிடம் மனநலம், ஈகை, ஒப்புரவு, சான்ருண்மை போன்ற ஒழுக்க நீதிக் கலைச் சொற்கள் இருக்கவில்லை. அவர்கள் அருவக் கருத்துக்களைச் செயல் முறையில் உருவமாகவே கண்டனர். ''நடக்கின்றேன்'' எனக் கூறவேண்டிய இடத்து "என் கால்கள் செல்கின்றன'' என்றே கூறினர். ''செம்மை'' யெனுங் கருத்திற்கு ''செம்மையான வழி'' யென்றே சொல்லினர். ''ஈகை'' யெனும் ஒரு சொல் குறிக்கும் பண்பினை "உணவற்றவருக்கு உணவு கொடுத்

தல், தாகமுள்ளவர்க்குத் தண்ணீர் வழங்குதல், உடையற்ற வர்க்கு ஆடை நல்கல்'' என விரித்துப் பல செயல்களின் வழி யாக ஈகையெனும் பண்பின் கருத்தை விளக்கினர்.

எகிப்தியருடைய கொள்கைகளும் ஒழுக்க நூல்களும் சூமர், பாபிலோன், ஈப்று பண்பாடுகளுக்கு அடிப்படையாயிருந்தன.

## கிரேக்க நூல்கள்

கிரேக்க மக்கள் பண்பாட்டிலும், கலைகளிலும் உலகிற் சிறந் தவர்கள். அவர்களிடம் ஒழுக்க இயல் படிப்படியாகவே வளர்ச்சியுற்றது. அவர்களின் காப்பிய காலத்தில் தோன்றிய (கி. மு. 600 க்கு முன்னர்) இலக்கியங்களில் காணப்பெறும் மானம், புகழ், நாட்டுப் பற்று, பணி முதலிய பண்புகளி லிருந்தே அன்னார் தம் நீதியுணர்ச்சியையும், தத்துவத்தையும் பெற்றனர்.

கிரேக்க, உரோம எழுத்தாளர் தம்முடைய ஒழுக்கத் தத்து வங்களைப் பெரும்பாலும் பரந்த, விரிந்த உரைநடை நூல்களா கவே எழுதினர். அத்தகைய நூல்களில் ஒரு பொருளைப் பல கோணங்களிலிருந்து ஆராயவும் எடுத்துக்காட்டுக்கள் கதைகள் முதலியவற்றைக் கொண்டு விளக்கவும் கூடும். ஆனல் திருக் குறள் குறட் பாக்களாக அமைந்திருக்கின்றது. செநக்கா, மார்க்குஸ், அவுரேலியுஸ் போன்ற தத்துவ ஞானிகள் தம் நூல் களின் பல பக்கங்களிலும் பல இடங்களிலும் "நேரத்தையும் காலத்தையும் வீண்போக்காது அறத்திலும் மெய்யுணர்விலும் ஈடுபடுதல் வேண்டும், ஏனெனில் வாழ்க்கை நிலையாதது என்று வற்புறுத்துகின்றனர். வள்ளுவரோ குறட்பாக்களைக் கையாளு வதால் விரித்து விளக்காது ஒரே அடியில் அதே கருத்தைச் சுருங் கச் சொல்லுவர் ;

"வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்" (38)
"அன்றறிவாம் என்னு தறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை". (36)

பல நூல்களில் பிளாத்தோவும் அரிஸ்தோத்திலும் அரசியலைப் பற்றி விரித்துரைக்கின்றனர். திருக்குறளோ அறுநூறு குறட் பாக்களில், ஆயிரத்திருநூறு அடிகளில், அரசியலுக்கும், குடிக ளுக்கும் பொருந்தும் நீதிகளைக் கூறுகின்றது. ஆயினும் திருக் குறள் அக்காலத்துத் தமிழ் நாட்டில் பரவியிருந்த அரசியற் கொள்கைக் கடலைக் கடந்து, அங்குத் தோன்றும் அமிழ்தத்தை மட்டுமே கொடுக்கின்றது. பிளாத்தோ, அரிஸ்தோத்தில் காலத் தில் கிரேக்க நாட்டிற் பரவியிருந்த கொள்கைகளைப் போல் தமிழ் நாட்டிலும் நல்ல அரசைப்பற்றிய கொள்கைகள் வளம் பெற்றிருந்தன என்பதற்குத் திருக்குறளே சான்று. தமிழ் நாட் டில் பரவிய கருத்துக்களைத் தம் சிந்தனையின் கருத்துக்களுடன்

சேர்த்துத்தான் தம் நூலை யாத்திருக்க வேண்டும் திருவள்ளுவர். வள்ளுவர் கூறும் நீதிகளுக்கு மேற்கோள்களும் வரலாற்று ஆதாரங்களும் சங்க இலக்கியங்களில் நிரம்பக் கிடைக்கின்றன.

சொக்கிறதிசிற்கு (கி. மு. 470-399) முன்னிருந்த சொபிஸ்டர் (Sophists) என்போர் ஒழுக்கமென்பது சமூக வாழ்வைத் தருணத்திற்கேற்றவாறு இனிது ஆற்றுப்படுத்தும் ஒரு கருவியென்றே கருதினர். ஒவ்வொருவனும் தன்னுலியன்றவாறு தான் விரும்பிய இனபங்களைத்துய்த்தல் கூடும் என்றும் விளம்பினர். சொக்றத்திஸ் இவர்களின் தருணத்திற்கேற்றவாறு ஒழுக்கம் மாறும் எனும் கொள்கையை ஆதரிக்கவில்லை. இன்பமே ஒழுக்கத்தின் நோக்கமாயினும் அவ்வின்பம் மனத்தில் (பகுத்தறிவின்) இன்பமாக (rational pleasure) இருத்தல் வேண்டும் என்று திருத்திக் கூறினர். அரிஸ்தோத்தில் தன் மகள் நிக்கோமக்சுக்கென எழுதிய ''நிக்கோமக்கீயன் ஒழுக்க இயல்'' என்னும் நூலில் இன்பமே (happiness) ஒழுக்கத்தின் நோக்கமென்றும், மனநலத்துடன் (goodness) ஒன்றி இயங்க வேண்டுமென்றும் மேலும் எழுதியுள்ளார். பகுத்தறிவால் மக்கள் அடையும் இன்பத்தைத் திருக்குறளும் அறத்தின் நோக்கமாக இயம்புகின்றது. செயல்கள் இன்பம் பயப்பன என்றும். இனிது என்றும், உவப்பன என்றும் அமைவதைக் காண்க.

''**அறத்தான்** வருவதே **இன்பம்**''—*39*

''தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் **இனிது**''—*68*

''ஈத்து உவக்கும் **இன்பம்** அறியார்''—*228*

''தாம் **இன்புறுவது** உலகின்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்''—*399*

''**உவப்பத்** தலைக்கூடி உள்ளப் பிரிதல்''—*394*

''இருள்நீங்கி **இன்பம்** பயக்கும்''—*352*

''**இன்பத்துளின்பம்** பயக்கு மிகலென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்''—*854*

இக்குறட்பாக்களில் கூறப்பெறும் இன்பம், ஐம்புலன்கள் பெறும் இன்பம் ஒழிந்த இன்பம். புதல்வர் மெய்தீண்டியதால் வரும் இன்பம், அன்னாரின் சிறுகை அளாவிய கூழை உண்பதால் வரும் இன்பம், அன்னாரின் மழலைச் சொற் கேட்பதால் வரும் இன்பம், இவை புலன்களின் இன்பம். தன் மகனைச் சான்றோனெனக் கேட்ட தாயின் உவகை போன்ற இன்பம் உடலிற்கும் உயிருக்கும் இன்பம். ஆயினும் ''மனநலம்'' (goodness) உள்ளத்தின் உவகை ஆகிய இவையே அறத்தின் நோக்கமும் பயனுமாம்.

''மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்''—457

''மனநலத்தினுகும் மறுமை''—459

அரிஸ்தோத்தில் ஒழுக்க உணர்ச்சியை ஒருவனுக்குள்ள இசையினைச் சுவைக்கும் உணர்ச்சியுடன் ஒப்பிடுகின்ருர். இசையைச் சுவைக்கும் உணர்ச்சி இயல்பாகவே சிலரிடம் மிகுதியாகவும், வேறு சிலரிடம் குறைவாகவும் இருத்தல் கூடும். அவ்வுணர்ச்சியைப் பயிற்சியால் வளர்த்தலுங் கூடும். இசை விரும்புபவன் இசையிலீடுபடுவதுபோல் ஒழுக்கத்தை விரும்புபவன் நல்லொழுக்கத்தில் ஈடுபட்டு அதனுல் வரும் இன்பத்தைப் பெறுகின்ருன். அறச் செயல்களை மீண்டுமீண்டும் செய்வதால் அறப்பயிற்சி இயல்பாகவே வரும் என்பர் அரிஸ்தோத்தில் அவ்வாறே ஒழுக்கமுடையவர் மறந்தும் தீயவை செய்ய முற்படார் என்கின்ருர் திருவள்ளுவர்.

''ஒழுக்கமுடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்''—139

## அறத்தின் இலக்கணம்

இருபக்கமும் சாராமல் எதிர்ப் பண்புகளுக்கு நடுவில் நிற்கும் தன்மையது அறம் என்று விளக்குகின்ருர் அரிஸ்தோத்தில். ஈகை என்பது என்ன? அஃதின் அறம் யாது? ஊதாரித்தன்மைக்கும் உலோபியின் தன்மைக்கும் இடையில் நிற்கும் பண்பே ஈகை. காரணமின்றி வரையாது கொடுத்தல் ஊதாரித்தன்மை; கொடுக்க வேண்டிய காலத்தில் கொடுக்காதிருத்தல் உலோபியின் தன்மை. வேண்டிய மக்களுக்கு—வேண்டிய அளவுக்கு வேண்டிய காலத்தில் வேண்டிய முறையில் கொடுத்தல் ஈகை என்பர் அரிஸ்தோத்தில். ஒழுக்க இயல் வல்லார் அறத்தின் இயல்பை விரித்துக் கூறும்பொழுது எதிர்ப் பண்புகளையும் கூறி, அறச் செயல்களின் நன்மையைத் துலங்குமாறு செய்வர். திருவள்ளுவரும் இங்ஙனம் விலக்கு வகையானும் கூறியே அறத்தின் இயல்பைப் புலப்படுத்துகின்ருர். கல்வியைப்பற்றிக் கூறப் புகுந்தவர் கல்லாமைபற்றியுங் கூறுகின்ருர்; நட்பைப்பற்றிக் கூறுபவர் கூடாநட்பைப்பற்றியுங் கூறுகின்ருர். செங்கோன்மையைப்பற்றிக் கூறுபவர் கொடுங்கோன்மை பற்றியுங் கூறுகின்ருர். செல்வத்தைப் பற்றிக் கூறியவர் நல்குரவு பற்றியுங் கூறுகின்ருர்: பண்புடைமைபற்றிக் கூறியவர், கயமையைப் பற்றியுங் கூறுகின்ருர். மெய்யுணர்வுபற்றிக் கூறுபவர் பேதைமை பற்றியுங் கூறுகின்ருர்.

ஆயினும் திருக்குறள் கடைப்பிடிக்கும் விளக்க முறைக்கும் அரிஸ்தோத்தில் கடைப்பிடிக்கும் விளக்கமுறைக்கும் பெரியதொரு வேற்றுமையுண்டு. மிகுதிக்கும் குறைவிற்கும் நடுவில் அறத்தை நிறுத்துவதால் அறத்தின் உயர்வைக் குறைக்கின்ருர் அரிஸ்தோத்தில் என்று ஒழுக்க இயல் அறிஞர் பலர் குற்றம

கூறியிருக்கின்றனர். அரிஸ்தோத்தில் அறத்திற்கும், மறத்திற்கும் நிறையளவு வேற்றுமையே காட்டுகின்றார் என்பர் கான்ட் (Kant). அறம் என்பது எடுத்துக்கொண்ட பண்பின் உயர்ந்த நிலையாகவே எப்பொழுதும் இருத்தல் வேண்டும். திருக்குறளோ அறப் பண்பிற்கு எல்லை வகுக்காது அறத்தைச் செயலின் நிறைவாகவும் உயர்ந்த நிலையாகவும் காட்டுகின்றது.

''அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?''—71

''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்''—596

''மேல் உலகம் இல்லெனினும் ஈதலே
நன்று''—222

''ஒப்புரவினல்வருங்கேடெனின் அஃது ஒருவன்
விற்றுக்கோள் தக்கது உடைத்து''—220

எனவே இப்பண்புகளுக்கு எல்லை வகுத்தார் அல்லர் திருவள்ளுவர். தன்னை விற்றுக்கூட ஒப்புரவு செய்தல் வேண்டுமென்று அரிஸ்தோத்தில் எந்த இடத்திலேனும் கூறியிருக்கமாட்டார். இவ்வாறே வாய்மை யென்பது மிகைபடக் கூறலுக்கும் தன்னையே இகழ்வதற்கும் இடையில் தோன்றும் பொய்யாமை யெனும் பண்பு என்பர் அரிஸ்தோத்தில். வள்ளுவரோ வாய்மையின் உச்சநிலைமையைக் கூறினரொழிய அஃது இரு எதிர்ப் பண்புகளுக்கு நடுவிலியங்கும் என்று வரைந்தார் அல்லர்.

''பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை''
எல்லா அறமும் தரும்''—296

மீண்டும் பிளாத்தோவைப்பற்றிச் சிந்திப்போம். அரசைப் பற்றிப் பல்லாற்றானும் ஆராய்ந்து அரசின் இயல்பினையும், பண்புகளையும் வரையறுத்துக் கூறியவர் பிளாத்தோ. நாற்பது ஆண்டுகள் கொண்ட அறிஞனாகக் "குடியரசு'' (Republic) எனும் நூலை எழுதினார். எழுபது ஆண்டுகள் கொண்ட முதியோனாகச் "சட்டங்கள்'' (Laws) எனும் பெரும் நூலை யாத்தார். குடியரசு எனும் நூல் பூட்கை அரசு ஒன்றினைத் தீட்டுகின்றது. ஆனால் "சட்டங்கள்'' எனும் நூல் பிளாத்தோ பிற்காலத்தில் பெற்ற அனுபவங்களின் பயனாகக், ''குடியரசு'' எனும் நூலில் காணப்படும் சில குறைகளை நீக்கி நடைமுறையில் ஆற்றுப்படுத்தக்கூடிய அரசு ஒன்றின் திட்டத்தை வகுக்கின்றது.

பிளாத்தோவினுடைய அரசு குலத்தவர் சிலரின் தொகையாட்சி (Oligarchy) தனி மக்கள், தம்முடைய இன்பத்தையும், மன நலத்தையும் ஆளுமையையும் (Personaltty), அரசு அடையும் நலங்களின் வழியாக அடைகின்றனர். பிளாத்தோவும், அரிஸ்தோத்திலும் அரசியலை ஒழுக்க இயலின் பகுதியாகவே கருதுகின்றனர். அரசுத்துறை இயல் (Government) குடிகளிடம் நல்லொ

மூக்கத்தை உண்டாக்க முயல வேண்டும். ஒழுக்கமுள்ள மக்களாக வும், உயர்ந்த செயல்களில் ஈடுபடும் குடிகளாகவும் ஆக்கும் நோக்கம் அரசியல் துறையின் நோக்கம் என்பர் அரிஸ்தோத்தில். ''மக்கள் தமக்கு வேண்டிய அறத்துறை நலன்களை அறியார். எனவே அரசு அவர்களைச் செம்மையான நெறியில் வற்புறுத்தி நடத்துதல் வேண்டும்'' என்பார் பிளாத்தோ. வள்ளுவரோ அரசுக்கேற்ற அறத்தைக் கூறுங்கால், அரசு அறத்தை வலியுறுத்திக் கற்பித்தல் வேண்டும் என்பதுடன் அறமற்ற அரசில் தனிமக்களும் அறத்திற் குன்றுவர் என்றே கருதுகின்றனர்.

''அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்''—*543*

''ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்''—*560*

பிளாத்தோவின் அரசில் மக்களினுடைய தனிவாழ்க்கைக்கு வாய்ப்புகளில்லை. திருக்குறளினுடைய அரசு முடியாட்சி. முடியாட்சியாயினும் தனிமக்களுக்குத் தம்மில்லத்திலும், தொழிலிலும், வாழ்க்கையிலும் வேண்டிய உரிமைகள் உள. அவற்றைக் கொண்டு இல்லறத்தை இனிது நடத்துகின்றனர் மக்கள். பிளாத்தோவின் அரசியலில் மக்களுக்குத் தத்தம் குடிமை நிலைக்கு ஏற்றவாறு தொழில்கள் விதிக்கப்படுகின்றன. காவலர் என்னும் முதல் வகுப்பினர்க்குத் தமக்கெனச் சிறப்பான சொத்துரிமைகளில்லை. மனைவியரும், கணவரும், பிள்ளைகளும் பொதுமையாகவே பொது இல்லங்களில் வாழ்ந்து வருவர். ஆடவர், குறிக்கப்பெற்ற நாட்களிலேயே பெண்டிருடன் கலந்துகொள்வர். உயர்ந்த பண்புகளுள்ள ஆடவர் உயர்ந்த பண்புகள் படைத்த பெண்டிருடன் அரசுகுறித்த காலத்திற் கலந்து, உயர்ந்த பண்பு உள்ள சிறுவரைப் பெற முயல்வர். குழந்தைகள் அரசியற் செவிலிகளால் யார் தம் பெற்றோரென அறியாது அரசியற் பாசறைகளில் வளர்ந்து வருவர். அரசின் சேவையும், பணியும் அரசிற்காக நன்மக்களைப் பெறுவதுமே குடிகளின் இலட்சியமென்று அறைகின்றார் பிளாத்தோ. மக்களைப் பெரும்பாலும் குடிகளாகவே (Citizens) கருதினர் கிரேக்கர். வள்ளுவரோ, மக்களைத் தனி மக்களாகவே (Individuals) கருதி அத்தனிமக்கள் குடிகளின் கடமைகளைப் பொது நலத்திற்காகவும் நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார். திருக்குறள் ஆட்சியில் அரசின் அடிமைகளாக அமைவார் அல்லர் மக்கள். தன்னுடைய அரசு வலிமை பெறுவதற்கு மனை வாழ்க்கையையும், மக்களால் வரும் இன்பத்தையும் அழிக்கின்றார் பிளாத்தோ. காட்டை அமைத்து அது நாடாகும் என்று நம்புகின்றார் பிளாத்தோ. திருவள்ளுவரோ தம் அரசில், களவியல் இன்பம், கற்பியல் இன்பம், மக்கட்பேறு, செல்வம் ஈட்டுதல், விருந்தோம்பல் போன்ற இன்பங்களுக்கும், அறங்களுக்கும் பெரும் இடம் வகுத்துள்ளார். மனையற வாழ்க்கையை அரசியல் கட்டுப்படுத்தக் கூடும் என்று ஒருகாலும் உடன்பட்டிருக்கமாட்டார் வள்ளுவர்.

பிளாத்தோவின் அரசியலில் வகுப்பு வேற்றுமைகள் பல உள. குடிகளை மூன்று வகுப்புகளாகப் பிரிக்கின்றார் பிளாத்தோ. காவலர் வகுப்பு, படைவீரர் வகுப்பு, தொழிலாளர் வகுப்பு. குடிகள் தம் பிறப்பால் இவ்வகுப்புக்களுக்கு உரியவராகின்றனர். பொன்னை (பொற்குணங்களை) த தம்முடலமைப்பில் மிகுதியாகக் கொண்டவர் பொன் வகுப்பிலிருக்கின்றனர் என்றும், வெள்ளியைத் தம் உடலமைப்பிற் கொண்டவர் வெள்ளி வகுப்பிற் சேர்ந்தவர் என்றும், இரும்பையும் பித்தளையையும் தம் உடம்பிற் கொண்டவர் பித்தளை, இரும்பு வகுப்பிற் சேர்ந்தனர் என்றும் வகுப்பு வேற்றுமைக்குச் சமாதானங் கூறமுடியும் என்பர் பிளாத்தோ. சிலவேளைகளில் பித்தளைப் பெற்றோர்களுக்குப் பொன்கலந்த புதல்வன் தோன்றக் கூடும். வெள்ளி வகுப்புப் பெற்றோர்க்குப் பித்தளைப் புதல்வன் இருத்தல் கூடும். அவ்வாறு வகுப்பிற்கு மாறுபட்ட குணங்களுடன் மக்கள் பெற்றோர்க்குத் தோன்றுவாராயின் குணங்களுக்கு ஏற்றவாறு அம்மக்கள் உயர் வகுப்பிற்கு ஏறவும் அல்லது தாழ்ந்த வகுப்பிற்கு இறங்கவும் வேண்டும். இத்தகைய வகுப்பு மாற்றம் அரிதாகவே நிகழக் கூடும். ஆனல் வகுப்புகளிற் பிறந்தவர்கள் பெரும்பாலும் அந்தந்த வகுப்புகளிலேயே வாழ்ந்து தொழிலாற்றி உயிர் துறப்பர். தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குக் குடியுரிமைகளில்லை ; அனனுர்க்குக் கல்வியுரிமைகளும் இல்லை ; ஒழுக்க வாழ்க்கைக்கு உரியவர்களாகவும் கருதப்பட்டிலர். ஒருவன் தன் தொழிலிலிருந்து பொருள் வருவாய் பெறுவானாயின் அவன் அறநெறி வாழ்க்கைக்கு உரியனல்லன் என்பர் அரிஸ்தோத்தில்.

திருக்குறளின் மனப்பான்மையோ உலகளவு பரந்துள்ளது. குடிமையையும், குலத்தையும் போற்றினாராயினும், கல்வியையும், உயர்வையும், ஒழுக்க வாழ்க்கையையும் எவர்க்கும் மறுத்தாரல்லர் திருவள்ளுவர்.

> ''மேலிருந்தும் மேலல்லார் மேலல்லவர் கீழிருந்தும்
> கீழல்லார் கீழல் லவர்.'' — 973

என்று ஒரு சாதிக்கொரு ஒழுக்கம் என்பதை மறுத்தார். மேலும் மக்கள் தாம் பிறந்த குடியை உயரச் செய்தலே அவர்க்கு ஆண்மையும், சிறப்புமென்றும் வரையறுத்தார்.

> ''நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
> வில்லாண்மை யாக்கிக் கொளல்'' — 1026.

வகுப்பு வேற்றுமைகளைக் கடந்து மக்கள் அனைவரும் மேன்மேலும் முன்னேற்றம் அடைதல் கூடுமென்றும், அவர்களுக்கு முன்னோரிடமிருந்தும், சூழ்நிலையிலிருந்தும் குணங்கள் சில வந்தடைந்தாலும், மக்கள் தம் முயற்சியால், அத்தீய குணங்களை அகற்றுதல் கூடுமென்றும் வள்ளுவர் வற்புறுத்துகின்றனர்.

> ''பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
> பொருளல்ல தில்லை பொருள்'' — 751.

எனும்பொழுது பொருளியற்றுறையின் நோக்கமே ஒரு பொருளாகக் கருதப்பெருதவரையும் உயர்நிலைக்கு உயர்த்துவதே யென்று வியப்புத்தரும் இக்காலத்தன்மையுடன் கூறினர் வள்ளுவர்.

பிளாத்தோவும், அரிஸ்தோத்திலும் தம் காலத்துக் கிரேக்க நாட்டில் இருந்த நகர் — அரசுகளை எடுத்துக்காட்டாகக் கொண்டு தம் அரசியல் தத்துவங்களை வரைந்தனர். கிரேக்கரே பண்புடையவர்கள், ஏனையோர் பண்பற்றவர்கள் என்பதும் அவர்களுடைய கொள்கையாக இருந்தது. அரசின் தலைநகர் கடலிலிருந்து ஐந்து கல் அப்பால் ஒதுங்கியிருக்க வேண்டுமென்பதும் அரிஸ்தோத்திலின் கருத்து, துறைமுகத்திற்கு வரும் வேற்றுநாட்டார் தம் தொடர்பால் குடிகளைக் கெடுக்கக்கூடுமென்ற அச்சத்தால். வள்ளுவரோ உலகின் எத்திசையிலும் அமைக்கக்கூடிய அரசினைத் தீட்டி, உலகம் அனைத்தையும் ஒன்றுபடுத்தி, மக்கள் அனைவரையும் ஒரு நாட்டினர் ஆக்குகின்ருர்.

''யாதானும் நாடாமல் ஊராமால் என்ஞெருவன்
சாந்துணையும் கல்லாத வாறு'' — 397.

வாழ்க்கை முழுவதும் கல்வியில் ஈடுபடுவதற்குக் காரணம் கல்வியின் தன்மையுமன்று விரிவுமன்று, ஆழமுமன்று, நலமுமன்று, எண்ணத்தின் பெருமையுமன்று, தொகையுமன்று, ஒழுக்கத்தின் அகலமுமன்று—மக்களும், நாடுகளும், பல பண்புகளும், பல மொழிகளும், ஞாலத்தில் உள்ளதால் இவையனைத்தையும் கற்பதற்கு வாழ்நாள் போதா. நாடுகள் அனைத்தும் என் நாடு, ஊர்கள் அனைத்தும் என் ஊர்கள் எனவே அவற்றைப்பற்றிப் பயிலக்கூடும் கல்விக்கு எல்லையில்லை எனும் "யாதும் ஊரே யாவருங் கேளிர்'' மனப்பான்மையைத் தான் வள்ளுவர் தம் ஒப்பற்ற நூலில் வலியுறுத்துகிருர்.

பிளாத்தோவும், அரிஸ்தோத்திலும் ஒழுக்க இயல்புக்கு அளவுகளையும், சட்டங்களையும் ஆராய்கின்றனர். மக்களின் பகுத்தறிவுதான் அளவா? இன்றேல் சமூகத்தில் வழங்கும் குறிக்கோள்கள் சட்டமா? அறிவைப் பயன்படுத்திக்கொள்ளுகின்ற உயர்ந்த மக்களுடைய ஒழுக்கமும் அவர்கள் கடைப்பிடிக்கும் நற்பண்புகளும் செயல்களும்தாம் ஒழுக்கத்திற்குச் சட்டமாக ஒருவாறு அமையவேண்டுமென்பர் அரிஸ்தோத்தில். அவ்வாறே துளக்கற்ற காட்சியவர், உலகு அறிவார், உரவோர், மாசற்ருேர், மேலோர், கற்று அறிந்தோர், நீரவர் (782) சான்ருேர், நல்லர், தூய்மையாளர் என்பவரின் நூல்களும் செயல்களும்தாம் ஒழுக்கத்திற்குச் சட்டங்களைத் தருவன என்றே வள்ளுவரும் கூறுகின்ருர். அரிஸ்தோத்தில் தனிமகன் தத்தம் சூழ்நிலைக்கும், தத்தம் அரசிற்கும் ஏற்ப ஒழுக்கத்தை உருவாக்கிக் கொள்ளல் கூடுமென்று ஒப்பிட்டு ஒழுக்க முறையை (Relative Ethics) ஆதரிக்கின்ருர். மக்கள் தம் சூழ்நிலைக்கேற்றவாறு ஒழுக்க இயல் மாற்றம் அடையுமெ

னின் ஒழுக்கத்தில் மேன்மையும், முன்னேற்றமும் எய்துவதற்கு இடமுமில்லை. தன் காலத்து மக்களினும் ஒருவன் ஒழுக்கத்தில் சிறப்பதற்குச் செவ்வியுமில்லை. வள்ளுவர் இத்தகைய ஒப்பீட்டு ஒழுக்க முறையை மேற்கொண்டார் அல்லர், எங்கும் என்றும் எவராலும் கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படைக் கொள்கைகளே வள்ளுவர் கூறும் ஒழுக்கக் கொள்கைகள். வள்ளுவர் மக்களின் பூட்கை நிலையையும், அறத்தின் வளத்தையும் இலட்சியங்களையும் தடுத்தும் வரையறுத்தும் அளவையிட்டும் எல்லை வகுத்தும் கூறவில்லை. சான்றோரும் அவர்தாம் எழுதிய நூல்களும் ஒழுக்க இயலுக்கு அடிப்படையாக இருப்பினும், அவற்றை ஆராயாது தழுவுதல் பொருந்தாது.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" (423)

தம் காலத்தில் கற்றறிந்தவரும் மேற்கொண்ட மறச் செயல்கள் சிலவற்றை பிளாத்தோவும், அரிஸ்தோத்திலும் ஆதரிக்கின்றனர். அவர் போற்றும் அரசியலில் அடிமை வாழ்வு இன்றியமையாததாகக் கருதப்பட்டிருந்தது. அவர்தம் அரசில் அடிமைகள் பலரைத் தன் இல்லப்பணியாற்றவும், அரசியல் பணியாற்றவும் உயர்ந்தோர் விதித்திருந்தனர். பத்தாயிரம் குடி உரிமைகள் உள்ள மக்களுக்கு அதென்ஸ் நகர் அரசில் இரு லட்சம் அடிமைகள் பணியாற்றி வந்தனர். மேலும் குருடர்களையும், கூனர்களையும் மெய்வலி குன்றிய குழந்தைகளையும், உடம்பில் குறையுற்றுப்பிறந்த குழவிகளையும் இஞ்ஞானிகள் பொருட்படுத்தினர் அல்லர். மெய்யுறுப்புகளில் குறையுற்ற குழந்தைகளைப் பிறந்த சில நாட்களுக்குப் பின் மலையோரங்களிலும், திறந்த வெளியிலும் எறிந்து கொடிய விலங்குகளுக்கு இரையாகும்படிச் செய்யும் வழக்கத்தினை ஆதரித்தனர். பிளாத்தோ அரிஸ்தோத்தில். வள்ளுவரோ அடிமை வாழ்க்கையை எவ்வாற்றானும் ஆதரித்தார் அல்லர். குறளும் கூனும் மங்கல மக்களாக மாளிகையில் பணியாற்றுவதை **சிலப்பதிகாரத்தில்** காண்கின்றோம். எண்பேரெச்சமாகிய பிறப்பால் பொறியின்மை உறுப்பின்மை உடையோராயினும் அவை பழியாகா. ஆனால் தாம் அறிந்து செய்யும் வினையே குற்றம் காண்பதற்கு இடம் கொடுக்கும்.

"பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை யின்மை பழி" (617)

காவலர் வகுப்பிற்கு உள்ளத்தையும் உடலையும் பயிற்சி செய்யுமாறு ஓய்வுநிலை அளிக்கின்றார் அரிஸ்தோத்தில். காவலர் பொருள் ஈட்டுதல் போன்ற கவலைகளின்றி அரசியலில் ஈடுபடுகின்றனர். இந்த ஓய்வு, ஒழுக்கத்தில் மேம்பாடடைவதற்குக் கொடுக்கப்படவில்லை.

கிரேக்கரின் அரசியல், முன்னேற்றம் காணாது ஒரே நிலையில் இருக்கும் "இயங்கா அரசு" (Static state). வள்ளுவர்

கூறும் அரசியல் உயர்ந்தோர் என்றும் முன்னேற முயலும் "இயங்கும் அரசு" (dynamic state).

பிளாத்தோ அறிவும் அறமும் ஒருபொருட்சொற்கள் எனக் கருதி ஒருவனுக்கு அறத்தைப்பற்றிய அறிவு இருந்தால் அவ் அறத்தைக் கடைப்பிடிப்பன் என்று நினைக்கின்றார். ஆனால் அறம் வேறு ; அறிவு வேறு என்று பிரித்து, அறிவிருப்பினும் மக்கள் அறியும் அறத்தைக் கடைப்பிடிக்கார் என்று வற்புறுத்தினார் வள்ளுவர்.

பிளாத்தோவினுடைய அரசு இவ்வுலகில் அமையினும், அது விண்ணுலகில் இருக்கும் ஓர் அரசின் நிழலும் படியுமாம். உண்மையான உலகம் மேலுலகிலேயே உண்டு. இங்கிருக்கும் உயிர்களும் பொருட்களும் மேலுலகில் இருக்கும் உயிர்களின் பொருட்களின் நிழற்படம். இவ்வுலகில் இருக்கும் ஒவ்வொரு பொருளிற்கும், அவ்வுலகில் குற்றமற்ற முதற்பொருள் மூலப் பொருள் ஒன்றுண்டு. எனவே நிறைவு மேலுலகத்தில் தான் உண்டு. இவ்வுலகில் உள்ளவையெல்லாம் குறைவு படைத்தவை. வள்ளுவரோ மேல் உலகில் இருக்கும் ஓர் அரசினைப் படம் பிடித்து இவ்வுலகில் நிறுவ முயலவில்லை. திருக்குறளின் அரசு இவ்வுலகிற்கே உரிய அரசு. திருக்குறளின் அரசினுடைய நிறைவினை இவ்வுலகிலேயே மாதர் அடைகின்றனர்.

கிரேக்க தத்துவ ஞானிகளின் நூல்களை வள்ளுவர் நூலுடன் ஒப்பிடுங்கால், கிரேக்க தத்துவ ஞானிகள் மெய்யுணர்வு வல்லுநர்போல் பொருளை ஆராய்கின்றனர். திருவள்ளுவரோ ஒழுக்க இயல் வல்லுநர்போல் ஆராய்ந்து ஆசான்போல் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய அறங்களைக் கூறுகின்றார். ஆயினும் திருக்குறள் காட்டும் ஒழுக்க இயலுக்கும் கிரேக்க நூல்கள் காட்டும் மெய்யுணர்வு போன்ற வளம்பெற்ற மெய்யுணர்வே அடிப்படையாக இருந்திருத்தல் வேண்டும்.

---

அரசன் அச்சகம், கொழும்பு 2

# எதிர்பாருங்கள்

இப்பொழுது தயாராகிக்கொண்டிருக்கும்

ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்

# தமிழ் வெளியீடுகள்

## மகாவமிசம்

இலங்கை வரலாற்றைப்பற்றிய பூர்வீக பாளி நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு.

## பூவைவிடு தூது

15ம் நூற்றுண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற சிங்களக் கவிஞர் தொட்டகமுவே ஸ்ரீராகுல தேரரால் இயற்றப்பட்ட ''ஸலலிஹினி சந்தேசம்'' தமிழ்க் கவிதையில் வெளிவருகிறது.

## முகியித்தீன் புராணம்

2000க்கு அதிகமான செய்யுட்களைக் கொண்ட இந்நூல் அரும்பத விளக்கங்களுடன் புதிய பதிப்பாகப் பிரசுரிக்கப்படுகிறது.

## கிராமப் பிறழ்வு

தலைசிறந்த சிங்கள நாவலாசிரியர் மார்டின் விக்கிரமசிங்காவின் பிரசித்திபெற்ற ''கம்பெரலிய'' என்ற சிங்கள நாவலின் மொழிபெயர்ப்பு.

விரைவில் இந்நூல்கள் வெளிவரும்